# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 06 வெள்ளிக்கிழமை (20.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 175




03 திணறல் வெற்றி



18 வலி.வடக்கில் மீளக்குடியமர்வு



24 உரிமைகளை பெற்றுத் தருவது எமது பொறுப்பு



25 என்றைக்கும் தலைவர்

# இந்திய மூவரணி இலங்கை வராது

## பீரிஸின் பயணத்துடன் பேச்சு விவகாரம் முடிந்தது

கொழும்பு, மே 20

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கை வரவிருந்த இந்திய மூவரணியின் பயணம் நிறுத்தப்பட்டு விட்டதாகப் புதுடில்லி ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்த வார ஆரம்பத்தில் இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணத்தை அடுத்து மூவரணியின் பயணம் கைவிடப்பட்டுள்ளது. மூவரணியில் இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், பாதுகாப்பு அமைச்சுச் செயலர் பிரதீப்குமார் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இலங்கை இனப்பிரச்சினை தீர்வு மற்றும் நல்லுறவு ஆகியன தொடர்பாக பேச்சு நடத்துவதற்காக மாத இறுதியில் இந்த மூவரணி கொழும்புவர இருந்தது.

இனப் பிரச்சினை தீர்வு, அவசர காலச் (29 ஆம் பக்கம் பார்க்க)





யாழ். திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் நேற்று நடைபெற்ற முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளின் நினைவு நிகழ்வில் ஏற்றப்பட்ட ஈகச்சுடர்கள் இவை. (த-15)

## பொன்சேகா சுகயீனம்: வெள்ளைக்கொடி வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மே 20

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சுகயீனமடைந்ததன் காரணமாக வெள்ளைக்கொடி விவகார வழக்கு எதிர்வரும் 23ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு நேற்று மேல் நீதிமன்ற நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தர, எச்.என். பி.பி. வராவெவ, (04 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் தியாகங்கள், இழப்புக்கள் சமாதானத்துக்கு அத்திபாரமாக அமையட்டும்

### 'உறவுகளை நினைத்து' நிகழ்வில் பேராயர் ஜெபநேசன்

யாழ்ப்பாணம், மே 20

தமிழ் மக்கள் இதுவரை செய்த தியாகங்கள், இழப்புக்கள் சமாதானத்துக்கான வழிமுறைக்கு அத்திபாரமாக அமைய வேண்டும் எனத் தென்னிந்தியத் திருச் சபையின் இளைப்பாறிய பேராயர் அருட் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களின் நினைவாக 'உறவுகளை நினைத்து' என்னும் நிகழ்வு திருமறைக் கலாமன்ற அழகியற் கல்லூரி மண்டபத்தில் நேற்று உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

இதில் பிரதான ஈகச் சுடரினை இளைப்பாறிய பேராயர் எஸ்.ஜெபநேசன் அடிகளார் ஏற்றி வைத்தார். அடுத்து ஈகச்சுடரினை சங்கீதபாட முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.கே.நடராஜன் ஏற்றிவைத்தார். அதன் பின்னர் பொதுமக்கள், (29 ஆம் பக்கம் பார்க்க)

### மீசாலை குடும்பப் பெண் கொலை:

## சந்தேக நபர்கள் இருவர் அடையாளம் காணப்பட்டனர்

தென்மராட்சி, மே.20

கடந்த மார்ச் மாதம் மீசாலைப் பகுதியில் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட பெண்ணின் மரணம் தொடர்பான மரண விசாரணையும் அடையாள அணி வகுப்பும் நேற்றுச் சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றன.

இதில் ஐந்தாம், ஆறாம் சந்தேக நபர்களைச் சாட்சி அடையாளம் காட்டினார். வழக்கின் நான்காம் சந்தேகநபர் சிவகுமார் பிரசன்னா, ஐந்தாம் சந்தேக நபர் பாலகிஷ்ணன் மோகன பிரசாத், ஆறாம் சந்தேக நபர் நவரத்தினம் கோபிகிருஸ்ணா (29 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகள் மத்தியில் சோதனை

### கும்புறுப்பிட்டியில் முழு நாளும் நடந்தது

திருகோணமலை , மே.20

திருகோணமலை நகரில் இருந்து 16 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கடற்கரைச் சிகரமான கும்புறுப்பிட்டியில் படையினர் தீவிர தேடுதல் நடத்தினர். இந்தியாவில் இருந்து திரும்பிய மக்களே இந்தக் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

கிழக்கில் கடும் போர் வெடித்ததை தொடர்ந்து இடம்பெயர்ந்து தமிழகம் சென்ற அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களில் 400 குடும்பங்களைச் சேர்ந்தோர் மீளத் திரும்பியுள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் திடீரென கிராமத்துக்குள் புகுந்த படையினரும் பொலிஸாரும் (29 ஆம் பக்கம் பார்க்க)

## மாத இறுதிக்குள் வடமராட்சி கிழக்கில் எஞ்சிய இடங்களிலும் மீள் குடியமர்வு

### நம்பிக்கை தெரிவிக்கிறார் தளபதி



யாழ்ப்பாணம், மே 20

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த சகலரும் இந்த மாத இறுதிக்குள் மீள்குடியமர்த்தப்பட்டு விடுவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார் யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாக கேட்டபோதே அவர் இப்படிக் கூறினார்.

''வடமராட்சி கிழக்கில் இதுவரை மீள்குடியமர்வுக்கு அனுமதி வழங்கப்படாதுள்ள பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்த அனுமதி கிடைத்துள்ளது. மாத இறுதிக்குள் அந்தப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்த முடியும் என நம்புகின்றோம்'' என்றார் கட்டளைத் தளபதி.

கீரிமலை, வலித்தூண்டல் கடலில் அப்பகுதி மக்கள் கடற்றொழிலில் ஈடுபட அனுமதிக்குமாறு தேசிய பாதுகாப்புச் சபையிடம் கோரிக்கை ஒன்றையும் தான் சமர்ப்பித்தார் என்றும் அவர் கூறினார்.

'கடற்படையினருடன் இணைந்து அதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து (29 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.அறிக்கை தவறானது என்கிறார் அமைச்சர் கருணா

கொழும்பு, மே 20

ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 888 பேர் இன்னும் மீள்குடியமர்த்தப்படவில்லை என ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை தவறானது என மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா) தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:- (04 ஆம் பக்கம் பார்க்க)

## 224 கைதிகள் உண்ணாவிரதம்

கொழும்பு, மே 20

கொழும்பு, வெலிக்கடை சிறைச்சாலையில் 224 கைதிகள் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களில் 7 கைதிகள் சிறைச்சாலையின் கூரை மீது ஏறி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

- இப்படி சிறைச்சாலைகள் மறுசீரமைப்புமற்றும் புனர்வாழ்வு (29 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வென்றது கொல்கத்தா வீழ்ந்தது புனே



கம்பீர்

-டிலீப்-

கொல்கத்தா அணிக்கு வாழ்வா ? சாவா ? போராட்டம். புனே பொறுப்பில்லா ஆட்டம். வெற்றி ரசம் பருகியது கொல்கத்தா.

இறுதிக் கட்டத்தை தொடுகின்றது ஐ.பி.எல் ஆட்டங்கள். நடந்தது தொடரின் 65ஆவது ஆட்டம். மோதிக்கொண்டது கொல்கத்தா - புனே அணிகள். நடந்தது நாணயச் சுழற்ச்சி. வென்றது கம்பீரின் கொல்கத்தா. பணித்தது யுவராஜின் புனேக்கு, துடுப்பெடுத்தாட.

நுழைந்தனர் ரைடர் - பான்டி. லீ தொடக்கினார் கொல்கத்தா பந்து வீச்சை. பான்டி அடுத்தடுத்து அடித்தார் இரண்டு பவுண்டரிகள். அதிரடி முதலாவது ஓவரில் ஆரம்பம். யூசுப் வீசினார் இரண்டாவது ஓவர். வீழ்ந்தது ரைடரின் விக்கெட். வந்தார் பேக்குசன். இணைந்தார் பான்டியுடன். குறைந்தது புனேயின் ஓட்ட வேகம்.

ஆக்கிரமித்தது கொல்கத்தாவின் சுழல் பந்துகள். திணறத் தொடங்கினர் புனே வீரர்கள். இக்பால் அப்துல்லா சுழலில் வீசப்பட்டது நான்காவது ஓவர். வீழ்ந்தது பான்டியின் விக்கெட். அணிக்காய் பெற்றுக் கொடுத்தது 16 ஓட்டங்கள். வீழ்ந்த விக்கெட்டுக்காய் நுழைந்தார் கங்குலி. மீட்சி அவராலும் இல்லை. அதிரடிகள் அடங்கின. சோர்ந்தனர் சொந்த மண்ணில் புனே ரசிகர்கள். எட்டிப் பார்த்தது பவுண்டரி இடையிடையே மட்டும். சகிப் அல் ஹசன் பந்து வீச்சு. நடந்து கொண்டிருந்தது ஒன்பதாவது ஓவர். ஓட்டவேகம் போதாது. அதிரடிக்காய் அகலக்கால் வைத்து முன்னேறினார். தவறியது பந்து. சென்றது விக்கெட் காப்பாளர் கைகளுக்கு. தவறாது தட்டப்பட்டது விக்கெட். 19 பந்துகளில் 16 ஓட்டங்கள் அணிக்கான பங்களிப்பு.

அமைதியாயிருந்தது அரங்கு. பத்தாவது ஓவர் வீசினார் அப்துல்லா. பறந்தது ஆட்டத்தின் முதலாவது சிக்ஸர். அடித்தவர் கங்குலி. மீண்டும் அடக்கப்பட்டது அதிரடி. வீழ்த்தப்பட்டது கங்குலி விக்கெட். 18 ஓட்டங்களுடன் பவிலியனுக்குத் திருப்பி விட்டார் சகிப் அல் ஹசன். உத்தப்பா, யுவராஜ் அணிக்காய் போராட்டம் மத்திய வரிசையில். 79 ஓட்டங்கள் பெற்றது அணி. சரிக்கப்பட்டது உத்தப்பா விக்கெட். 12 ஓட்டங்களுடன் விடைபெற்றார் உத்தப்பா.

யுவராஜ் - ரனா முடிவுக்காய் போராட்டம். 34 ஓட்டங்கள் பகிரப்பட்டது ஆறாவது விக்கெட்டுக்காக. இறுதி ஓவரில் வீழ்ந்தது இரண்டு விக்கெட்டுக்கள். பாலாஜி சரித்தார் அந்த இரு விக்கெட்டுக்களையும். யூவி 26 பந்துகளில் 24 ஓட்டங்கள். 16 பந்துகளில் 18 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்தார் ரனா. முடிவடைந்தது முதல் இன்னிங்ஸ் ஆட்டம். 20 ஓவர்களில் இழந்தது 7 விக்கெட்டுக்கள். பெற்றது 118 ஓட்டங்கள். பந்து வீச்சில் யூசுப் எடுத்தார் 2 விக்கெட்டுக்கள். கொடுத்தார் 23 ஓட்டங்கள். வீசினார் 4 ஓவர்கள். பாலாஜி வீசியது ஒரு ஓவர். விட்டுக்கொடுத்தது 7 ஓட்டங்கள். சரித்தது 2 விக்கெட்டுக்கள். ஈயை விரட்டும் இலக்கு இது கொல்கத்தாவுக்கு. கம்பீர் - கோசுவாமி தொடக்கினர் ஆட்டத்தை. தோமஸ் வீசினார் முதலாவது ஓவர். ஆட்டத்தின் மூன்றாவது பந்தில் அடிக்கப்பட்டது கோசுவாமியால் பவுண்டரி. அடுத்த பந்தில் சரிக்கப்பட்டது அவரது விக்கெட். திவாரி நுழைந்த வேகத்தில் அதிரடி. போக போக அடங்கியது கொல்கத்தாவின் ஆட்டமும்.

ஐந்தாவது ஓவர் அதிரடி தொடங்கினார் கம்பீர். அடுத்தடுத்து வெளியேறியது பவுண்ட ரிகள். 42 பந்துகளில் பூர்த்தியானது கொல்கத்தாவின் அரைச்சதம். இரண்டாவது விக்கெட் இணைப்பாய் 46 ஓட்டங்கள் பகிர்வு. வீழ்ந்தது திவாரியின் விக்கெட். 24 பந்துகள் 24 ஓட்டம் திவாரி வெளியேற்றம். யூசுப் வந்தார் களத்துக்கு. வேகம் எடுத்தது ஆட்டம். 80 பந்துகளில் எட்டப்பட்டது அணியின் சதம். அதிரடி ஆட்டத்தால் 43 பந்துகளில் கம்பீர் தொட்டார் அரைச்சதம். வெற்றிக்குத் தேவை இரண்டு ஓட்டங்கள். வீழ்ந்தார் யூசுப். 25 பந்துகளில் பெற்றார் 29 ஓட்டங்கள். 20 பந்துகள் மீதமிருந்தது. கைவசம் 7 விக்கெட்டுக்கள் இருப்பு. வந்தது கொல்கத்தாவுக்கு வெற்றி. சகல துறை ஆட்டத்தில் கலக்கிய பதான் கையில் ஆட்டநாயகன் விருது.

## ஸ்டுவட் கிளார்க் ஓய்வு

ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவட் கிளார்க் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து முறைப்படி ஓய்வை அறிவித்தார்.

ஆஸ்திரேலிய அணியின் சிறந்த வேகப்பந்து வீச்சாளராக வலம் வந்தவர் ஸ்டுவட் கிளார்க் (வயது - 35). இதுவரை இவர் 24 டெஸ்ட் போட்டிகளில் (94 விக்கெட்டுக்களையும்), 39 ஒரு நாள் போட்டிகளில் (53 விக்கெட்டுக்களையும்) மற்றும் 9 சர்வதேச 'ரி - 20' போட்டிகளில் (13 விக்கெட்டுக்களையும்)பெற்றுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். ஆஸ்திரேலியாவில் இடம்பெறும் 'சிட்னி சிக்சர்ஸ் பிக் போஷ் லீக்'' தொடரில் விளையாடப் போவதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஸ்டுவட் கிளார்க் கூறுகையில், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகின்றேன். இருப்பினும் நான் விரும்பும் வரை கழக அணிகளுக்காக விளையாட உள்ளேன். இதன் மூலம் ஆஸ்திரேலிய அணிக்கு சிறந்த இளம் வீரர்களை உருவாக்க முடியும் என்று நம்புகின்றேன். இந்த ஆண்டு இந்தியாவில் நடக்கவுள்ள சம்பியன்ஸ் லீக் 'ரி - 20' தொடரில் நியூ சவுத் வேல்ஸ் அணிக்காக விளையாட உள்ளேன் என்று ஸ்டுவட் கிளார்க் தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டம்

- மும்பை இந்தியன்ஸ் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- மார்ஷ் – பஞ்சாப் (13 ஆட்டங்கள் 491 ஓட்டங்கள்)
- வல்த்தாட்டி – பஞ்சாப் (13 ஆட்டங்கள் 458 ஓட்டங்கள்)
- கெயில் – பெங்களூர் (8 ஆட்டங்கள் 436 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை (12 ஆட்டங்கள் 27 விக்கெட்டுக்கள்)
- முனாப் பட்டேல் – மும்பை (12 ஆட்டங்கள் 17 விக்கெட்டுக்கள்)
- ராகுல் சர்மா – புனே (13 ஆட்டங்கள் 16 விக்கெட்டுக்கள்)

INDIAN PREMIER LEAGUE DLF

## DLF INDIAN PREMIER LEAGUE அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| சென்னை சூப்ப கிங்ஸ் | 13 | 09 | 04 | 0 | 0 | + 0.544 | 18 |
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 13 | 08 | 04 | 0 | 1 | + 0.283 | 17 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 13 | 08 | 05 | 0 | 0 | + 0.476 | 16 |
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 08 | 04 | 0 | 0 | + 0.245 | 16 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 13 | 07 | 06 | 0 | 0 | + 0.271 | 14 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 14 | 06 | 08 | 0 | 0 | - 0.214 | 12 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 13 | 05 | 07 | 0 | 1 | - 0.969 | 11 |
| டெக்கான் சார்ஜஸ் | 13 | 05 | 08 | 0 | 0 | - 0.080 | 10 |
| புனே வரியர்ஸ் | 13 | 04 | 09 | 0 | 0 | - 0.134 | 08 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 13 | 04 | 09 | 0 | 0 | - 0.448 | 08 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி எங்களுக்குத் தான்

## - டிராவிட்



மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான தொடரில் இந்தியா சிறப்பாக விளையாடி வெற்றி பெறும் என்று முன்னாள் அணித்தலைவர் ..குல் ராவிட் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த மாத இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் செல்லும் இந்திய அணி ஒரு ரி-20 , 5 ஒரு நாள் ஆட்டம் மற்றும் 3 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட உள்ளது. முதலில் ரி-20 மற்றும் ஒரு நாள் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. கடந்த 2006 ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகள் சென்ற ராவிட் தலைமையிலான இந்திய அணி, 35 ஆண்டுகளில் முதல் முறையாக டெஸ்ட் தொடரை வென்று சாதனை படைத்தது. அதே போல, இந்த முறையும் இந்தியா வெற்றி பெறும் என்று ராவிட் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது குறித்து, மும்பையில் அவர் நேற்று முன்தினம் கூறியதாவது:

கடந்த முறை மேற்கிந்தியத்தீவுகளில் எனது தலைமையிலான இந்திய அணி முதல் முறையாக டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது. இந்த முறை அதை விடவும் சிறப்பாக வெற்றிகளைக் குவிப்போம் என்று நம்புகிறேன். முழுப் பலம் வாய்ந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி களமிறங்கினால், இந்தத் தொடர் மிகவும் சவாலாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அவர் கள் அணியை அறிவித்த பிறகுதான் அதற்கேற்ப வியூகம் வகுக்க முடியும். இந்திய அணியில் அனுபவம் வாய்ந்த வீரர்கள் அதிகம் உள்ளதால், டெஸ்ட் தொடரில் எத்தகைய சவாலையும் சமாளிப்போம்.

இவ்வாறு ராவிட் கூறினார்.(15)

## தொடர் வெற்றி; டோனி பெருமிதம்

சேப்பாக்கம் மைதானத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் தொடர்ந்து 7 வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

ஏற்கனவே கொல்கத்தா நைட் ரைடர்ஸ், பெங்களூர், டெக்கான், புனே, ராஜஸ்தான், டெல்லி அணிகளை இங்கு வென்று இருந்தது.

இந்த வெற்றி குறித்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணித்தலைவர் டோனி, சேப்பாக்கம் மைதானத்தில் தொடர்ந்து 7 ஆட்டத்திலும் வெற்றி பெற்றுச் சாதனை படைத்து உள்ளோம். இது உண்மையிலேயே பெருமை அளிக்கிறது. இது மிகப்பெரிய சாதனையாகும். இந்த ஆட்டங்கள் அனைத்திலும் நாங்கள் எளிதாக வெற்றி பெற்றதாக கருத வேண்டாம். சில ஆட்டங்களில் கடுமையாக போராடித்தான் வென்றோம்.

அடுத்த சுற்றில் மிகப்பெரிய ஆட்டத்துக்கு நாங்கள் தயாராகி விட்டோம். எங்களது பந்துவீச்சு, களத்தடுப்பு சிறப்பாக இருந்தது. சுழற்பந்து வீச்சாளர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் பெற்று இருந்தது.

சென்னை சூப்பர் கிங்ஸ் கடைசி லீக் ஆட்டத்தில் பெங்களூர் அணியை 24 ஆம் திகதி எதிர்கொள்கின்றது..(15)



## சச்சினின் வாழ்த்து என்னை சாதனையாளனாக்கியது

சச்சின் டெண்டுல்கரின் பாராட்டைப் பெற்றதையே எனது வாழ்நாளில் மிகப்பெரிய சாதனையாக நினைக்கி றேன் என்று கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தொடக்க ஆட்டக்காரர் போல் வல்த் தாட்டி நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

இப்போது நடைபெற்று வரும் 4 ஆவது ஐ.பி.எல் போட்டியில் வல்த் தாட்டி, 13 ஆட்டங்களில் 458 ஓட்டங்கள் குவித்துள்ளார். அதிகபட்சஓட்டங்கள் குவித்த வீரரில் பஞ்சாப் அணியின் ஷோன் மார்ஸ், 491 ஓட்டங்களுடன் முதலிடத்தில் உள்ளார். சச்சின் 12 ஆட்டங்களில் பங்கேற்று 408 ஓட்டங்கள் எடுத்துள்ளார். வல்த் தாட்டி சிறப்பாக ஆடிவருவது குறித்து சச்சின் அவருக்கு பாராட்டுத் தெரிவித்திருந்தார்.

இது குறித்து வல்தாட்டி கூறியுள்ளதாவது:

சச்சின் டெண்டுல்கர் மீது நான் மிக வும் மதிப்பும், மரியாதையும் வைத்துள் ளேன். அவர் மீது உள்ள பிரமிப்பு இப்போது வரை என்னை விட்டு அகலவில்லை. அப் படிப்பட்டவர் என்னைப் பாராட்டியிருப் பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. அவரது பாராட்டைப் பெற்றதையே எனது வாழ்நாள் சாதனையாகக் கருதுகிறேன்.

மும்பையில் நடைபெற்ற ஆட்டத்துக்குபின் அவர் என்னிடம் பேசினார். அப்போது நான் சிறப்பாக ஆடி வருவதாக பாராட்டுத் தெரிவித்தார். அப்போது எனக்கு மிகப்பெரிய விருது வழங்கப்பட்டதாக உணர்ந்தேன் - என்றார்.

வீரேந்திர சேவாக், ஆஸ்திரேலியாவின் மத்யூ ஹைடன் ஆகியோரும் என்னை மிகவும் கவர்ந்த வீரர்கள். இப்போது உள்ளவர்களில் சேவாக்தான் சிறப்பான அதிரடி ஆட்டக்காரர். அவரது ஆட்டத்தை நான் பலமுறை பார்ப்பேன், ஆனால் அதே போன்று ஆட முற்பட்டது இல்லை. அவரைப் போல விளையாடவும் முடியாது. எனது பாணியிலேயே தொடர்ந்து ஆட விரும்புகிறேன். ஐ.பி.எல் போட்டி எனக்கு சிறப்பான வாய்ப்பை அளித்

## போர்ட்டோ சம்பியன்

டப்ளின் நகரில் நடந்த ஐரோப்பிய லீக் கால்பந்து போட்டியில் போர்ட்டோ அணி 1-0 கோல் கணக்கில் பிரகா அணியை வென்று சம்பியன் ஆனது.

பிரகா அணியின் மாற்று ஆட்டக்காரர் மெசோரோ ஒரு கோல் அடித்து சமநிலையை ஏற்படுத்தும் வாய்ப்பைத் தவறவிட்டார். அந்த வாய்ப்பைத்தவிர போர்ட்டோ அணி வேறு எந்த சவால்களையும் பெறவில்லை.

போர்ட்டோ அணியின் 33 வயது மேலாளர் அண்ட்ரோ வில்லாஸ் போஸ் ஐரோப்பிய லீக் சம்பியன் பரிசு கிண்ணத்தை வென்ற மகிழ்ச்சியில் திளைத்தார். இருப்பினும் தனது அணி வீரர்கள் முழுத் திறனை ஆடுகளத்தில் காட்டவில்லை என்றும் சிறிது வருத்தப்பட்டார் போர்ட்டோ அணியின் தலைவர் ஹெல்டன்.

தனது 33 ஆவது பிறந்த நாளை கொண்டாடும் தருணத்தில் வெற்றி கிடைத்துள்ளது. இந்த பரிசுக் கிண்ணம் எனது பிறந்த நாளின் அற்புதமான பரிசு என்று அவர் தெரிவித்தார். பிரகா அணியினர் கடுமையாக ஆடினர் என்றும் அவர் கூறினார்.

போர்ட்டோ அணிக்கு ஆட்டத்தின் முதல் பாதியில் பால்கோ தலையால் அடித்த கோலே வெற்றி தேடித் தந்தது. (15)



## திணறல் வெற்றி

உலகின் முதல்தர வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாகி பிரஸ்சல்ஸ் திறந்த ரென்னிஸ் ஆட்டத்தில் திணறியே வெற்றி பெற்றார்.

அவர் அமெரிக்காவைச் சேர்ந்த உலக அரங்கில் 85 ஆவது இடத்தில் உள்ள வார்வரா லெப்சென்கோவை 6-4, 7-6 (7-5) செட் கணக்கில் வென்றார். இந்த வெற்றி மூலம் கரோலின் கால் இறுதிக்கு முன்னேறினார்.

அடுத்த ஆட்டத்தில் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த யானினா விக்மேயருடன் ஆடுகிறார். இந்த சீசனில் கரோலின் களிமண் ஆடுகளத்தில் தடுமாற்றத்துடனேயே ஆடி வருகிறார். நடப்பு பிரான்ஸ் திறந்த சம்பியனான இத்தாலியின் பிரான்சஸ்சா ஷியாவோன் 6-4, 6-4 செட் கணக்கில் அமெரிக்காவின் இரினா பால்கோனியை தோற்கடித்தா... சேர்பியா நா... 4 ஆவது நிலை வீராங்கனை ஜெலினா ஜான்கோவிக் 3-6, 6-3, 6-3 செட் கணக்கில் சுவீடனின் சேர்பியா அர்விட்ச ... தோற்றார்.

## இலங்கை வீரர்கள் கண்காணிக்கப்படுகிறார்கள்

இலங்கை கிரிக்கெட் அணி 3 டெஸ்ட், ஒரு 20 ஓவர் போட்டி மற்றும் 5 ஒரு நாள் போட்டிகளில் விளையாடுவதற்காக இங்கிலாந்து சென்றுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி தொடங்குகின்றது.

இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது சூதாட்டப் புகார் கூறப்பட்டுள்ளது. இதன் காரணமாக வீரர்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்படுவார்கள் என்று அணியின் மேலாளர் டென்னிகூன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறும்போது அணிக்கு வெளியே இருந்து இலங்கை வீரர்களைப் பாதுகாக்க வேண்டியுள்ளது. வீரர்கள் யாருடன் பேசுகிறார்கள் என்பதை மிகவும் கவனமாகப் பார்க்க வேண்டியுள்ளது. வீரர்களை நான் மிகவும் நெருக்கமாகக் கண்காணித்து வருகிறேன் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமைப் பொறுப்பை நிறைவேற்றாத விரிவுரையாளருக்கு மே மாதச் சம்பளம் 'கட்'

## சுற்று நிருபம் மூலம் அறிவிப்பு

கொழும்பு, மே.20

தமது கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாத விரிவுரையாளருக்கு மே மாதத்துக்கான சம்பளங்களை வழங்க வேண்டாம் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களுக்கு சுற்று நிருபம் ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

ஒரு சில பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் தொழிற் சங்க நடவடிக்கையில் பேரில் பிரிவுத் தலைவர் பதவிகளி லிருந்து நீங்கியுள்ளனர். விரிவுரை கள் நடத்துவதையும் நிறுத்தி யுள்ளனர்.

எனவே அவர்களுக்கான மே மாதச் சம்பளங்களை வழங்க வேண்டாம் என்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு அச்சுற்று நிருபத்தின் மூலம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாகப் பல்கலைக் கழக மானியங்கள் ஆனணக் குழுவின் தலைவர் பேராசியர் காமினி சமரநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்:

அரச ஊழியர்கள் அல்லது அரசிடமிருந்து சம்பளங்களைப் பெறுவோர் நிறுவன ஒழுங்குச் சட்டவிதிகளுக்குக் கீழ்பணிந்து செயலாற்ற வேண்டியுள்ளது என்று கூறினார்.

நிறுவன ஒழுங்கு சட்டவிதிகளுக்கு அமைவாகச் கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றும் ஊழியர்கள் மாத்திரமே சம்பளங்களைப் பெறமுடியும் எனவே அந்த விதிகளுக்குக் கீழ் படிந்து செயலாற்றுமாறு பல்கலைக்கழக உபவேந்தருக்குத் சுற்று நிருபம் மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ம-22)

## கோப்பாய் - தைதடி வீதி புனரமைப்பு

நாவற்குழி, மே 20

கைதடி கோப்பாய் வீதி தற்போது செப்பனிடப்பட்டு வருகின்றது.

குழிகளுக்குச் சல்லிக் கற்கள் பரவவிடப்பட்டு தார் ஊற்றிச் செப்பனிடப்பட்டு வருகின்றது.

நீண்ட நாள்களாக மோசமாகச் சீரழிந்த நிலையிலிருந்த இந்த வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருவதையிட்டு மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (ம-121)

## ஐ.நா.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கண்ணிவெடிகள் அகற்றப் படாத காரணத்தால் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த 16 ஆயிரம் பேர் செட்டிக்குளம் முகாமில் இருக்கின்றனர். யாழ். மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயம் அமைக்கப்பட்டபோது, அதாவது 22 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்களில் 52 ஆயிரம் பேர் இன்னமும் குடியேற்றப்படாமல் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் வசிக்கின்றனர். இப்போது உயர் பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாக நீக்கப்பட்டு மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி, திருமுருகண்டி, பச்சிளைப்பள்ளி, மன்னார் மாவட்ட முள்ளிக்குளம் ஆகிய பகுதிகளில் இராணுவ முகாம் அமைக்கப்படவுள்ளதாலும், அரச தேவைகளுக்காகவும் மக்கள் மீள்குடியேற்றப்படவில்லை. இவர்களுக்கான மாற்றுக் காணிகளைக் கையகப்படுத்தும் வர்த்தமானி வெளிவந்ததும் இந்த மக்கள் மீள் குடியமர்த்தப்படுவர். இவ்வாறு பிரதியமைச்சர் தெரிவித்தார்.

## பொன்சேகா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்பிக் ரஷீக் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நேற்றைய வழக்கு விசாரணை யின் ஆரம்பத்தில் சரத் பொன்சேகாவின் வைத்திய பரிசோதனை அறிக்கை ஒன்றை சிறைச்சாலை அதிகாரிகள் நீதியரசர்களிடம் சமர்ப்பித்தனர்.

''கடந்த 15ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகையில், வெள்ளைக்கொடி விவகார வழக்கின் முன் நிறுத்தப்படும் சாட்சியங்கள் தொடர்பான கட்டுரை ஒன்று அந்தப் பத்திரிகையின் 7ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டுரையை சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் பிரட்ரிகா ஜான்ஸ் எழுதியுள்ளார். வெள்ளைக்கொடி விவகார வழக்குத் தொடர்பாக எதுவும் எழுதவேண்டாம் என மேல் நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது. அதனையும் மீறி அவர் இந்தக் கட்டுரையை எழுதியுள்ளார்'' என்று பிரதிவாதி சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி தெரிவித்தார்.

இந்த விடயத்தை நீதியரசர்கள் கவனத்தில் குறித்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். அத்துடன், சரத் பொன்சேகா பூரண குணமடையாததினால் வழக்கு விசாணையை எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து வழக்கு விசாரணையை மேல் நீதிமன்றம் எதிர்வரும் 23ஆம் திகதி வரை ஒத்திவைத்தது. (த-சி)

## புதிய குருக்கள் 5 பேருக்கு அபிஷேகம்



கொழும்புத்துறை, மே.20

யாழ். கத்தோலிக்கத் திருச்சபையின் புதிய குருக்களாக 5 அருட் சகோதரர்கள் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் புதன்கிழமை யாழ். பேராலயத்தில் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

அருட் சகோதரர்களான கீதபொன்கலன் லக்ஸ்மன், ஜெ.எல்மோ அருள்நேசன், ப.றொனாலட் செறில்நெஸ், யே.லெபோன் சுதன் (அ.ம.தி), ச.பிலிப் ரஞ்சனகுமார் (அ.ம.தி) ஆகியோர் குருக்களாக அபிஷேகம் செய்யப்பட்டனர்.

யாழ்.ஆயருடன் யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் அமலமரித்தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் போல் நட்சத்திரம் அடிகள், புதித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் மங்களராஜா அடிகள் ஆகியோர் இணைந்து அபிஷேகத் திருப்பலியை நிறைவேற்றினர். (ம-135)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
12 * 09 * 1941



மறைவு
10 * 06 * 2009

### அமரர் கந்தையா இரத்தினம்

(இரத்தினம் கடை, ஒட்டுமடம் சந்தி)

அன்பின் திருவுருவாய் பாசத்தின்
சிகரமாய் எங்களின் குடும்ப
ஒளிவிளக்காய் வாழ்ந்த தந்தையே
எம்மை இந்நிலைக்குயர்த்தி
முன்மாதிரியாய் வாழ்க்கையை
வாழ்ந்து வந்தீர் - காலன் செய்த
வேலையினால் எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டாலும்
நிலைத்துவிட்ட உம் அன்பால் ஆண்டிரண்டு
என்ன பலநூறு கழிந்தாலும் எங்கள் உள்ளத்தில்
உங்கள் நினைவுகள் என்றும் மறையாதிருக்கும்.

234/10, சென்.செபஸ்ரியன் லேன், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (4386)

உங்கள் நினைவுகளுடன், குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி கந்தையா சிவகாமவல்லி

திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா சிவகாமவல்லி நேற்று (19.05.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி-இராசம்மா தம்பதியரின் மகளும் இராமு- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் லயன் Dr.கந்தையாவின் அன்பு மனைவியும் ஆறுமுகம், செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்திராதேவி (லண்டன்), வசந்தி (ஆசிரியை, கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரி), வசந்தகுமாரன் (லண்டன்), இந்திரகுமார் (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), குமுதினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் சிறீந்திரன் (லண்டன்), ஜெயக்குமார், (உதவிப் பணிப்பாளர்), தேசிய கைத்தொழில் அதிகார சபை, ராஜகிரிய), மன்ரி (லண்டன்), மேகலைச்செல்வி (பிரதேச செயலகம், தென்மராட்சி), சாந்தலிங்கம் (பிரான்ஸ்), மிருணாளினி (நீதிமன்றம் - வவுனியா), மிருத்திகன், மதன் ஆகியோரின் அன்பு மாமியும் Dr.சுகன் (லண்டன்), கஜன் (லண்டன்), இந்துஜா, ரகுவர்மன், ஆர்த்தி, யுவன், ராம்குமார், நிலானிகா, வருண், திரிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம். தொ.பே.: 021 321 6489 (சி/574860)

தகவல்: க.இந்திரகுமார் (மகன்)

## வேலை ஆள்கள் தேவை

Net Cafe மற்றும் Phone Shopற்கு வேலையாள்கள்தேவைகணினிஅறிவுடைய ஆண், பெண் இருபாலாரும் சுயவிவரக் கோவையுடன் (CV) நேரில் வரவும். திருநெல் வேலிக்கு அருகாமையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 0212220066
இல,27 பலாலி றோட், திருநெல்வேலிச் சந்தி

## தவறி விட்டது

யாழ்ப்பாணம் சுகாதார திணைக்களத்திலிருந்து கஸ்தூரியார் வீதி, தட்டாதெருச் சந்தி, கே.கே.எஸ். வீதியூடாக மருதனார்மடம் சந்தியூடாக உடுவில் டச் றோட்டிற்கு செல்லும் வழியில் கறுப்பு நிற கைப்பை, கையடக்கத்தொலைபேசி இரண்டு கோப்பிகள், குடை, மழைக்கவசம் என்பன மாலை 5 மணியிலிருந்து 6 மணிக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுகாதாரத் திணைக்களத்தில் ஒப்படைக்கவும் அல்லது கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 0712123768

## தவறி விட்டது

நேற்று (19.05.2011) வியாழக்கிழமை மாலை யாழ்ப்பாணத்திலிருந்து இராச வீதி, பருத்தித்துறை வீதியூடாக அச்சுவேலிக்குத் திரும்பி வந்த வேளையில் முக்கிய ஆவணங்கள் மற்றும் பணத்துடன் கூடிய பச்சைநிற சீலைப் பையொன்று வழியில் தவறிவிட்டது. கண்டெடுத் தோர் தயவு கூர்ந்து கைத் தொலைபேசி இலக்கம் 0779116148 உடன் தொடர்புகொண்டு ஒப்படைத்து தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பிறிமா No.1 புறொயிலர் கோழிக் குஞ்சுகள் பிறிமா கொம்பனி உத்தர வாதத்துடன் நியாயமான விலையில் (ரூபா 80/=) 26.05.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.
* சுட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
* சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
* நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
* நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593
* இறைச்சிக் கோழிகள், திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
தெ.பே.இல: 021 222 6944

## J.C.B. BACKHOE இயந்திரம் வாடகைக்கு



பழைய கட்டடங்களை இடித்துத் துப்புரவு செய்யவும், காணிகளைத் துப்புரவாக்கி மட்டப்படுத்தவும் பாதைகளைச் சீர்செய்யவும் மணித்தியாலக் கணக்கில் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0776035633, 0776452019
0777279151 (4387)

## மரண அறிவித்தல்

### சுந்தரம்பிள்ளை தட்சணாமூர்த்தி

(இளைப்பாறிய அதிபர், மாலைதீவு)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை தட்சணாமூர்த்தி 16.05.2011 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை- விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்கான பொன்னம்பலம்- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாம்பிகையின் (பேபி) அன்புக் கணவரும் பிரியகலா, பராந்தகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யாழனின் அன்புப் பேரனும் சோமசுந்தரம் சுரேஷின் அன்பு மாமனும் குணவதி, இராஜலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேசப்பிள்ளை, றதி, கிருஷ்ணலிங்கம், சூரியகுமார், ஜெயந்தினி, மகாதேவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்கிசை இந்து மயானத்தில் நேற்று (19.05.2011) வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32 - 7/2, மாதங்க மாவத்தை லேன், கொழும்பு -6. (சி/071)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நல்லிணக்கத்தின் முதற் தேவை முழுமையான தமிழ்மொழி அமுல்

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில், அரச மொழிகள் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் பொலிஸார் இடையூறாக உள்ளனர்.

பொலிஸார் தேசிய மொழிக் கொள்கையை மீறிச் செயல்படுகின்றனர். அதனால் மொழிக் கொள்கையை அவர்கள் ஊடாக நடைமுறைப் படுத்த முடியாதுள்ளது.

வீதிப் போக்குவரத்துத் தொடர்பான அநேக பதாகைகள், அறிவித்தல் பலகைகளில் விவரம் தமிழ் மொழியில் எழுதப்படுவதில்லை. அதனால் சிங்களம் தெரியாத தமிழ் மக்கள் வீதிப் போக்குவரத்தை மீறுவதும், அதற்காக பொலிஸாராலேயே அவர்கள் தண்டிக்கவும் படுகின்றனர்.

பொலிஸார் தமிழ் மொழியைத் தொடர்ந்து புறக்கணித்தால் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும்.

சிங்கள மற்றும் தமிழ் மக்களின் சமஉரிமைகளை உறுதிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது மிக அவசியம்.

தேசிய மொழிக் கொள்கையை பொலிஸார் மீறிச் செயல்படுவதற்கெதிராக பொலிஸ் மா அதிபர் மீது வழக்குத் தொடரமுடியும். எனினும் அரசாங்கம் தனது திணைக்களம் ஒன்றின் மீது வழக்குத் தொடர முடியாது. அந்தக் காரணத்தால் அவர் மீது வழக்குத் தொடர முடியாதுள்ளது.

இவ்வாறு தெரிவித்திருப்பவர் வேறு எவரும் அல்லர். தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காராவே இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கிறார்.

எனினும், அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் தேசிய மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் பொலிஸார் இடையூறாக உள்ளது குறித்து பொலிஸ் மா அதிபருக்குக் கடிதம் மட்டும் எழுதியுள்ளேன்-என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரா தெரிவித்துள்ளார்.

சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகள் என்ற சட்ட ஏற்பாடு 1987ஆம் ஆண்டில் கைச்சாத்தான ராஜீவ்-ஜே.ஆர். ஒப்பந்தத்தின் பிரகாரமே கொண்டுவரப்பட்டது.

சிங்களம் மட்டுமே அரச கரும மொழி என்று முதலில் (1956 இல்) சட்டம் இயற்றப்பட்டு அதன் பின்னர் அன்றைய எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் அரசு, எவ்வளவோ பிகு பண்ணி நியாயமான தமிழ் மொழி உபயோகம் என்ற விதியையும் சேர்த்துக்கொண்டது.

பின்னர் சிங்களமும் தமிழும் தேசிய மொழிகள் என்ற நிலை உருவாக்கப்பட்டது. அரச அலுவலகங்களில் பணிபுரியும் தமிழர்கள் சிங்களத்தையும், சிங்களவர்கள் தமிழையும் கற்றுத் தேர்ச்சி அடைய வேண்டும் என்று சுற்றுநிருபங்கள் மூலம் வசதி செய்யப்பட்டது.

அரசாங்கத் திணைக்களங்கள் இப்போதும் கூட தமிழ் மக்களுக்கு அநேகமாக தனிச் சிங்களத்தில் மட்டுமே கடிதங்களை அனுப்பி வருகின்றன.

இது குறித்து தமிழ் மக்கள் முறைப்பாடு எழுதினாலோ, முறைப்பாடு செய்தாலோ சரி, மொழிக்கொள்கையை மன விருப்பத்துடன் நடைமுறைப்படுத்தும் போக்கு அரசாங்கத்திடமும் அரச அலுவலர்களிடமும் மிகமிகக் குறைவே.

தமிழ் மொழி உபயோகம் புறக்கணிக்கப்படுவது குறித்த முறைப்பாடுகள் எப்பொழுதுமே செவிடன் காதில் ஊதிய சங்கு போல் ஆக்கப்படுவதே நியதியாக்கப்பட்டிருக்கிறது.

இப்போது, தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரா அதனைப் பகிரங்கப்படுத்தியிருக்கிறார்; பொலிஸ் தரப்பினை உதாரணம் காட்டி.

தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம், சிங்களமும் தமிழும் உத்தியோக மற்றும் நிர்வாக மொழிகளாகவும் ஆங்கிலம் இணைப்பு (Link) மொழியாகவும் உள்ளது.

எனினும் தமிழ் மொழி உபயோகம் குறித்த அரசமைப்பு வசதி மிகப் பெரிய அளவில், ஒப்பீட்டளவில் ஏட்டுச் சுரைக்காயாகவே உள்ளது. 1958 ஆம் ஆண்டு தொடக்கம் கட்டவிழ்ந்த இனக்கலவரங்கள் மற்றும் முப்பது வருடப் போர் வரைக்குமான காலப்பகுதியில் நடைபெற்ற சகல இழப்புக்களுக்கும், துன்பங்களுக்கும் தமிழ் மொழிப் புறக்கணிப்பே மூல காரணம், உந்துசக்தி என்றும் கூறலாம்.

சிங்கள, தமிழ் மக்களிடையே சமூக ஒருமைப்பாட்டையும் புரிந்துணர்வையும் உருவாக்குவதற்கு அரசு இனிமேலாவது தூர நோக்குடன் செயல்பட வேண்டும். இல்லையேல் இரு இனங்களுக்கு இடையேயும் நல்லிணக்கத்தை உண்டாக்குவது என்ற பிரசாரம் வெறும் கனவாகவே முடியும்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரா முன்னர் ஒரு காலத்தில், வேளையில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஆணித்தரமாக குரல் கொடுத்தவர். தமிழ் மொழி உபயோகத்தில் அரசு நடத்தும் தகிடுதத்தத்தைப் புட்டுக் காட்டுகிறார்.

அது மட்டும் போதாது. சமூக ஒற்றுமைப்பாட்டை உருவாக்க வேண்டும் என்ற இலக்கை வைத்து செயற்பட்டு வெற்றிகாணத் தன்னை அர்ப்பணித்துச் செயற்படவேண்டும். அவர் இனபேதம் ஒழிவதற்கு உழைக்கத் தூண்டுதலாக இருப்பாரா?

தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய உரிமைகள் நியாய சிந்தையுடன் வழங்கப்பட்டு, தமிழர்களும் சிங்களவர்களும் சகோதரர்களாக வாழ்வதற்கான திசையில் பயணிக்க இப்போதைய அரசு மனங்கொள்ள வேண்டும்.

பிரதானமாகத் தமிழர்களின் மொழி, நில, உரிமைகள் வழங்கப்படுவது அதன் முதற்படியாக அமையவேண்டும். அதன் [illegible] அரசியல் தீர்வு ஒன்றை வகுக்கவும், செயற்படுத்த[illegible] சுத்தியுடன் செயற்படவேண்டிய மிகத் தகுந்த காலம்.

# அபகரிக்கப்பட்ட தங்கச்சங்கிலி பஸ் சாரதி, நடத்துநரால் மீட்பு

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாணத்துக்கும், கண்டிக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ்ஸில் பெண்ணின் தங்கச்சங்கிலி களவாடப்பட்டது.

சாரதி, நடத்துநரின் புத்திசாதுரியத்தால் சில மணித்தியாலங்களில் அது மீட்கப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

நேற்றுக்காலை 6.15 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது இயக்கச்சிப் பகுதியில் நான்கு பெண்கள் பஸ்ஸை மறித்து ஏறியுள்ளனர்.

குறிப்பிட்ட தூரத்தைக் கடந்ததும் அந்த நான்கு பேரும் இறங்கிவிட்டனர்.

சற்று நேரத்தில் பஸ்ஸில் பயணம் செய்த பெண்ணொருவர் தனது சங்கிலியைக் காணவில்லையென்று அலறினார்.

இயக்கச்சியில் ஏறிய பெண்கள் மீது சந்தேகம் கொண்ட சாரதி பஸ்ஸை திருப்பி அவர்கள் இறங்கிய இடத்தை நோக்கிச் செலுத்தினார். அப்போது யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி நோக்கி வந்துகொண்டிருந்த பஸ்ஸில் அவர்கள் பயணம் செய்து கொண்டிருந்ததை அவதானித்தார்.

சாரதியும் நடத்துநரும் பஸ்ஸை மறித்து குறித்த நான்கு பெண்களிடமும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அப்போது அதில் இரண்டுபேர் ஓடி விட்டதாகவும் ஏனையோர் பஸ்ஸுக்குள் இருந்து எடுத்ததாகக் கூறி அந்தச் சங்கிலியை ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ம-9)

# தங்கூசி வலைக்குத் தடை மீனவர்களின் தொழில் பாதிப்பு

தென்மராட்சி, மே 20

தங்கூசி வலை பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் சாவகச்சேரி கடலேரி கடற்றொழிலாளர்கள் கடந்த நான்கு நாள்களாக மீன்பிடிக்கச் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மீனவர்கள் பூநகரி வரையான கடலேரியில் மீன்பிடித்து வந்துள்ளனர்.

அண்மைக் காலமாக யாழ்ப்பாண கடற்றொழிலாளர்கள் இந்தப் பகுதியில் புதிதாக களங்கண்டிகளை அமைத்துள்ளதால் தமது வலைகளில் மீன்கள் குறைவாகப் பிடிபடுவதாகவும் தற்போது தங்கூசி வலை பாவிப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளதால் கடந்த நான்கு நாள்களாக மீன்பிடிக்கச் செல்லவில்லையெனவும் தெரிவிக்கின்றனர்.

புதிதாக வலைகளைக் கொள்வனவு செய்து மீன்பிடிப்பதற்கான உரிய ஆயத்தங்களை மேற்கொண்டு தொழிலுக்குச் செல்ல இரு வாரங்களுக்குமேல் செல்லலாமெனவும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றார்.

(எ-207)

# 'காப்பெற்' வீதி அமைக்கும் பணிகள் ஜூன் மாதத்துடன் நிறைவடையும்

யாழ்ப்பாணம், மே 20

யாழ். நகரில் 'காப்பெற்' வீதிகள் அமைக்கும் பணிகள் எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதியுடன் நிறைவுபெறும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். நகரில் உள்ள பல வீதிகளுக்கு 'காப்பெற்' அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் ஸ்ரான்லி வீதி, பிரதான வீதி என்பன முழுமையாகத் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. தற்போது செம்மணி வீதியில் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப்பணிகள் யாவும் எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதியுடன் நிறைவுபெற்று அடுத்த கட்டமாக வீதிக்கடவைகள், குறியீடுகளிடும் பணிகள் நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# தமிழ் ஞானசம்பந்தர்

ஞானக்கதிர்

இன்று வைகாசி மூல நட்சத்திர நாள் தமிழுணர்வுடன் சைவம் வளர்த்த ஞானசம்பந்தரது குருபூசை நாள். 4286 பாடல்களைக் கொண்ட பெரிய புராணத்தில் 1256 பாடல்கள் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருடைய பெருமைகளை எடுத்துரைக்கின்றது. ''பிள்ளை பாதி புராணம் பாதி'' என்ற பழமொழி இந்தப் பாடல் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே ஏற்பட்டிருக்கவேண்டும்.

தமிழுணர்வுடன் சைவத்தை வளர்த்தவராதலால் சேக்கிழார் இந்த கௌரவத்தை வழங்கியிருக்கலாம்.

மூன்று வயதில் தந்தையாரைக் காணாது அழுத ஆளுடை பிள்ளையின் நிலையைக் குறிக்கப் புகுந்த சேக்கிழார் ''புனிதவாய் மலர்ந்து அழுத'' என்கிறார்.

சைவமும் தமிழும் ஒன்றுடன் ஒன்று இயைபுபட்டவை. இதனை நன்குணர்ந்த சம்பந்தர் தமிழுணர்வால் சைவத்தை வளர்க்க முயன்றார். இதனை ஆதாரப்படுத்தும் வகையில் ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'' எனச் சுந்தரர் குறிப்பிட்டுக் காட்டுவதும் இங்கு நோக்கத்தக்கது.

தமிழ்ப் பற்றின் காரணமாக தமிழ் ஞானசம்பந்தன் என்றே தன்னைச் சம்பந்தர் குறிக்கிறார். அந்தணோத்தமராக விளங்கிய ஒருவர் தன்னைத் தமிழ் ஞானசம்பந்தன் எனப் பல இடங்களில் பிரகடனப்படுத்திக் காட்டுவது சிந்திக்கவேண்டியவிடயம்.

தமிழின்றேல் சைவம் தழைக்காது. மக்களை வழிப்படுத்தவும் முடியாது. இதனை நன்குணர்ந்தமையால் தமிழுணர்வை கையிலெடுத்து தரணியை ஆற்றுப்படுத்தினார் ஆளுடையபிள்ளையார்.

ஞானசம்பந்தரின் வாழ்வியல் நம்முன் நல்ல சின்தனைகளைக் கிளர்வடையச் செய்யட்டும்.

ச. லலீசன்
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொனறாகல செல்லவுள்ள சி.பி.ஆர்.திட்ட அதிகாரிகள்

நாவற்குழி, மே 20

யாழ்.மாவட்டத்தில் மாற்று வலுவுள்ளோரைச் சமூக மட்டத்தில் வைத்துப் புனர்வாழ்வளிக்கும் சி.பி.ஆர். நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபடும் அரச அதிகாரிகள் யூன் மாதம் மொனறாகல மாவட்டத்திற்கு வெளிக்களச் சுற்றுலாவாகச் செல்ல உள்ளனர். யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் சமூக சேவைகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் கிறிஸ்ரி பொர்ணான்டோ இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தில் கடமையாற்றும் சமூக சேவைகள் அதிகாரிகள், சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர்கள் ஆகியோர் இந்தச் சுற்றுலாவில் பங்கேற்க உள்ளனர்.

இந்த வெளிக்களச் சுற்றுலாவின் ஒருங்கிணைப்பாளர்களாக சி.பி.ஆர். நிகழ்ச்சித் திட்டத்தின் தேசிய இணைப்பாளர் எம்.சாந்தகுமார, மொனறாகல மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி ய.அஜித் குமார ஆகியோர் கடமையாற்றவுள்ளனர். (எ-121)

# சட்டவிரோத கள் விற்பனையில் ஈடுபட்ட 8 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,மே 20

சட்ட விரோத கள் விற்பனையில் ஈடுபட்ட 8 பேருக்கு யாழ்.நீதிமன்றம் 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தது.

ஆனைக்கோட்டைப் பகுதியில் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போது கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்ட இவர்கள் யாழ்.நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு ஆறுபேருக்கு தலா ஆயிரம் ரூபாவும், இருவருக்கு தலா 750 ரூபாவும் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். சட்ட விரோத கள் விற்பனையில் ஈடுபடுவோரை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மடக்கிப்பிடிக்கும் செயல்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. (ம-9)


## கேள்வி அறிவித்தல்

**கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிமனை, தென்மராட்சி-2011**

Education Sector Development Programme Grant No IDAH-196CE

**01.இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு உலக வங்கியிடம் இருந்து கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கென செலவுக்கான மானியத்தைப் பெற்றுள்ளது. அதன் ஒரு பகுதியை, வடமாகாண கல்வி அமைச்சின் PSDG நிதி ஒதுக்கீட்டினூடாகக் கீழ்க்குறிப்பிடப்பட்ட கட்டட நிர்மாண/திருத்த வேலைகளைப் பூர்த்திசெய்ய வலயக்கல்விப் பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகின்றது.**

**02.ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகம் 2011ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.**

**03.கேள்விப் பத்திரங்கள் வழங்கல் 23.05.2011ஆம் திகதியிலிருந்து 30.05.2011 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 02.06.2011 ஆம் திகதி மு.ப.10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் எமது அலுவலகத்தில் மு.ப.11 மணிக்கு கேள்விப் பத்திரப்பெட்டி திறக்கப்படும்.**

**04.கேள்விப் பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய பாதுகாப்புப்பணம் மற்றும் மீளளிக்க முடியாத படிவக் கட்டணம் 750.00 ரூபாவை தென்மராட்சி கல்வி வலயத்தில் செலுத்துவதன் பேரில் கேள்விப் பத்திரப் படிவங்களைப் பாடசாலை வேலைப் பகுதியில் பெற்றுக்கொள்ளவும். மேலதிக தகவல் தேவைப்படின் இங்கு பெற்றுக் கொள்ள முடியும். கீழ் உள்ள வேலைகளுக்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் கட்டண மேதுமின்றி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

| இல | பாடசாலையின் பெயரும் வேலையின் விவரமும் | கட்டுமான மதிப்பீடு | பாதுகாப்பு வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | யா/நாவற்குழி ம.வி. இரு மாடிக் கட்டம் முதலாவது மாடி 40X 25 | 1,722,467.13 | 8600.00 | M8/C9 |
| 02 | யா/மீசாலை வீரசிங்கம் ம.வி. இரு மாடிக் கட்டம் முதலாவது மாடி 40X25 | 1,713,157.98 | 8500.00 | M8/C9 |
| 03 | யா/மட்டுவில் சந்திரபுர ம.வி. இரு மாடிக் கட்டம் முதலாவது மாடி 60X25 | 2,498,534.60 | 12500.00 | M7/C8 |
| 04 | யா/கைதடி குருசாமி வித். இரு மாடிக் கட்டம் முதலாவது மாடி 60X25 | 2,600,006.80 | 13000.00 | M8/C9 |
| 05 | யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை இரு மாடிக் கட்டம் முதலாவது மாடி 60X25 | 2,600,006.80 | 13000.00 | M8/C9 |

**05.கேள்வி ஆவணங்களைப் பெற்றுகொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கை பத்திரங்களில் ஒன்றை மூலப் பிரதியாகவும் மற்றையதை பிரதியாகவும் கொள்ள வேண்டும்.**

**6.கேள்வியாளர் பூர்த்திசெய்யப்பட்ட மூலப்பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் மறு பிரதியை வேறு கடித உறையிலும் இடல் வேண்டும். இரண்டு கடித உறைகளும் வேறு பெரிய கடித உறையிலிட்டு மேல் மூலையில் வேலையின் விவரமும் ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு தலைவர், கேள்விச் சபை, வலயக்கல்விப் பணிமனை, தென்மராட்சி, சாவகச்சேரி என விலாசமிட்டு வலயக் கல்விப் பணிப்பாளர் தென்மராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 02.06.2011ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன் இடப்படல் வேண்டும்.**

**07.மேற்படி வேலைகளுக்கு கேள்விகளில் பங்கெடுக்க விரும்புவோர் தமது இக்ராட் பதிவுப் புத்தகத்தை மேலதிக மாகாண கல்விப் பணிமனையின் பாடசாலை பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பங்கெடுப்பதற்கான சிபாரிசைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கு இந்த நடைமுறை விலக்களிக்கப்பட்டுள்ளது.**

**8. குறித்த நேரத்துக்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்விகள் திறக்கப்படுகையில் கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்க முடியும்.**

திரு.கு.பிரேமகாந்தன்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி

19.05.2011 (சி/574859)





வடமராட்சி, மே 20

மந்திகை, கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

கண்ணகி கதையின் சிறப்பு அம்சமான மணமாலைப் படிப்பு இன்று வெள்ளிக்கிழமையும், சிலம்பு கூறல் எதிர்வரும் புதன்கிழமை இரவும் நடைபெறும். மறுநாள் வியாழக்கிழமை கண்ணகி கதைப்படிப்பு நிறைவடையும். பொங்கலின்போது கரகம், காவடிகளுடன் விசேட பூசையும் இடம்பெறும். (ற-236-122)

* * *

யாழ்ப்பாணம், மே.20

சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு முருகப் பெருமானுக்கு 1009 சங்குகளால் அபிஷேகமும், சண்முகப் பெருமானுக்கு 109 சங்குகளினால் அபிஷேகமும் இடம்பெறும்.

மாலை 5 மணிக்கு விசேட பூசை, மேளக் கச்சேரி ஆகியன இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார். (ற)

* * *

யாழ்ப்பாணம், மே 20

கைதடி கிழக்கு, குத்து வைரவர் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று முற்பகல் 11 மணிக்கு அபிஷேக ஆராதனையும், நாளை சனிக்கிழமை அதிகாலை 4 மணிமுதல் 7.30 மணிவரை வைரவப் பெருமானுக்கு விசேட பொங்கலும் இடம்பெறும். (ற)

# திருஞானசம்பந்தர் குருபூசைகள்

யாழ்ப்பாணம்,மே 20

யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தின் சைவ அபிவிருத்திக் கழகத்தின் திருஞான சம்பந்தர் குரு பூசை இன்று வெள்ளிக்கிழமை நாவலர் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கழகத்தின் தலைவர் சு.சிவபாத சுந்தரம் தலைமையில் நடைபெறும் வரவேற்புரையை அ.லிங்கராஜ்யும் ஆசியுரையை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும், சிறப்புரையை கோப்பாய் ஆசிரியர் கலா சாலை விரிவுரையாளர் ச.லலீசனும் வழங்கவுள்ளனர். அத்துடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ற-313)

* * *

சுன்னாகம் பருத்திக்கலட்டி ஆலயத்தின் திருஞான சம்பந்தர் குருபூசை இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பகல் விசேட பூசை, மகேஸ்வர பூசை, திருமுறை பாராயணம் இடம்பெற்று மாலை விசேட பூசை வழிபாடுகளுடன் சங்கீத கதாப்பிர சங்கம், சைவ நற்சிந்தனைகள் போன்றன இடம்பெறும். (ற-313)

# சந்நிதியான் ஆச்சிரம வைகாசிப் பெருவிழா

யாழ்ப்பாணம்,மே 20

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை வருடாந்தம் நடத்தும் வைகாசிப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சந்நிதியான்ஆச்சிரமத்தில்நடைபெறவுள்ளது.

செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் விசேட அபிஷேக வழிபாடுகளைத் தொடர்த்து மருத்துவர் சி.கதிரைவேற்பிள்ளையின் வாழ்த்துரை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து ஆச்சிரமத்தினால் நடத்தப்படும் சமூகப்பணிகளின் அடிப்படையில் மாணவி ஒருவருக்கு சைக்கிள் வழங்கப்படவுள்ளது. (ற-236)


## முக்கிய அறிவித்தல்

வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

**நீண்ட காலமாக இயங்காமல் காணப்படும் தாவடி இந்து மயான அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தைப் புதிதாகத் தெரிவு செய்வதற்கும் மயான அபிவிருத்தி தொடர்பானதுமான கலந்துரையாடல் எதிர்வரும் 22.05.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்குத் தாவடி இந்து மயானத்துக்கு அருகில் நடைபெற உள்ளது.**

**அனைத்துப் பொதுமக்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.**

வலி.தெற்குப் பிரதேச சபை,
சுன்னாகம்.

(40)(சி/091)

செயலாளர்
திருமதி மு.சுலோச்சனா



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சரசாலை வடக்கைச் சேர்ந்தவரும் சரசாலை வடக்கு நித்திலா மகளிர் ஐக்கிய நாணய சங்கத் தலைவியும் யா/ஸ்ரீ கணேச வித்தியாலய ஆசிரியையுமான

**திருமதி கமலேஸ்வரி ஞானச்சந்திரன்**

அவர்கள் 28.04.2011 வியாழக்கிழமை அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளமையையிட்டு

அவரை வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல்வேறு உயர்வுகளையும் பெறவேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
திருமதி ஜெயசுதா சசிகரன்,
திருமதி வாசுகி சிவராசா
சரசாலை வடக்கு,சாவகச்சேரி.

(40-20-50)(1682)


## போட்டித் திகதிகள் மாற்றப்பட்டன

தென்மராட்சி, மே 20

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு நாளை நடத்தப்படவிருந்த வலய மட்ட கணித விநாடிவிணாப் போட்டிகள் பின்வரும் திகதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

தரம் 9, 10, 11 ஆகிய வகுப்புக்களுக்கான போட்டிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் தரம் 6, 7, 8 ஆகிய வகுப் புகளுக்கான போட் டிகள் எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமையும் சாவகச்சேரி இந்துக்கல் லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர்குபிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.(ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கைதிகளை உறவுகள் பார்வையிட அனுமதி மறுப்பு

## சிறைச்சாலை ஆணையாளருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,மே 20

கொழும்பிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை வெசாக் தினமான கடந்த செவ்வாய்க்கிழமை அவர்களின் பெற்றோர், உறவினர் பார்வையிடச் சிறைச்சாலை நிர்வாகம் அனுமதிவழங்கவில்லை என்று கைதிகள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

அதிருப்தியடைந்த கைதிகளின் பெற்றோரும் உறவினர்களும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

சிங்கள் கைதிகளை அவர்களது உறவினர்கள் சந்தித்துப் பேச அனுமதி வழங்கப்பட்ட போதும் தமக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக அவர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்பட்டுக் கொழும்பிலுள்ள விளக்கமறியல் சிறைச்சாலை, வெலிக் கடை சிறைச்சாலை, புதிய மகசின் சிறைச்சாலை ஆகியவற்றில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளைப் பார்வையிடுவதற்கே அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

"சிறைச்சாலைகளில் வாடும் எமது பிள்ளைகளை, உறவுகளை பார்வையிடுவதற்காக் வெசாக் தினத்தன்று காலை முதல் வெயிலில் நீண்ட நேரம் காத்திருந்தோம்.எனினும் நண்பகல் 12 மணிக்குப் பின்னர் உணவு மட்டும் கொடுப்பதற்கே அனுமதி வழங்கப்பட்டது. அவர்களைச் சந்தித்துக் கதைப்பதற்கு நேர அவகாசம் வழங்கப்படவில்லை'' என்று சிறைச்சாலை ஆணையாளருக்குக் கொடுத்த கடிதத்தில் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

புனித நாளான வெசாக் தினத்தன்று எமது பிள்ளைகளுடனும் உறவுகளுடனும் மனதாரக் கதைக்கலாம் என்று நம்பி வடக்கு, கிழக்கு, மலையகம் போன்ற பகுதிகளிலிருந்து வந்து காத்திருந்தும் எமக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் நாம் மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டி ஏற்பட்டது என்று பெற்றோர் ஒருவர் தெரிவித்தார். (த-14)

## ஊர்காவற்றுறையிலிருந்து புங்குடுதீவுக்கு இறைச்சி கொண்டு செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், மே 20

புங்குடுதீவு மக்களின் ஆட்சேபனையையும் மீறி ஊர்காவற்றுறையில் இருந்து புங்குடுதீவுக்கு இறைச்சி கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகவே புங்குடுதீவில் இறைச்சிக்காக மாடு வெட்டுவதும் விற்பனை செய்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்தக் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் மக்களின் ஏகோபித்த இணக்கப்பாட்டுடன் இந்த தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் ஒருகிலோ இறைச்சிக்காகப் புங்குடுதீவில் இருந்து ஊர்காவற்றுறைக்கு வரவேண்டும்.

இதனால் புங்குடுதீவில் இறைச்சிக்கடை திறக்கவேண்டும் என்று ஒருவர் அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை விடுத்தார்.

புங்குடுதீவில் போதிய வசதியான கொல்களம் அமைக்க இடமில்லாததால் அங்கு இறைச்சிக் கடை அமைக்க அனுமதி வழங்கப்படவில்லை என்று பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

அதற்கு மாற்று ஏற்பாடாக ஊர்காவற்றுறையில் இருந்து புங்குடுதீவுக்கு இறைச்சி கொண்டு போய் விற்க ஏற்பாடு செய்யலாம்தானே என்றார் அமைச்சர்.

இப்படி ஊர்காவற்றுறையில் இருந்து இறைச்சி கொண்டு போக அனுமதித்தால், புங்குடுதீவிலே கள்ள மாடு வெட்ட ஆரம்பித்து விடுவார்கள் எனப் பொதுமக்கள் ஆட்சேபனை தெரிவித்தனர்.

எனினும், இந்த ஆட்சேபனையைப் பொருட்படுத்தாமல் ஊர்காவற்றுறையிலிருந்து புங்குடுதீவுக்கு இறைச்சி கொண்டு செல்ல அனுமதி வழங்கும்படி அமைச்சர் உத்தரவிட்டார். (ம-2)

## விரிவுரையாளர் பிரச்சினைக்குத் தீர்வு; ஜனாதிபதியுடன் அடுத்த வாரம் சந்திப்பு

கொழும்பு, மே 20

பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது.

உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள சம்பளப் பிரச்சினை சம்பந்தமாக அங்கு வைத்து இரு தரப்புக்களுக்குமிடையில் இணக்கம் ஒன்று எட்டப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பளப் பிரச்சினை சம்பந்தமாக ஜனாதிபதியுடன் பேசுவதற்குத் தமக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை என்று மேற்படி சம்மேளனம் பல சந்தர்ப்பங்களில் குற்றம் சுமத்தியிருந்தது.

ஜனாதிபதியுடனான சந்திப்பை ஒழுங்குபடுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்து உயர் கல்வி அமைச்சுக்கு கடிதங்கள் இரண்டை அனுப்பிவைத்துள்ள போதிலும் இதுவரையிலும் தமது சம்மேளனத்துக்கு எந்தவொரு பதிலும் கிட்டியிருக்கவில்லை என்று பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கச் சம்மேளனம் தெரிவித்திருந்தது.

இதேவேளை -

நியாயமான சம்பள அதிகரிப்பு ஒன்றை வழங்குமாறு பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சங்கப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளது என்று சங்கங்களின் சம்மேளனம் தெரிவிக்கின்றது.

இதன் காரணமாக பல் கலைக்கழகங்களின் நிர்வாகச் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம-22)

## கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்கு வேலணையில் விழிப்புக் குழு அமைப்பு

யாழ்ப்பாணம், மே 20

கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்க ஈ.பி.டி.பியின் தீவகப் பகுதி அமைப்பாளர் போல் தலைமையில் விழிப்புக் குழு ஒன்றை அமைக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தரவு பிறப்பித்தார்.

அடங்காத மாடுகளை நான்கு நாள்களுக்குப் பட்டினி போட்டால் அடங்கிவிடும் என்றும் ஆலோசனை கூறினார்.

கடந்த 16 ஆம் திகதி வேலணை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவுகளில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசங்களில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மீள்குடியமர்ந்தவர்களின் விவசாயப் பயிர்கள் கட்டாக்காலி கால் நடைகளால் நாசமாக்கப்படுவதாகவும் கிராமசேவகர் மற்றும் பிரதேச செயலரிடமும் முறையிட்டும் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று முறைப்பாடு செய்தனர்.

இதனைக் கேட்ட அமைச்சர் இப்பொழுது இங்குமட்டுமல்ல எல்லா இடங்களிலும் இந்தப் பிரச்சினை தலைதூக்கி உள்ளது. இதனால் புதியமுறை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட பரப்பளவில் உறுதியான முட்கம்பி வேலிகளை அமைத்து அதற்குள் மாடுகளை விட்டு அடைத்து வைக்கலாம். அந்தக் கிராம இளைஞர்கள் ஓர் அமைப்பாகவே இதைச் செய்யமுடியும்.

இவ்வாறு அடைத்து வைக்கப்படும் கட்டாக்காலிகளை நான்கு நாள்களுக்குப் பட்டினி போட்டால் அவை தாமாகவே அடங்கிவிடும்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட கால்நடைகளை கால்நடை வைத்தியரின் பரிசோதனையில் வளர்க்க விரும்புபவர்களுக்கு நியாயமான விலைக்குக் கொடுக்கலாம்.

வளர்க்கத் தகுதியற்றவற்றை இறைச்சிக்காக விற்கலாம். இதன் மூலம் கிடைக்கும் பணத்தை விவசாயிகளுக்கு நலன்புரி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தலாம் என்று அமைச்சர் கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதேச செயலாளர் குறுக்கிட்டு பல விவசாயிகளின் மாடுகளும் கட்டாக்காலிகளாகத் திரிகின்றன என்றார்.

அப்படியானால் அவற்றை பிடித்து அடைத்துவைத்துத் தண்டப் பணம் அறவிட வேண்டும் எனக்கூறிய அமைச்சர், தீவகப் பிரதேச அமைப்பாளர் போலை அழைத்து உடனடியாக இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு உத்தரவிட்டார். (ம-2)

## போரில் இறந்தவர்கள், உயிர் தப்பியவர்களின் கௌரவம் கருதி விசாரணைகள் அவசியம்

### ஜொலந்தர் போஸ்ரர் கருத்து

வவுனியா,மே 20

வன்னியில் இறுதிக்கட்டப் போரில் இறந்தவர்கள் மற்றும் உயிர் தப்பியோரின் கௌரவம் கருதி இப்போது சர்வதேச விசாரணையை ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிப்பது அவசியமாகும் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கை விவகாரங்கள் தொடர்பான ஆய்வாளர் ஜொலந்தர் போஸ்ரர் கூறியுள்ளார். அவரது கருத்து வருமாறு:-

மோதலில் தப்பிப் பிழைத்தோருக்கும் யுத்தத்தின் போதான துஷ்பிரயோகங்களை அவதானித்த எமக்கும் மே மாதமானது ஒருபோதும் அமைதியான தாக இருக்காது.

2009 மே 19 ஐ இப்போதும் நான் ஞாபகத்தில் வைத்துள்ளேன். யுத்தம் முடிவடைந்ததாக அரசு அறிவித்தபோது ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் ஆறுதல் உணர்வைத் தற்போதும் நினைவு கூரக் கூடியதாகவுள்ளது.

ஐ.நா.நிபுணர் குழு அறிக்கையானது தொடர்ச்சியாக வன்முறைகள் இடம்பெற்றதை அண்மையில் உள்ளடக்கியுள்ளது. பொது மக்கள் மீது அரசின் ஷெல் தாக்குதல், பொதுமக்கள் இழப்பு எதுவும் இடம்பெறாத கொள்கையைக் கடைப்பிடித்த தாக அரசு திரும்பத் திரும்பக் கூறிவருவது தொடர்கிறது. பொதுமக்கள் மரணங்கள் அதிகளவில் இடம்பெற்றமை தொடர்பாக உத்தியோக பூர்வமான நிகழ்வுகள் இல்லை. மரணச்சான்றிதழ்களைக் கூடப் பல குடும்பங்கள் பெற்றிருக்கவில்லை.

யுத்தத்திலிருந்து தப்பிய இளம் பராயத்தவர் ஒருவரை இந்த ஜனவரியில் நான் சந்தித்தேன். யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின்போது என்ன நடந்தது என்பது தொடர்பாகச் சர்வதேச விசாரணைக்கான எமது அழைப்பைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு உண்மை மற்றும் நீதிக்கான எமது கொள்கைகளில் உறுதியாக நிற்குமாறும் அந்த இளம் பெண் என்னிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இருவருடங்களுக்கு முன்னர் இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான ஐ.நாவின் புதிய அறிக்கையை இலகுவாக நிராகரிப்பது அரசின் பதிலாக உள்ளது. ஆனால், உண்மைக்கான தேவையானது ஒருபோதும் வலிமையற்றதாக இருப்பதில்லை. உண்மையைப் புதைப்பதற்கு முயற்சிகள் இருக்கின்றபோதிலும் போர்க் குற்றங்கள் உட்பட சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்களை இருதரப்பும் இழைத்திருக்கின்றன என்று நம்பகரமான செய்திகள் உள்ளன - என்று ஜொலந்தர் போஸ்ரர் எழுதியுள்ளார்.

## வரணியில் குடும்பப் பதிவுகளை மேற்கொண்டுவரும் படையினர்

யாழ்ப்பாணம், மே 20

வரணிப் பிரதேசத்தில் இராணுவத்தினர் மீண்டும் குடும்பப் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் வசிக்கும் குடும்பங்களின் பூரண விவரங்களையும் படையினர் சிங்கள மொழியிலான படிவங்களில் பதிவுகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு குடும்ப விவரங்கள் பதியப்பட்டு குடும்பப் படம் எடுக்கப்பட்டு வீட்டுக்கு பதிவு இலக்கமும் வழங்கப்படுவதாகவும், வரணி வடக்கில் படையினர் தற்பொழுது குடும்பப் பதிவுகளை மேற் கொண்டு வருவதாக [illegible] மக்கள் தெரி[illegible]னர். (எ-122)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
20 மே 2011 வெள்ளிக்கிழமை

ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில்

# அல்லைப்பிட்டி, மண்கும்பான் குளங்களை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

வேலணை, மே 20

அல்லைப்பிட்டி மற்றும் மண்கும்பான் பிரதேசங்களில் உள்ள 13 குளங்கள் தூர்வடைந்து உள்ளமையால் இந்தக் குளங்களைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை வேலணைப் பிரதேச செயகலத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கையை அப்பிரதேச மக்கள் விடுத்தனர்.

மேலும் மக்கள் தெரிவித்தவை வருமாறு:

இந்தப் பிரதேசத்தில் உள்ள குளங்களைப் புனரமைத்துத் தருமாறு பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தவிதமான நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, இந்தக் குளங்களைப் புனரமைத்து அந்தப் பகுதி மக்களின் விவசாயச் செய்கையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மேலும் தெரிவித்தனர்.

மேற்படி கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எஸ்.சிறீதரன் மற்றும் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், வேலணைப் பிரதேச செயலர் நந்தகோபாலன் மற்றும் அரச அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் விவசாயத் திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்மென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)

## கைவண்ணம்...



கலைநயம்: நெடுந்தீவு பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் வெசாக்தினத்தை முன்னிட்டு வெசாக் கூடுகளால் அலங்காரங்களை மேற்கொண்டிருந்தனர் (7)

# மின்சார திட்டங்களைப் பார்வையிட சபையின் உயர் அதிகாரிகள் வருகை

தென்மராட்சி, மே 20

"வடக்கின்வசந்தம்" திட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மின்சாரத் திட்டங்களில் தென்மராட்சிப் பிரதேசத்தைப் பார்வையிட இலங்கை மின்சார சபையின் தலைமையக அலுவலக உயர் அதிகாரிகள் வருகை தரவுள்ளனர்.

நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை மேற்படி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களைப் பார்வையிடுவதுடன், மின்சார விநியோகம் தொடர்பாக மக்களின் கருத்துக்களையும் கேட்டு அறியவுள்ளனர் என்றும் மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மின்சார விநியோகம் தொடர்பாகத் தங்களின் பிரச்சினைகளை உயர் அதிகாரிகளிடம் கையளிக்குமாறும் மின்சார சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-207)

# தெல்லிப்பழை வைத்தியசாலையில் உலக தாதியர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 20

''உலக தாதியர் தின நிகழ்வுகள் கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளன.

தாதிய உத்தியோகத்தர் ஜஸ்ரின் சுவேந்திரா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகர் ஏ.ஜெயக்குமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் இந்த வைத்தியசாலையில் கடமை புரியும் அனைத்துத் தாதியர்களும் புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையாரின் சந்தியப் பிரமாண வாசகத்தை ஒன்றிணைந்து வாசித்தார்கள்.

மேலும் தாதிய சேவையின் சிறப்புப் பற்றிய சிறப்புரைகளும் கவிதைகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பதில் தாதிய பரிபாலகி, சிரேஷ்ட தாதியர்கள், இளநிலை தாதியர்க்ள், வைத்திய அதிகாரிகள் மற்றும் வைத்திய சாலைப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். (எ-5)

# மணியந்தோட்ட மக்களுக்கு வீடமைக்கும் பணிகள் ஆரம்பம்

கொழும்புத்துறை, மே 20

மணியந்தோட்டப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது.

நல்லூர் பிரதேச செயலகத்தால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 31 அரை நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரை நிரந்தர வீட்டுடன் மலசலகூடமும் அமைக்கப்படவுள்ளது.

ஒரு பயனாளிக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய குடியிருப்பு அமைக்கப்படவுள்ளது. இதற்கான கட்டடப் பொருள்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன என்று அந்தப் பகுதியில் முகாமிட்டுள்ள விநியோக அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-135)

# கிணறுகளைப் புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 20

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இளவாலை வடமேற்கு வசந்தபுரம் பகுதியில் சேதமடைந்துள்ள 30 கிணறுகள் வாலிபர் வளர்ச்சிக் கழகத்தால் (வைக்ஹோ) புனரமைப்புச் செய்யப்படவுள்ளன என்று யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

11 லட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவில் இந்தக் கிணறுகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இவற்றைப் புனரமைப்பதற்காக வடமாகாண மீள்குடியேற்றம், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கான ஜனாதிபதி செயலணிக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4-14)

# பஸ்தரிப்பிடம் திறந்து வைப்பு

தென்மராட்சி, மே 20

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு முன்பாக பஸ்தரிப்பிடம் அமைக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

775 இலக்க மார்க்கத்தில் செல்லும் மாணவர்கள் , ஆசிரியர்கள் ஆகியோரின் நலன்கருதி நலன்விரும்பி ஒருவரால் அமைக்கப்பட்ட பஸ்தரிப்பிடம் சாவகச்சேரி நகரசபை செயலாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்கீனால் திறந்து வைக்கப்பட்டது. (ம-207)

# இந்திய மீனவர் அத்துமீறி றோலரில் மீன்பிடி; குடாநாட்டுத் தொழிலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம்,மே 20

இந்திய மீனவர்கள் குடாக் கடற்பரப்பில் அத்துமீறி றோலரில் தொழிலை மேற் கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் குடாநாட்டு மீனவர்கள் றோலர் மூலம் தொழில் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இது எந்த வகையில் நியாயமானது என்று குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கேள்வி எழும்புகின்றனர்.

சங்கத் தலைவர் ஜே.சகாயராஜா தலைமையில் இடம்பெற்ற சந்திப்பின் போது மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

எமது பகுதி மக்கள் முதலிட்டு 141 றோலர் படகுகளைக் கொள்வனவு செய்து தொழில் செய்து வந்தனர். கடந்த 76 ஆம் ஆண்டிலிருந்து றோலர் படகைப் பயன்படுத்தி வருகிறோம்.

இந்த நிலையில் இந்த வருடம் ஜனவரி 31 ஆம் திகதியிலிருந்து கடந்த ஐந்து மாத காலமாக இந்தத் தொழிலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடை விதிக்கப்பட்டதன் பின்னர் மாற்றுத் தொழிலுக்கான எந்த வித உதவிகளும் எமக்கு வழங்கப்படவில்லை.

றோலர் படகு கொள்வனவு செய்வதற்காகச் செலவிடப்பட்ட பணத்தைக் கூடப் பெற முடியவில்லை.

## இது எந்த வகையில் நியாயம்

இந்தநிலையில், றோலர் படகைப் பயன்படுத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரம் பேர் வரை வருமானமின்றி அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

இதனை அறிந்திருந்தும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கக்களின் சமாசத் தலைவர் றோலர் படகைப் பயன்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்.

250 குதிரை வலுவும் 60 அடி நீளமும் கொண்ட றோலர்ப் படகு சகிதம் இந்திய மீனவர்களில் 90 வீதமானவர்கள் எமது பகுதியில் கடற்றொழில் செய்கின்றனர்.

அதனை தடுத்து நிறுத்தாமல் எம்மை கட்டுப்படுத்தி என்ன பயன்? எம்மைக் கட்டுப் படுத்துவதன் மூலம் கடல் வளம் பாதுக்காக்கப்படுமா?

எனவே, இந்த விடயம் தொடர்பாகத் துறைசார்ந்த அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள். சங்கத் தலைவர்கள் சிந்தித்து உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்று தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளருக்கு இந்தச் சங்கம் கடந்த 19 ஆம் திகதி மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை வினாத்தாள் தயாரிப்புப் பணிகளை ஆசிரியர்கள் பொறுப்பேற்க மாட்டார்கள்

## ஆசிரியர் சங்கச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 19

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உயர்தரப் பரீட்சை வினாத்தாள் தயாரிப்புப் பணிகளிலிருந்து இடை விலகியுள்ள நிலையில் அந்தப் பணியை ஆசிரியர்கள் ஒருபோதும் பொறுப்பேற்கமாட்டார்கள்.

ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலின்போது இலங்கை ஆசிரிய சங்கச் செயலாளர் யோசப் ஸ்ராலின் இவ்வாறு தெரிவித்தார்.

வைத்தீஸ்வரக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வின்போதே ஆசிரியர்கள் மத்தியில் இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிரியர் இடமாற்றக் கொள்கைச் சுற்று நிருபத்தின்படி விளக்கவுரையையும் நிகழ்த்தினார். அத்துடன் ஆசிரியர்களின் பதவியுயர்வுகள் யாவும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் வலயங்களால் இன்னமும் நடை முறைப்படுத்தவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள், சம்பள உயர்வு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. கல்வி அமைச்சிடமிருந்து சரியான தீர்வுகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. எனவே விரைவில் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார்.

அத்துடன் கலந்துகொண்ட ஆசிரியர்களுக்குத் தேசிய இடமாற்றக்கொள்ளைச் சுற்று நிருபத்தின் பிரதிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடமாகாண இலங்கை ஆசிரியர் சங்கச் செயலர் தே.செந்தூரன் மற்றும் யாழ். வன்னி மாவட்ட ஆசிரியர் சங்க செயலாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

# மண்டைதீவில் ஒரு நாளைக்கு இரு தடவை குடிதண்ணீர் விநியோகிக்க நடவடிக்கை

வேலணை, மே 20

மண்டைதீவுப் பிரதேசத்தில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. வேலணைப் பிரதேச சபையின் பவுஸர் ஊடாகத் தினமும் ஒருதடவை மட்டுமே நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. இது மக்களின் தேவைக்குப் போதுமானதாக இல்லை. எனவே, இதனைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொது அமைப்புக்களில் பிரதிநிதிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இந்தக் கூட்டத்திலேயே பிரதேச செயலர் ந.ரத்தின கோபாலன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்ற உறுப்பிர்களான ஈ.சரவணபவன், சி.சிறீதரன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வஸ்திரி அலன்ரின் ஆகியோருடன் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், உள்ளூர் அமைப்புப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மண்டைதீவு மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பாக உரியநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தினமும் இருதடவைகள் பிரதேச சபை பவுஸர் மூலம் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் எனக் கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டது. (ஒ)

# மட்டுப்படுத்தப்பட்ட சேவையில் குமுதினி

நெடுந்தீவு, மே 20

நெடுந்தீவு மக்களுக்கான சேவையை வழங்கும் குமுதினிப் படகில் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படகு அடிக்கடி பழுதடைந்து வந்த நிலையில் தற்போது திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு சேவைக்கு விடப்பட்டுள்ளது. இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபை மக்களுக்கு வழங்கியுள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குமுதினிப் படகில் 120 பயணிகள் மாத்திரம் ஏற்றப்படுவர். மோட்டார் சைக்கிள் ஏற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

குமுதினிப் படகின் மேல் கூடாரத்தில் இருந்தோ அல்லது குமுதினி படகின் ஏறும் வாயிலில் நின்றோ பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.


மக்கள் பயணத்துக்கான பொதி தவிர்ந்த வேறு பொதிகள், பாரமான பொருள்களை ஏற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது. வர்த்தக நோக்கோடு எந்தப் பொருள்களும் எடுத்துச் செல்ல முடியாது - என்றுள்ளது.

இந்த நடைமுறைகள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன எனவும் வீதிஅபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த நடைமுறைகளைப் பின்பற்றத் தவறும் பட்சத்தில் படகுச் சேவை பழுதடையும் நிலை ஏற்படும். இதனால் சேவை நிறுத்தம் இடம்பெறும் என்று மேலும் கூறப்பட்டது. ஊழியர்களின்கட்டுப்பாட்டை மீறி மோட்டார் சைக்கிள்கள், டீசல் பரல்கள் போன்றன ஏற்றிச்செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குமுதினியின் மேற்பகுதியிலும் பயணிகள் ஏறி பயணம் செய்துள்ளனர் எனவும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. இவ்வாறு கட்டுப்பாடுகளை மீறிப் பொது*மக்கள் நடந்துகொண்டால் குமுதினியின் சேவையை இடைநிறுத்த வேண்டிவரும் என்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7)

## நினைவாலயம்....



கவனிப்பார்களா: யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது உயிரிழந்த பதினொரு பேரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி கவனிப்பாரற்ற நிலையில் பற்றைகளால் சூழப்பட்டுக் காணப்படுகின்றது. (4-14)

# மானிப்பாய் இந்து மைதானத்தில் இன்று 'பவிலியன்' திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், மே 20

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நலன் விரும்பி ஒருவரின் தனிப்பட்ட நிதி உதவியில் அமைக்கப்பட்டுள்ள பார்வையாளர் அரங்கு (பவிலியன்) இன்று முற்பகல் 10 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.



இந்தக் கல்லூரியில் ஆரம்பகால பழைய மாணவனாகவும் விளையாட்டு வீரனாக, ஆசிரியராக, உபஅதிபராகக் கடமையாற்றிய அமரர் ஆர்.வி.ஆறுமுகத்தின் ஞாபகர்த்தமாக அவரது மகன் மருத்துவர் ஆ.இ.இராமநாதனால் 5 மில்லியன் ரூபா செலவில் இது அமைக்கப்பட்டுள்ளது.

கல்லூரிக்குப் பவிலியன் ஒன்றை அமைக்கப்பட வேண்டும் என்று கல்லூரி அதிபர் விடுத்த வேண்டுகோளை அடுத்து மருத்துவர் இ.ராமநாதன் முன்வந்து இதனை அமைத்துக் கொடுத்துள்ளார்.

இந்தத் திறப்பு விழா நிகழ்வு அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் இன்று இடம்பெறவுள்ளது.

இதனை அமைத்துக்கொடுத்துள்ளவரும் தற்போது லண்டனில் வசித்து வருபவருமான மருத்துவர் இ.ராமநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

யாழ்.குடாநாட்டில் உள்ள அரச பாடசாலைகளில் முதன்முதலாக அமைக்கப்பட்ட மிகப் பிரமாண்டமான விளையாட்டரங்கு பவிலியன் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)

# மரம் ஏறும் கருவி அறிமுகம்

வலி.வடக்கு, மே 20

பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தில் தென்னை, பனை மரங்களில் தொழில் செய்பவர்களுக்கான மரம் ஏறும் கருவி அறிமுக நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் தாவடி வீதியில் அமைந்துள்ள கோண்டாவில் இணுவில் பனை தென்னை வள அபிவிருத் திக் கூட்டறவுச் சங்க அலுவலகக் கட்டடத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

கோண்டாவில் - இணுவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் க.செல்வராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்திராகக் கலந்துகொண்டு இந்தக் கருவியை அறிமுகம் செய்து வைத்தார்.

இத்துடன் கோண்டாவில்-இணுவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட புதிய பனம் வெல்ல உற்பத்திக்கான தொழிற்சாலையையும் அமைச்சர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், பொது முகாமையாளர் மற்றும் கொத்தனிகளின் தலைவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.(த-86)

# எழுதுமட்டுவாழ் இளைஞர் லண்டன் விபத்தில் மரணம்

கொடிகாமம், மே 20

எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட கி.கிருஸ்ணகோபன் என்னும் இளைஞர் லண்டனில் இடம்பெற்ற வாகன விபத்தில் மரணமடைந்துள்ளார்.

இவர் செலுத்திச் சென்ற வாகனம் விபத்தில் சிக்கிய சமயம் பலத்த சேதமடைந்துள்ளது. அப்போது இந்த இளைஞரும் மரண மடைந்தார் என்று கூறப்படுகின்றது. (ம-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உளம் குளிர...**



பக்திப் பிரவாகம்: மன்னார் சிலாவத்துறையில் வெசாக் தினத்தன்று பொலிஸாரால் அமைத்து வழங்கப்பட்ட இந்து ஆலயத் திறப்பு விழாவின்போது பொலிஸ் உயர் அதிகாரிகள் பூசை வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். (601)

# திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையம் ஊடாக வன்னி விவசாயிகளுக்கும் மண் சோதனை

கிளிநொச்சி, மே 20

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு மண் பரிசோதனைகளை அவசரமாகச் செய்ய வேண்டி இருப்பின் யாழ்ப்பாணம், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தினூடாக அவற்றைச் செய்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டால் அதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல விவசாய நிலங்கள் உவரடைந்து காணப்படுவதாகவும் இவற்றுக்கான மண் பரிசோதனைகள் செய்யப்பட வேண்டும் எனவும் விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்தே இந்த அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டது.

கிளிநொச்சி, புதுமுறிப்புக் குளப் பகுதியில் அதிகமான விவசாய நிலப் பகுதிகள் உவர டைந்து காணப்படுகின்றன. இதேபோன்று ஏனைய இடங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றது.

மண்பரிசோதனை கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. எனவே மண்பரிசோதனையை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து இதற்குப் பதில ளித்த கிளிநொச்சி மாவட்ட விவசாய விதை ஆராய்ச்சித் திணைக்கள உத்தியோகத்தர், ஆறுமாத காலத்துக்குள் மண் பரிசோதகர் ஒருவர் எமது மாவட்டத்திற்கு வருகை தருவார். மண் பரிசோதிக்கும் உபகரணங்களும் கொண்டு வரப்ப டும் - என்றார். (க-6)

# அரிதாகி வருகிறது வாசிப்புப் பழக்கம்

**கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் கவலை**

கிளிநொச்சி, மே 20

தற்போது மாணவர்களிடம் வாசிப்புப் பழக்கம் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தற்போது 28ஆயிரம் மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர்.

இவர்களுக்கு கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற ஆசிரியர்களிலும் மாணவர்களிலும் வாசிப்புப் பழக்கம் என்பது அருகிக் காணப்படுகின்றது.

ஆனால் எதிர்கா லத்தில் கல்வி கற்றவர்க ளாகவே எல்லோரும் வாழவேண்டும். அதுவே எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும்.

ஒரு பெரிய எதிர்பார்ப்பினை நிறைவு செய்வதாயின் அதற்கு ஆசிரியர்களும் மாணவர்களும் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.

அதன் மூலம்தான் அதன் முழுப் பயன்களையும் அடைய முடியும். கிளிநொச்சி கல்வி வலயத்தில் இசுறு திட்டத்தின் கீழ் 04 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் கிளி/முருகானந்தா ம.வியும் ஒன்று.

எதிர்காலத் திட்டங்களை கருத்தில்கொண்டு இப்பாடசாலையின் அதிபர் செயற்பட்டு வருகின்றார்.

இந்த நிலையில் இப்பாடசாலை ஏனைய பாடசாலைகளுக்கு ஒரு கலங்கரை விளக்காக இருக்க வேண்டும் எனவும் வலயக்கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-6)

# மாதிரி வகுப்பறை திறந்து வைப்பு

முல்லைத்தீவு,மே 20

கிளிநொச்சி முருகானந்தா ம.வியில் புதிதாக அமைக்கப்பட்ட மாதிரி வகுப்பறை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் நிதியுதவியுடன் சேதமடைந்த தளபாடங்களைப் புனரமைத்தும் திருத்தியமைத்தும் மாதிரி வகுப்பறை ஒன்றை அமைக்கப்பட்டது.

அதனைத் திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பாடசாலை அதிபர் வரதன் தலை மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய வகுப்பறையைத் திறந்து வைத்து ஆசியுரை வழங்கினார்.

இந்த நிகழ்வில் கண்டாவளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை, அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திருச் செல்வம், கிராம அலுவலர் நந்தகுமார் மற்றும் பெற் றோர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். (க-6)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரு வருடங்களாகியும் நிரந்தர மருத்துவர் நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு இல்லை

முல்லைத்தீவு,மே 20

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர்வு இடம்பெற்று இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் இன்றுவரை நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் எவரும் நியமிக்கப்படாத நிலையில் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது மருத்துவ தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளில் சுமார் 2ஆயிரத்து 500 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரம் பேர் வரையில் மீளக்குடியமர்வு செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் மேற்படி மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர்கள் எவரும் இதுவரை நியமிக்கப்படாததால் நோயாளர்கள் வேறு இடங்களுக்குச்செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மூன்று முறிப்பு, கொம்பு வைத்தகுளம், சிறாட்டிகுளம், வீரப்பிராயர்குளம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தங்களுடைய மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதாயின் 12 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள மல்லாவி மருத்துவமனைக்குச் சென்று தமக்கான சிகிச்சைகளைப் பெற வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தப் பகுதி மக்கள் தமது மருத்துவ தேவைகளைப் பெரும் சிரமங்கள் மத்தியில் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, சம்பந்தப்பட்ட தரப்புகள் இந்த விடயத்தில் அக்கறை கொண்டு புதிய மருத்துவரை நியமித்து அந்தப் பகுதி மக்களின் மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எ-6)

## நெற்செய்கைக்கான உர விநியோகத்தில் தாமதம்

### விவசாயிகள் கவலை

கிளிநொச்சி,மே 20

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள வட்டக்கச்சிப் பகுதியில் 50 வீதமான சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட போதும் உரவிநியோகம் தாமதமடைந்து வருவதால் நெற்செய்கையில் பாதிப்பு வருமோ என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பிரதேசத்தில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளில் தொண்ணூறு வீதமான விவசாயிகள் பயிர்ச்செய்கை நிலங்களைப் பண்படுத்திய பின்னரே நெற்செய்கையை மேற்கொண்டுள்ளனர்.

விவசாய உள்ளீடுகள், உர விநியோகம் என்பன இதுவரை வழங்கப்படவில்லையென விவசாயிகளால் தெரிவிக்கப்படுகின்றது. உரிய காலத்தில் தங்களுக்கான விவசாய உள்ளீடுகளை பெற்றுத் தருமாறும் அந்தப் பகுதி விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-6)

## நாடகப் போட்டியில் செம்மலை ம.வி. முதலிடம்

கொழும்பு பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் நடத்திய நாடகப் போட்டியில் முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயம் முதலாவது இடத்தைப் பெற்றுச் சாதனை புரிந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற இந்த நாடகப் போட்டியில் செம்மலை மகாவித்தியாலயம் முதலாவது இடத்தையும், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் இரண்டாவது இடத்தையும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-555)

## போக்குவரத்துக்கு சிரமப்படும் விசுவமடுப் பகுதி பொதுமக்கள்

முல்லைத்தீவு,மே 20

விசுவமடுவில் இருந்து பரந்தன் வரையான பகுதிகளில் இருந்து கிளிநொச்சிக்கு வரும் பயணிகள் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதிகளில் இருந்து காலை வேளையில் அலுவலகங்களுக்கும் ஏனைய அலுவல்களுக்கும் செல்லும் பணியாளர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் போன்றோர் உரிய நேரத்துக்கு உரிய இடங்களுக்குச் செல்ல முடியாதுள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக இந்தப் பகுதி மக்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையினரிடமும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினரிடமும் பலமுறை கோரிக்கைகளை முன்வைத்த போதிலும் எதுவித பலனும் ஏற்படவில்லை என்று அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இதுவிடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து செயற்படுமாறும் மக்கள் கோருகின்றனர். (எ-405)

## பாடசாலைகள் சதுரங்கச் சங்கத்தினர் முதல் முறையாக கிளிநொச்சி வருகை

இலங்கைப் பாடசாலைகளின் சதுரங்கச் சங்கத்தினர் முதல் தடவையாக கிளிநொச்சிக்கு வருகை தந்து தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான செயற்றிட்டங்கள் குறித்துக் கலந்துரையாடியுள்ளனர். கிளிநொச்சி மாவட்ட சதுரங்க சங்கத்தின் ஏற்பாட்டில் இவர்கள் கடந்த 6ஆம் திகதி கிளி நொச்சிக்கு வருகை தந்து கிளி நொச்சி மகா வித்தியாலய அதிபர், சதுரங்க பொறுப்பாசிரியர் மற்றும் சதுரங்க வீரர்களுடன் கலந்துரை யாடியுள்ளனர்.

பாடசாலையின் அதிபர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங்கைப் பாடசாலை சதுரங்க சங்கத்தின் பொதுச் செயலாளர் என்.ஜீ.விமலவீர, சங்கத்தின் உப தலைவரும் 'சி' பிரிவு போட்டிகளின் ஒழுங்கமைப்பாளருமான ஹேமந்த ரத்னாயக்க மற்றும் கிளிநொச்சி மாவட்ட சதுரங்க சங்கத் தலைவர் தி.சிவரூபன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இலங்கைப் பாடசாலை சதுரங்கச் சங்கத்தினர் தமது பாடசாலை மட்டப் போட்டிகளை எதிர்காலத்தில் கிளிநொச்சியில் நடத்துவது தொடர்பாகவும் தேசிய மட்டப் போட்டிகளில் கிளிநொச்சி மாவட்ட வீரர்களை இணைத்துக் கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடினர். இந்தக் கலந்துரையாடலில் இலங்கை சதுரங்கச் சங்க கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளரான திருமதி பி.லதீஸ்வரியும் கலந்து கொண்டார்.

இந்த ஆண்டு நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டிகளில் முதன்முறையாகக் கிளிநொச்சி மாவட்டப்பாடசாலைகளின்சதுரங்க வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-405)

## சிறுபோக நெற்செய்கை கிளிநொச்சியில் ஆரம்பம்

கிளிநொச்சி,மே 20

இரணைமடுக் குளத்திலிருந்து நீர் திறந்து விடப்பட்டதையடுத்து கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை ஆரம்பமாகியுள்ளது.

இந்தக் குளத்தின் மூலம் 10 ஆயிரத்து 800 ஏக்கருக்கும் புதுமுறிப்புக் குளத்தின் மூலம் 486 ஏக்கருக்கும் பூநகரி சிறுநீர்ப்பாசனச் செய்கை மூலம் 400 ஏக்கருக்கும் வன்னேரிக்குளத்தின் மூலம் 130 ஏக்கருக்கும் கரியாலை நாகபடுவான் குளத்தின் மூலம் 500 ஏக்கருக்கும் பாலன் குளத்தின் மூலம் 100 ஏக்கருக்கும் இராமநாதபுரம் புழுதியாற்றின் மூலம் 62 ஏக்கருக்கும் செய்கை செய்யப்படவுள்ளன.

கல்மடு, பிரமந்தனாறு, அக்கராயன் ஆகிய குளங்களின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் இதனால் அந்தக் குளங்களின் மூலமாக இந்த ஆண்டு சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்படவில்லை எனவும் கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கடந்த ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் 54 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. (எ)



கிளிநொச்சி கல்வி வலய கரைச்சிக் கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டியில் 2ஆம் இடம்பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரியின் நாட்டிய நாடகத்தில் பங்குபற்றிய மாணவர்கள். (எ-405)

## தீர்ந்தது குடிதண்ணீர்ப் பிரச்சினை

கிளிநொச்சி, மே 20

கிளிநொச்சி முரசு மோட்டை முருகானந்தா ம.வியில் நீண்ட காலமாக நிலவிவந்த குடிதண்ணீர்ப் பிரச்சினையைக் கருத்தில்கொண்டுநலன்விரும்பியும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் செயலாளருமானசிமாணிக்கவாசகரால் குழாய்க் கிணறு ஒன்று அமைத்துவழங்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா ம.வியில் கடந்த பல ஆண்டுகளாகக் குடிதண்ணீருக்கான தட்டுப்பாடு நிலவிவந்ததுடன் மாணவர்கள் குடிதண்ணீரைப் பெறுவதிலும் பெரும்சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். இந்த நிலையில் குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்து தருமாறு பாடசாலைச் சமூகம் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் செயலாளரும் பாடசாலை நலன்விரும்பியுமான சி.மாணிக்கவாசகர் குழாய்க் கிணறு ஒன்று அமைத்துக் கொடுத்தார். இதனால் நீண்ட காலமாக நிலவி வந்த குடிதண்ணீர்ப் பிரச்சினைதீர்ந்துள்ளது.

இது தொடர்பாகப் பாடசாலை அதிபர் திருவரதன் கருத்துத் தெரிவிக்கையில்:-

இந்தப் பாடசாலையில் அக்கறை கொண்ட பலரால் பல்வேறு உதவிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் ஓர் அங்கமாக சி.மாணிக்கவாசகரால் இந்தக் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டமை பெரும் உதவியாக உள்ளது.

இதற்கு கல்விச் சமூகத்தின் சார்பில் நாம் என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம் எனத் தெரிவித்தார். (க-6)

## களவாக மணல் ஏற்றியவருக்கு தண்டப் பணமும் எச்சரிக்கையும்

முல்லைத்தீவு,மே 20

கிளிநொச்சி செல்வாநகர் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றியவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி செல்வா நகர்ப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றியதாகத் தெரிவித்து உழவு இயந்திரம் ஒன்றையும் அதன் சாரதியையும் கிளிநொச்சி பொலிஸார் கடந்த 15 ஆம் திகதி கைது செய்து கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முன்நிலைப்படுத்தினர்.

இதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மாவட்ட நீதிபதி சிவகுமார் குறித்த நபருக்குத் தண்டப் பணமாக 5 ஆயிரம் ரூபா விதித்தார். அத்துடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டு குறித்த நபர் எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டார் (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேகாலையில் 88 பேர் டெங்கு நோயால் பாதிப்பு

கேகாலை, மே 20

கேகாலை மாவட்டத்தில் 88 பேர் டெங்குநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை அடுத்து டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் திட்டம் முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் கடந்த வாரம் கேகாலை சுகாதார உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் உட்பட ஏனைய சுகாதாரத்துறையினரின் ஒத்துழைப்புடன் நகரத்தின் பல்வேறு இடங்களில் சோதனைகள் மேற் கொள்ளப்பட்டன.

இதன்போது டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் இனங் காணப்பட்டு அவை அழித் தொழிக்கப்பட்டன.

மாவட்டத்தில் கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் மழை டெங்கு நுளம்புகளின் பெருக்கத்துக்கு ஏதுவாக அமைந்துள்ளது என்று என மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.என். காமினி செனவிரத்ன தெரி வித்தார்.

மாவட்டத்தில் டெங்கு நோயால் பீடிக்கப்பட்ட 88 பேர் இதுவரை இனங்காணப்பட்டுள் ளனர் என்றும் அவர் கூறினார்.

வீட்டுக் கூரைககளைத் துப்புரவு செய்வது தொடர்பில் அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நகர மற்றம் கிராமப்புறங்களிலுள்ள வீடுகளைப் பரிசோதனை செய்வதற்கு பொது சன சகாதாரசேவை உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர் பொதுமக்கள் தத்தமது வீடுகளின் சுற்றுப் புறங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.



புத்த பெருமானின் 2600 ஆவது ஜெயந்தி தினத்தை முன்னிட்டு பெரும் எண்ணிக்கையான பௌத்த மக்கள் கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

# இருளில் மூழ்கும் திரியாய் கிராமம்; மின்சாரம் வழங்க மக்கள் கோரிக்கை

திருகோணமலை மாவட்டத்திலுள்ள திரியாய் கிராமத் துக்கு மின்சாரம் வழங்கத் துரித நடவடிக்கை எடுக்குமாறு திரியாய் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கிராமத்துக்கு மின்சார வசதிகளைப் பெற்றுக் கொள்ளப் பல்வேறு தரப்பினருடனும் கலந்தாலோசித்த போதிலும் இதுவரை எவ்வித பயனும் கிட்டவில்லை என்று திரியாய் விவசாய சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் மின்சார வசதி இல்லாததனால் இரவு வேளைகளில் இருளடைந்து காணப்படுகிறது.

அதனால் இரவில் வீட்டுக்கு வெளியே செல்லமுடியாதுள்ளது எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே, இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் திரியாய் கிராமத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# காசநோயாளர் எண்ணிக்கை திருமலையில் திடீர் அதிகரிப்பு

## அப்பகுதி மக்களிடையே பரபரப்பு

திருகோணமலை,மே20

திருகோணமலை மாவட்டத்தில் காசநோய் அதிகளவில் பரவி வருவதாக மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் வைத்திய அதிகாரி சுரேஸ் குமார் தெரிவித்தார்.

கடந்த வருடத்தை விட இந்த ஆண்டு காச நோயாளர் களின் எண்ணிக்கை அதிகரித் துள்ளது. இந்த வருடத்தில் இதுவரை 170 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். கிண்ணியா, மூதூர், கந்தளாய் போன்ற பகுதிகளிலேயே அதிகளவில் காசநோய் பரவி வருவதாகவும் மருத்துவர் தெரிவித்தார்.

காசநோயால் பாதிக்கப் பட்டவர்களை வைத்தியர்களின் மேற்பார்வையின் கீழ் வைத்து பராமரிப்பதற்குத் திருகோணமலை மாவட்டத்தில் காசநோய்க்கான விடுதி இல்லை என்ற குறைபாடு நீண்ட நாள்களாகக் காணப்படுகின்றது.

தொடர்ச்சியாக இருமல், இரவு நேரத்தில் காய்ச்சல், உடல் மெலிவு, களித் தொல்லை ஆகிய அறிகுறிகள் காணப்பட் டால், உடனடியாக மருத்துவ ஆலோசனையை நாடுவதே சிறந்தது என்றும் மருத்துவர் கூறினார்.

# பிரதேச சபை செயலாளர் பதவி நிரப்ப நடவடிக்கை

திருகோணமலை, மே 20

கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதேசசபை செயலாளர் வெற்றிடங்களுக்கு நிரந்தர அலுவலர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த அதி சிறப்புத்தர உத்தியோகத்தர்களை நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவுசெய்து நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்ய முடியாதவிடத்து தரம் 11ஐச் சேர்ந்த முகாமைத்துவ உதவியாளர்களைப் பிரதேச சபைகளுக்கு செயலாளர்களாக நியமிக்கவும் திட்டமிடப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் திட்டத்துக்கு கிழக்கு மாகாண அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளரான எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமான வாகனங்களின் இலக்கத்தகட்டுடன் மத்திய அரசு மற்றும் மாகாணசபை ஆகியவற்றின் சின்னங்களையும் இடுவதற்கான யோசனைக்கும் கிழக்கு மாகாண அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது .


# மரண அறிவித்தல்

# விஸ்வநாதர் செல்லையா



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நல்லூர், பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதர் செல்லையா 18.05.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வநாதர்- ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, ராசம்மா, அன்னம்மா, கனகம்மா மற்றும் நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பவளம்மாவின் அன்புக் கணவரும் சச்சிதானந்தம், சண்முகரெத்தினம், காலஞ்சென்றவர்களான கருணாகரன், இந்திரகுமார் மற்றும் மயில்வாகனம் நகுலேஸ்வரி, இராயேஸ்வரி மணிமாறன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஞ்சினிதேவி, யோகேஸ்வரி, சிலோசனாதேவி, பத்மாதேவி, சரோன் எலிசபத் (லண்டன்), மகேந்திரன், மகேந்திரம் ஆகியோரின் மாமனும் சதீஸ்குமார் (ஆஸ்திரேலியா), சத்தியேஸ்வரி, ரமேஸ் (பிரான்ஸ்), நிசாந்தினி, சிந்துஜெயன், றேணுகாந்தன், கபில்ராஜ், காலஞ்சென்ற தாரணி மற்றும் சதுர்ஜன், கலைமதி, கேமலக்ஷன், சகானா (லண்டன்), றோஹனா (லண்டன்), சர்மிளன், அனுசியா, ஜனகன், ஜதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.05.2011) வெள்ளிக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

பண்டாரிக்குளம்,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்
துரை பல்பொருள் வாணிபம், தாரணி புடைவையகம்.

(40-19-24)(4366)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினர், பொலிஸார் இணைந்து மட்டக்களப்பில் தொடர் தேடுதல்கள்

மட்டக்களப்பு, மே 20

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் படையினரும் பொலிஸாரும் இணைந்து தொடர் தேடுதல் நடவடிக்கையில் கடந்த சில நாள்களாக ஈடுபட்டு வருகின்றனர். இதனால் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு பதற்ற நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருவில், குறுமண்வெளி ஆகிய பகுதிகளை நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை முதல் சுற்றி வளைத்த பொலிஸாரும், படையினரும் வீடுவீடாகச் சென்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். வீதிகளில் சென்ற வாகனங்கள் மறிக்கப்பட்டு சோதனைக் குட்படுத்தப்பட்டதுடன், வீதியால் சென்ற பொதுமக்கள் உடற் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட் பட்ட திமிலைத்தீவு பகுதி மற்றும் மட்டக்களப்பு, திருமலை வீதியிலும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடிப் பிரதேசத்தில் உள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலி ஆதரவாளரும், வர்த்தகருமான ஒருவரின் வீட்டுக்குச் சென்ற விசேட குற்றப்புலனாய்வுத் துறையினர் அங்கு தேடுதலில் ஈடுபட்டனர்.

கறுப்புத்துணியால் முகத்தை மறைத்த நிலையில் சென்ற விசேட குற்றப்புலனாய்வுத் துறையினரே இந்தத் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வர்த்தகரின் தியேட்டர் மற்றும் வீடு என்பனவற்றில் குறித்த குழுவினர் சுமார் இரண்டு மணித் தியா லமாகத் தேடுதல் நடத் தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தேசிய அமைப்பாளரும் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என்றழைக்கப்படும் எட்வின் கிருஸ்ணானந்தராசா கைது செய்யப்பட்டதை அடுத்தே இந்தத் தேடுதல்கள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அரச வனத்தில் தேக்கு மரம் அறுத்த இருவர் மாட்டினர்

## ரூ. 6 லட்சம் பெறுமதியான குற்றிகளும் சிக்கின

பல்லேகல, மே 20

கல்கிரியாகம, பல்லேகல அரச தேக்கங்காட்டில் 6 லட்சம் ரூபா பெறுமதியான மரங்களைத் தறித்தார்கள் என்ற சந்தேகத்தில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

38 தேக்கு மரக் குற்றிகளும் அவற்றைத் தறிக்கப் பயன்படுத்திய மின்சார வாளும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டுடன் வன பரிபாலன சபையைச் சேர்ந்த அதிகாரியொருவருக்குத் தொடர்புகள் உள்ளதாக என்ற சந்தேகத்தில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகளின் சந்தைப் பெறுமதி சுமார் ஆறு லட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பிரதேசவாசிகள் தெரிவித்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே பொலிஸார் நடவடிக்கையில் இறங்கினர்.

சந்தேக நபர்கள் மரக்குற்றிகளுடன் தெக்கிராவ நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ச-5)

## திறப்பு.....



கல்முனை பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் புதிய கூட்ட மண்டபம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் கலந்துகொண்டு திறந்து வைக்கின்றார். (ச)

# பாடசாலைகளின் நிர்வாகத்தில் அரசியல் தலையீடு வேண்டாம்

## இந்து மாமன்றம் வேண்டுகோள்

இரத்தினபுரி,மே 20

சப்ரகமுவ மாகாணத்தில் தமிழ்க் கல்வி சீரடைய வேண்டுமானால் பாடசாலை நிர்வாகத்தில் அரசியல் தொழிற்சங்கங்களின் தலையீடுகள் முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும். அவ்வாறான நிலை ஏற்பட்டால் மட்டுமே தமிழ் மாணவர்களின் கல்வித் தரம் மேம்படும் .

- இவ்வாறு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கல்விக் குழுச் செயலாளரான தர்மலிங்கம் மனோகரன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

பலாங்கொடை, கனகநாயகம் தமிழ் மத்திய கல்லூரியின் அதிபர் நியமனம் தொடர்பாக வெளியிட்டுள்ள அவர் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பலாங்கொடை கல்வி வலயத்திற்குட்பட்டது பலாங்கொடை கனகநாயகம் தமிழ் மத்திய கல்லூரி. கடந்த ஒரு வாரத்தில் அங்கு மூன்று அதிபர்கள் நியமிக்கப்பட்டு பின்னர் மாற்றப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ மாகாணத்திலுள்ள ஒரேயொரு 1 ஏ,பி, தரத் தமிழ்ப் பாடசாலையான இந்தப் பாடசாலையில் இடம்பெற்று வரும் அதிபர் நியமனக் குளறுபடிகளால் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

''கல்லூரியில் இடம் பெற்றுவரும் அதிபர் நியமனக் குளறுபடிகளுக்குக் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் மாகாணத்திலுள்ள சில தமிழ் அரசியல் வாதிகளுமே காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது''- என்று மனோகரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.(ச)

# திருடுக் குற்றத்தில் 3 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது

கண்டி,மே 20

கண்டி, கட்டுகஸ் தோட்டை, அக்குறணை ஆகிய பிரதேசங்களில் வர்த்தக நிலையங்களை உடைத்து சுமார் 12 லட்சம் ரூபா பெறுமதியான பொருள் களைத் திருடினர் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த செவ்வாய்க்கிழமை கட்டுகஸ்தோட்டை பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் கொழும்பு மற்றும் கம்பஹா பிரதேசங்களைச் சேர்ந்தவர்களெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் திருடிய பொருள்களை விற்பனை செய்து பெற்ற பணத்தின் ஒரு தொகையும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேகநபர்கள் நேற்று வியாழக்கிழமை கண்டி பிரதான நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர். (ச)

# மது விலக்குக் கோரி தேரர் பட்டினிப் போர்

மதுபான நிலையங்களுக்கு அனுமதி வழங்குவதை அரசு உடன் நிறுத்த வேண்டும் என்று கோரி திருகோணமலையில் தேரர் ஒருவர் உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சேருவில மங்கல ரஜமகா விகாராதிபதியான நாயக்க தேரர் சரன கீர்த்தியே நேற்று முன்தினம் புதன்கிழமை தொடக்கம் உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ளார். பசுவதையைத் தடை செய்ய வேண்டும் என்றும் அவர் கோரிக்கை வைத்துள்ளார்

தனது இரு கோரிக்கைகளுக்கும் அரசு சாதகமான பதிலை வழங்கும் வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்று அவர் அறிவித்துள்ளார். பெரும் எண் ணிக்கையான மக்கள் தேரருக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். (ச)

# தோட்டத் தொழிலாளர்கள் பணி நிறுத்தப் போராட்டம்

## உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தக் கோரிக்கை

தலவாக்கலை, மே 20

தலவாக்கலை, பெயார் வெல்வலஹா தோட்டப் பிரிவைச் சேர்ந்த சுமார் 150 தொழிலாளர்கள் கடந்த மூன்று நாள்களாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணி நிறுத்தப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

தோட்டத்தில் தொழில் இன்றி வசிப்பவர்களுக்குத் தொழில் வழங்கவேண்டும், தோட்டத்தொழிலாளர்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டத்தினை முன்னெடுப்பதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர். தொழிலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பில் பேச்சு இடம் பெற்று வருவதாகத் தோட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தமிழ் மாணவருக்கும் இராணுவப் பயிற்சியா?

## ஏற்க முடியாது என்கிறார் யோகேஸ்வரன் எம்.பி.

மட்டக்களப்பு, மே 20

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ பயிற்சி வழங்கும் திட்டத்தை அமைச்சு உடன் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சீனித்தம்பி யோகேஸ் வரன்.

குறிப்பாகத் தமிழர் மாணவர்களுக்கு இத்தகைய பயிற்சிகளை வழங்குவதைப் பெற்றோர்கள் ஏற்க மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மனு ஒன்றையும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்களுக்குத் தங்களின் திட்டம் சிலவேளை பொருத்தமாக அமையலாம் என்று தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ் மாணவர்களுக்கு இது தேவையற்ற விடயம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

''இந்த நாடு ஜனநாயக நாடு. இதை ஓர் இராணுவ ஆட்சி நாடாக மாற்ற முயல வேண்டாம். பல்கலைக்கழகங்களுக்குத் தமது பிள்ளைகளை அனுப்பும் தமிழ் பெற்றோர் அங்கிருந்து கல்வியையும் பட்டத்தையுமே எதிர்பார்க்கிறார்கள்; இராணுவப் பயிற்சியை அல்ல.

பல்கலைக்கழங்களில் இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டால் தமிழ்ப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பல்கலைக்கழகம் செல்ல அனுமதிக்கமாட்டார்கள்'' - என்று ஜனாதிபதிக்கு அனுப் பிய கடிதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்கள் தமது உரிமைக்காகவும் சுதந்திரத்துக்காகவும் ஏங்கிக் கொண்டிருக்கும் இந்தவேளையில் 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் இராணுவப் பயிற்சி வழங்கும் திட்டம் அமைந்துள்ளது என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(ச-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. தெற்கு பிர

# புதிய கட்டடத் திறப்பு விழாவும்

20.05.2



## நாடும் நாமும் நலம்பெற வாழ்த்துக்கள்



பூர்வீகமான சிறப்புடைய முதல் தமிழ்ராச்சிய மன்னர் உக்கிரராசசிங்கனின் வரலாற்றுச் சிறப்புடைய வலிதெற்கு பிரதேசமாகிய சுன்னாகத்தில் குமாரசாமிப்புலவர் முதலான கல்விமான்களும் வர்த்தக பிரமுகர்களும் நாட்டின் அபிவிருத்திக்கு மூலகாரணமான விவசாயப் பெருமக்களும் நிறைந்து வாழும் பிரதேச செயலக பிரிவிற்கு: அமைவான கட்டட வசதி இல்லாதிருந்தது. பலருடைய முயற்சிகளின் பயனாக இப்பொழுது அழகிய இரண்டுமாடிகளையுடைய கட்டடம் அமைப் பெற்று திறப்பு விழா நடைபெறுகின்றது. கட்டட வசதிகள் அமைவதன் மூலம் இப்பிர தேசத்தின் அபிவிருத்திகளும் சிறப்புகளும் அதிகரிக்குமென மகிழ்ச்சியடைகிறோம். புதிய கட்டடத் திறப்புவிழா சிறப்புற நடைபெறவும், அவ்விழாவையொட்டி வெளியிடும் மலர் பயனுறவும் கதிரமலைநாதர் ஸ்ரீ சுவர்ணாம்பிகாதேவி சமேத பொன்னம்பலவாணப் பெருமானின் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து இதிற் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்றிகளையும் எமது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இறைபணியிலுள்ள நா.சர்வேஸ்வரக்குருக்கள்

## வாழ்த்துச் செய்தி



வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம் தனது புதிய கட்டடத் திறப்பு நிகழ்வை முன்னிட்டு வெளியிடுகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்கு வதற்கு வாய்ப்புக்கிடைத்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். புதிய செயலகக் கட்டடம் அமையப்பெற்று விரிந்த மனத்துடன் மக்களுக்குச் சேவையாற்ற வாய்ப்புக் கிடைத்திருப்பது மட்டற்றமகிழ்ச்சி தருகின்றது. சமூகத்திற்கு அபிவிருத்தியை எடுத்துச் செல்லும் முக்கிய நிறுவனங்களில் ஒன்றாகிய பிரதேச செயலகங்கள் நவீன வசதி வாய்ப்புக்களுடன் அமைவதென்பது பிரதேச அபிவிருத்திக்கு வலுச்சேர்க்கும் ஒரு அம்சமாகவே பார்க்கப்படுகின்றது. இக்கட்டடத்தினை அமைக்க முன்னின்று உழைத்துள்ள பிரதேச செயலாளர் திருமதி. மஞ்சுளாதேவி சதீசன் உள்ளிட்ட குழுவினருக்கு எனது பாராட்டினைத் தெரிவித்து, இவர்களது பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

K.N. டக்ளஸ் தேவானந்தா நா.உ - செயலாளர் நாயகம், ஈ.பி.டி.பி
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்,
இணைத்தலைவர் யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்ட இணைப்புக்குழு

## உடுவில் பிரதேச செயலகத்தின் பணி சிறப்புற தொடர புதிய கட்டடம் வழி வகுக்கட்டும்



உடுவில் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா நிகழ்விற்கு வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். உடுவில் பிரதேச செயலகம் இதுவரை பழைய கட்டடத்தில் உரிய வசதிகளின்றி இயங்கி வந்ததை நானறிவேன். புதிய கட்டடமானது இந்தக் குறைபாட்டை நீக்கி; மக்களுக்கு உரிய சேவைகள் உரிய வகையில் கிடைப்பதற்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

புதிய கட்டடத்தில் சகல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு மக்களுக்கான சேவை தொடரப்படவேண்டியது அவசியமாகும். இதற்கென பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து உத்வேகத்துடன் செயற்படவேண்டியது அவசியமாகும். புதிய கட்டடத் திறப்புவிழா நிகழ்வில் என்னையும் அதிதியாக கலந்து கொள்வதற்கு அழைப்புவிடுத்தமைக்காக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

## வாழ்த்துச் செய்தி



வலிகாமம் தெற்கு, உடுவில் பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடத் திறப்புவிழாவினை முன்னிட்டு வெளியிடப் படும் "சிறப்பு மலருக்கு" எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

வலிகாமம் தெற்கு, உடுவில் பிரதேசம் பல வளங்களையும், சிறப்புக்களையும் கொண்டிருப்பதுடன், பல கல்விமான்களையும், அறிஞர்களையும், புத்திஜீவிகளையும் உருவாக்கிய பெருமைபெற்ற பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் அமையப்பெற்ற இப்புதிய செயலகமானது மக்கள் துயர்போக்கவும், வறுமைப்பிணியை நீக்கவும், பிரதேச அபிவிருத்தியை துரிதமாக முன்னெடுத்துச் செல்லவும் அரும்பணியாற்றி; எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன், எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திருமதி றூபினி வரதலிங்கம்,
மேலதிக அரசாங்க அதிபரும், மேலதிக மாவட்டச் செயலாளரும், யாழ்மாவட்டம்.

## வாழ்த்துச் செய்தி



கதிரமலைச்சிவனும் அரிஹர புத்திர ஐயனாரும் வீற்றிருக்கும் அழகு பொலிந்த ஊராம் உடுவில் பிரதேசத்தில் புத்தம் புதிதாய் வடிவமைக்கப் பெற்ற இக்கட்டடம் எம் மக்களின் புனித சேவைக்காக ஆயத்தமாவதையிட்டு கட்டடத் திணைக்களம் சார்பாக நாம் மிக்க மகிழ்வுறுகின்றோம்.

உடுவிலில் ஆயிரமாயிரம் மக்கள் தம் தேவைகளை, குறைகளை தீர்த்து வைக்கும் இன்னோர் கோயிலாக இச்செயலகம் செயற்படப் போவதையிட்டு நாம் மனநிறைவு கொள்கின்றோம். போர் அனர்த்தங்களால் சகலதையும் தொலைத்துவிட்ட நம் மக்களுக்கு பிரதேச செயலக ஊழியர்கள் அனைவரும் இன்முகத்துடன் உபசரித்து, தாமாகத் தேவைகளை கேட்டறிந்து பூரண திருப்தியளிக்கும் வகையில் தங்கள் சேவையை இப்புதிய கட்டடம் ஊடாக அன்புடன் அள்ளி வழங்கப் போகிறார்களே என்பதை எண்ணிப் பார்க்கையில் கட்டட உருவமைப்பில் பங்குகொண்ட எம் திணைக்கள ஊழியர்கள், ஒப்பந்தகாரர் உள்ளிட்ட தொழிலாளர்கள் அனைவரும் பட்ட கஸ்ரங்கள் எல்லாம் காற்றாய்ப் பறந்து மனம் பூரித்து நிற்கின்றோம். "வாழ்க மக்கள் சேவை நிறைவுடன் வளர்க நம் மக்கள்"

கந்தசாமி குகநேசன், பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா), யாழ்ப்பாணம்.

## வாழ்த்துச் செய்தி



வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகத்தின் புதிய செயலகக் கட்டட திறப்பு விழாவில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்கச் சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். அதற்கும் மேலாக வலிகாமம் தெற்கு பிரதேசத்தின் உதவி அரசாங்க அதிபராக தற்போதைய கட்டடத்தில் கடமையாற்றி இருந்தவன் என்ற வகையில், புதிய வசதிகளைக் கொண்ட கட்டடம் கிடைத்தமையையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது.

மாற்றங்கள் எப்போதாவது நிகழும் என்ற நிலையிலிருந்து மாற்றங்களே நிரந்தரமாகிவிட்ட அவசர நிலைமைகளோடு கூடிய யதார்த்தமான எதிர்காலம் சவாலாகியுள்ளது. கால மாற்றங்களுக்கு ஏற்ப தேவைகளும் மாற்றமடைகின்றன. அந்தவகையில் சேவைகளை மக்களுக்கு வழங்குவதில் முக்கியமானதும் அவசியமானதுமான பங்கினை பிரதேச செயலகங்கள் வகித்துக் கொண்டிருக்கின்றன. இந்த வகையில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்திற்கு சகல வசதிகளும் கொண்ட புதிய மாடிக்கட்டடம் கிடைக்கப் பெறுவது ஒரு வரப்பிரசாதம் என்றே கருதுகின்றேன். புதிய கட்டடம் நிலைத்து நின்று பிரதேச மக்களுக்கு நல்லாட்சியுடன் சேவை வழங்க உறுதுணையாக இருக்கப் பிரார்த்திக்கிறேன்.

வே. வீரபத்திரபிள்ளை, முன்னைநாள் உதவி அரசாங்க அதிபர்

## வாழ்த்துச் செய்தி



நான் இலங்கை நிர்வாக சேவையில் நியமனம் பெற்ற 1991ஆம் ஆண்டு முதலாக 1994ஆம் ஆண்டு காலப் பகுதி வரை உடுவில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய நினைவலைகள் இன்றும் என் நெஞ்சில் பசுமைபாக உள்ளது. இன்று நான் பணியாற்றிய இப்பிரதேச செயலகம் புதுப்பொலிவு பெற்று புதுமை மிக்கதாக பொலிவுற்று அமைந்திருப்பது கண்டு யாழ் மண்ணின் - மகள் என்ற வகையிலும், நான் பணியாற்றிய உடுவில் பிரதேசம் என்ற வகையிலும் மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன்; இச்செயலகம் மக்கள் சேவையில் சிறக்க வாழ்த்துகிறேன்.

தனுஜா முருகேசன், சிரேஷ்ட உதவிச் செயலாளர் (காணி) காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

## வாழ்த்துச் செய்தி



கலை, கலாசாரம், கல்வி மற்றும் பாரம்பரிய பண்பாடுகள் எ
சிறப்பம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள வலிகாமம் தெற்கு
அப்பிரதேச மக்களுக்கான பணிகள், சேவைகளையாற்றவென 1972
கட்டடத் தொகுதியாகத் தோற்றம் பெற்ற உடுவில் பிரதேச செயலக
மாற்றத்திற்கும், தேவைகளுக்கும் அமைவாக இன்று போதிய இடவசதிகள், அடிப்ப
அனைத்தையும் கொண்டதொரு விசாலமான கட்டடத்தொகுதியாக மலர்ந்
நிற்கின்றது.

யாழ் மாவட்டம் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள், புனர்நிர்மாணப் பணிகள்
மற்றும் மீள்குடியேற்றப் பணிகள், வறுமையிலிருந்து மக்களை மீட்டெடுத்து அவர்கள்
தரத்தை மேம்பாடடையச் செய்யும் சமுர்த்தித் திட்டம், சமூக பாதுகாப்புச்
முன்னெடுக்கப்படும் ஓய்வூதியத் திட்டம் எனப் பல்வேறு செயல்திட்டங்களை முன்
அதிக அக்கறையும், கவனமும் செலுத்தி வருகின்ற இவ்வேளையில் பிரதேச செ
பங்களிப்பு அபிவிருத்தி தொடர்பில் மிக முக்கியமானதாகும். இந்நிலையில் பே
வசதிகளற்ற பிரதேச செயலகங்களை வசதிவாய்ப்புக்களுடனான கட்டடத் தொகுதி
வேண்டும் எனும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உன்னத நோக்கில்
நிதியின் மூலம் உடுவில் பிரதேச செயலகம் புதியதொரு வடிவம்பெற்று பெ
தேவைக்கான திறப்பு விழாவினை இன்று காண்கின்றது.

சகல நிர்வாக அலகுகளும் பன்முகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கு
கட்டத்தில் சகல வசதிகளுடனும் எழிலுற எழுந்துநிற்கும் இப்பிரதேச செயலகச் செ
யாவும் மென்மேலும் வளர்ந்து, சிறந்து நற்சேவை செய்திடவும், இதன் திறப்பு
சிறப்புறவும் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

திருமதி. இமெ
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலா

## வாழ்த்துச் செய்தி



இப்பிரதேசம் தனித்து இயங்கத் தொடங்கிய காலம் முதல் தனியான
அபிவிருத்தி மற்றும் சனத்தொகை வளர்ச்சி என்பன பிரதேசத்தின்
புதிய பிரதேச செயலகக் கட்டடத்திற்கான அவசியமும் தவிர்க்க முடி
இவ்விடத்திலே எமது புதிய செயலகக் கட்டுமானப் பணிகள் ஆரம்
இடநெருக்கடியை ஒருபோதும் மறந்துவிடமுடியாது. 'வலிவந்து வழிபிறப்பது'
அயலவர்களுக்கும், இடம் தேவைப்பட்டபோதெல்லாம் தடையேதும் சொல்லாது
அவர்களுக்கும் இதனோடு தொடர்புபட்ட அனைவருக்கும் எமது மனப்பூர்வமான ந
இரண்டரை ஆண்டுகால கடின உழைப்பால் உயர்ந்து நிற்கின்ற எமது
தொடர்வதற்கு வாழ்த்துவதோடு, இக்கட்டடத்திற்கான நிதியுதவியை நல்கிய
அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் மேலும் எமது பிரதேசத்தின்
திறப்புவிழாச் சிறப்புமலர் சிறப்புற வெளிவருவதற்கு உதவிய அனைவருக்கும் இதய

## வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணத்தின் தொல்லியல் வரலாற்று முக்கியத்துவம் வாய்
கட்டடத்திறப்புவிழா இடம் பெறுவது குறித்தும், சிறப்பு மலருக்கு
மிகவேகமாக வளர்ச்சியடைந்துவரும் உலகியல் மாற்றத்திற்கு
மாற்றியமைப்பதன் மூலமே நிறைவான சேவையை வழங்கமுடியும். பி
கருதப்படுகின்றன.

வலி தெற்கு பிரதேசம் பல்வேறு கலை கலாசாரப் பெருமைகளைக் கொ
இன்றைய உலகில் புதிய கட்டடத் தொகுதியில் செயற்படவுள்ள உடுவில் பிர
சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் மக்களுக்கு இதயசுத்தியுடனும், அர்ப்பணிப் புட
எனது வேண்டுகோளாகும்.

## வாழ்த்துச் செய்தி



இயற்கை அழகு எழில் கொஞ்சும் யாழ் குடாநாட்டில் பல்
விளங்குகின்றது. இங்கு பொது மக்களிற்குரிய பல்வகைப்பட்ட சே
பொருந்திய புதிய கட்டடமானது நிர்மாணிக் கப்பட்டமை போற்றுதற்
இப்பிரதேச செயலகம் மேலும் அதிக வினைத்திறமையுடன் கூடியது
வழங்கி போற்றுதற்குரிய பிரதேச செயலகமாக மிளிர வேண்டும் என்று
தொலைநோக்கை அடையுமுகமாக குறிப்பான சிந்தனைகள் மற்றும் யுக்திகளுடன்
பெற்றிட இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரதேச செயலக
# ...ம் சிறப்பு மலர் வெளியீடும்

...05.2011





## ஆசிச்செய்தி

உடுவில் பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் சிறப்புற நடைபெற்று வருவதை நினைத்து நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்நிலையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடம் உடுவில் பிரதேசத்துக்கே பெருமை சேர்க்கின்றது. பிரதேச மக்களின் நலன்களில் அக்கறை கொண்டு புதிதாக, அழகான ஒரு கட்டடத்தை அமைக்க முன்வந்த தலைவர்களை பாராட்டுகின்றேன். இப்பிரதேச செயலகம் மக்கள் பணியில் மேலும் வளரவும், சகல வழிகளிலும் வளர்ச்சி பெறவும் வாழ்த்துகின்றேன்.

**அருட்தந்தை சாள்ஸ் ஜஸ்ரின்,** உடுவில் - மல்வம் - பங்கு



## வாழ்த்துச்செய்தி

உடுவில் பிரதேச மக்களுக்குச் சேவையாற்றுவதற்காக புதிய செயலகக் கட்டடம் அமைக்கப்பட்டுத் திறக்கப்படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். முப்பது ஆண்டுகளாக தொடர்ந்த போரினால் வடக்கு, கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன் பிரதேச அபிவிருத்தியும் பின்தங்கியிருந்தது.

உட்கட்டமைப்பு வசதிகள் சீராக அமைத்து, நிர்வாக இயந்திரம் வினைத் திறனுடன் இயங்கும்போது மக்களின் வாழ்க்கைத்தரமும் பிரதேசத்தின் அபிவிருத்தியும் மேம்படுகின்றன. எனவேதான் இன்று ஆட்சியிலிருக்கும் அரசு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி நிர்வாக இயந்திரத்தை வினைத்திறனுடன் இயங்குவதை பிரதான அக்கறைக்குட்படுத்தி வருகிறது.

இந்தப் புதிய செயலகமானது, இந்தப்பிரதேசத்திற்கும் நாட்டிற்கும் இந்தப் பிரதேச மக்களுக்கும் சிறப்பான பணிகளையும், பங்களிப்பையும் வழங்க வேண்டும். அதற்கு இங்கே கடமையாற்றுகின்ற பணியாளர்கள் அனைவரும் முழுமனதோடு உழைக்கவேண்டும் என்று கேட்டு வாழ்த்துகின்றேன்.

**முருகேசு சந்திரகுமார் நாடாளுமன்ற உறுப்பினர்**
பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர், உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்.



## வாழ்த்துச்செய்தி

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக புதிய பணிமனை வைபவரீதியாக 20.05.2011ஆம் திகதி திறந்து வைக்கப்படுவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். பிதேச செயலகங்களுக்கான நவீன வசதிகள் கொண்ட பணிமனை அமைப்புத் திட்டத்தின் படியான இந்த புதிய கட்டட அமைப்பு, பிதேச செயலக அலுவலர்கள் தமது கடமைகளை நவீன வசதிகளுடன் நிறைவேற்ற உதவும் என நம்புகிறோம்.

அதேபோல இப்பிரதேச மக்களும் தமது தேவைகளை இலகுவாகவும், துரிதமாக பெற்றுக் கொள்ள இந்தப் பணிமனை வழிவகுக்கும் என நம்புகிறோம். இந்த கட்டட வேலைகளை செய்தவர்களுக்கும், விழா ஒழுங்குகளை ஏற்பாடு செய்தவர்களுக்கும், பிரதேசசெயலாளர் உள்ளிட்ட சகல அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் எமது பராட்டுதல்களும், நல்வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

**மாவை சோ.சேனாதிராசா,**
யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு



## வாழ்த்துச் செய்தி

செந்தமிழ் ஊற்றெடுத்து செவிகளில் பாட்டிசைக்கும் யாழ்ப்பாண மண்ணிலே சிறப்புகள் யாவும் தங்கும் வலிகாமம் பகுதியில் வளம் மிகு பிரிவாம் வலிகாமம் தெற்கு பிரதேசத்திற்கு இன்று மகிழ்ச்சி பொங்கும் நன்னாளாகும்.

கல்வி, பண்பாடு, ஆன்மீகம், அறிவியல், விவசாயம், கைத்தொழில் என எல்லாத்துறைகளிலும் மிளிரும், உழைப்பால் உயர்ந்தவர்களை உருவாக்கிய தாவடி, இணுவில், உடுவில், சுன்னாகம், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் முதலான சீர்மிகு கிராமங்களின் தொகுதியான வலி–தெற்கு பிரதேசத்திற்கு நிறைவான பணியை மேற்கொண்டு வரும் பிரதேச செயலகத்திற்கு புதுப்பொலிவோடு நிமிர்ந்து நிற்கும் இப்பணிமனைச் செயலகம் மேலும் சிறப்புச் சேர்க்கும் என்பது எனது திடமான எண்ணம்.

இலங்கையின் நிர்வாக முறைமையில் மக்களுடன் நெருக்கமான பணிபுரியும் பிரதான பணித்தலம் பிரதேச செயலகமே ஆகும். மகிழ்விலும் இடரிலும் மக்களுடன் இணையும் இப்பணித்தலத்திற்கு கிடைத்த புதுமனை என்பது இப்பிரதேச மக்கள் அனைவருக்குமே புதிய தாய்மனை கிடைத்த மகிழ்வை வழங்குவதாகும். இம்மண்ணில் பணிபுரிந்த வகையிலும் சில காலம் இப்பிரிவில் வசித்திருந்த நினைவுகளிலும் இம் மகிழ்வான நிகழ்வில் எம் மக்களோடு என் மன நிறைவை தெரிவிப்பதுடன் மேலும் அவர்களுக்கான சேவையில் இப் பணிமனை சிகரங்களைத் தாண்டி வளர்ச்சியடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சிவகுருநாதன் திருவாகரன்,**
செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடமாகாணம்.



## வாழ்த்துச் செய்தி

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்திற்கு 11383 சதுர அடி பரப்பளவுடையதும் அதனோடு இணைந்த வசதிகளைக் கொண்டதுமான பிரமாண்டமானதொரு புதிய கட்டடத்தொகுதி, பெருநிதிகொண்டு அமைக்கப்பெற்றிருப்பது இப்பிரதேச வாழ்வியலில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒரு நிகழ்ச்சியாகும். பிரதேச செயலக நிருவாகக் கட்டமைப்பின் கீழ் வருகின்ற அனைத்துச் செயற்பாடுகளும் "ஒரு கூரையின் கீழ்" வருவதென்பது மாத்திரமன்றி பரந்த மனதுடன் பணிபுரிவதற்கும் இக்கட்டடம் வழி வகுக்கும் என நம்பலாம்.

இப்பிரதேச மக்களின் வாழ்வியலுக்கு முக்கியத்துவம் தந்து நிற்கும் இப்புதிய கட்டடம் மக்களுக்குப் பெரிதும் பயன்படும் என நம்புகின்றேன். இப்புதிய கட்டடம் சிறப்புற அமைய உந்துசக்தியாகவிருந்த அனைவருக்கும் எனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன் திறப்புவிழாவும் சிறப்பு மலர் வெளியீடும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**திருமதி. யசோதா உதயகுமார்,**
உதவி பிரதேச செயலாளர், பிரதேசசெயலகம் வலிதெற்கு உடுவில்



## வாழ்த்துச் செய்தி

இன்று நடைபெறும் திறப்புவிழா நிகழ்வினையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்வெய்துகின்றேன். வலிதெற்கு மக்களின் நீண்ட காலக் கனவு இன்று நிறைவெய்துகின்றது. நான் பதில் பிரதேச செயலராக இருந்த காலத்தில் மேற்கொண்ட ஒரு முயற்சி இன்று முழுமையடைந்திருப்பதை இட்டு, தனது குழந்தையின் வளர்ச்சி கண்டு இன்புறும் ஓர் தாயின் மனநிலை தான் எனக்கு ஏற்படுகின்றது.

ஒரு பிரதேச மக்களின் வாழ்வியலில் பிரதேச செயலகம் எத்துணை முக்கியத்துவம் பெறுகிறது என்பதனை நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை. சகல வசதிகளையும் கொண்ட ஒரு பிரதேச செயலகம், அங்கு கடமையாற்றுகின்ற அலுவலர்களின் மனதில் மகிழ்ச்சிகரமான நிலையைத் தோற்றுவித்து, அவர்கள் சேவையாற்றுகின்ற மக்களுக்கு நிறைந்த சேவையினை வழங்குவதற்கு உந்துசக்தியாக அமையும். எனவே இச் செயலக எல்லைப் பிரிவிற்குள் வாழ்கின்ற மக்களின் எதிர்பார்ப்பிற்கிணங்க அவர்களுக்கான சேவையினை வழங்க அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் இச் செய்தியினை நிறைவு செய்கின்றேன்.

**க.கேதீஸ்வரன்,** ஓய்வு பெற்ற பிரதேச செயலர்



## வாழ்த்துச் செய்தி

மக்களின் தேவையறிந்து தக்க தருணத்தில் தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றும் "வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம்" இன்று மேலும் தன் சேவையை விரிவாக்க உளம் கொண்டு புதிய கட்டடம் ஒன்றினைத் திறப்பதையிட்டு நான் பேருவகை அடைவதுடன், அவர்களின் தன்னலமற்ற சேவை என்றும் மக்களுக்காய் பல்கிப் பெருக எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன். "அலுவலகங்களுக்காகவும் அலுவலர்களுக்காகவும் மக்களல்ல" "மக்களுக்காகவே அலுவலகங்களும் அலுவலர் களும்" என்பது தான் இன்றைய நியதி. இதை யாவரும் மனங்கொள்ள வேண்டும். வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தின் சேவைதழைத் தோங்க வாழ்த்துகின்றேன். வலிகாமம் தெற்கு பிரதேச செயலகமே சேவைக்காய் உன்னகத்தே மேலும் மேலும் வசதிகள் கொண்ட கட்டடத்தொகுதிகளைப் புதிது புதிதாய்ப் பெற்று மக்களுக்குச் சிறந்ததும் திறந்ததுமான உயர் சேவையாற்றுவாய் என எதிர்பார்த்து உவகையுடன் ஊற்றாக நீ நிலைக்க வாழ்த்துகின்றேன்.

**ஆ.சிவசுவாமி, பிரதம செயலாளர், வடமாகாணம்.**

...டுகள் எனும் பல்வேறு
...மம் தெற்கு பிரதேசத்தில்
...வென 1972இல் தனியான
...தச செயலகமானது, கால
...கள், அடிப்படை வசதிகள்
...ாக மலர்ந்து நிமிர்ந்து

...ளப் பணிகள், புனர்வாழ்வு
...து அவர்கள் வாழ்க்கைத்
...துகாப்புச் சபையினால்
...களை முன்னெடுப்பதில்
...பிரதேச செயலகங்களின்
...லையில் போதிய கட்டட
...த் தொகுதியாக அமைக்க
...த நோக்கில் ஒதுக்கப்பட்ட
...பெற்று பொதுமக்களின்

...ாண்டிருக்கும் இக்கால
...செயலகச் செயற்பாடுகள்
...ுன் திறப்புவிழா நிகழ்வு

**...ருமதி. இமெல்டா சுகுமார்**
...வட்டச் செயலர், யாழ் மாவட்டம்.

...ல் தனியானதொரு கட்டடத்தில் இயங்கிவந்துள்ளது. எனினும் நாளும் வளரும் நாட்டின்
...பிரதேசத்தின் தேவைகளையும் தவிர்க்கமுடியாதபடி அதிகரிக்கச் செய்துவந்தமையால்
...விர்க்க முடியாத ஒன்றாயிற்று.
...ிகள் ஆரம்பிக்கப்பட்டதுமுதல் இன்றுவரையுள்ள காலப்பகுதியில் எமக்கு ஏற்பட்ட
...வழிபிறப்பது' போல அப்போது நாம் பட்ட இடர்களை தாங்கி எமக்கு இடந்தந்த
...சொல்லாது பொது நூலகத்தைத் தந்துதவிய சுன்னாகம் பிரதேசசபை செயலாளர்
...பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.
...ின்ற எமது பிரதேச செயலகக் கட்டடம் என்றென்றும் நிலைத்துநின்று எம்பணியைத்
...ப நல்கிய உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் அதனோடு தொடர்புடைய உயர்
...தசத்தின் பல்வேறுபட்ட சிறப்புக்களைத் தன்னகத்தே தாங்கி வெளிவரும் புதிய கட்டிடத்
...ங்கும் இதயம் கனிந்த நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். வாழி! வாழி!

**திருமதி மஞ்சுளாதேவி சதீஷன்,** பிரதேச செயலர், உடுவில்.

...துவம் வாய்ந்த வலிதெற்கு பகுதியிலே உடுவில் பிரதேச செயலகத்திற்கான புதிய
...பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவது குறித்தும் பெருமகிழ்ச்சியடை கின்றேன்.
...ற்றத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை
...ங்கமுடியும். பிரதேச செயலகங்கள் இன்று அபிவிருத்திக்குரிய கேந்திர நிலையங்களாகக்

...ளைக் கொண்ட மக்கள் செறிந்து வாழும் சிறந்த பிரதேசமாகும். கணனி மயமாகிவிட்ட
...டுவில்ப் பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் உலகத்தரமுடையதாக அமைவதோடு
...ர்ப்பணிப் புடனும் நல்லாட்சிக்கு வரைவிலக்கணமாகவும் சேவையாற்ற வேண்டும் என்பதே

**க.கணேஷ்,** முன்னாள் அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.

...நாட்டில் பல்வகை அம்சங்களும் பொருந்திய ஒரு பிரதேசமாக உடுவில் பிரதேசம்
...கைப்பட்ட சேவைகளைக் கருத்தில் கொண்டு உடுவில் பிரதேச செயலகத்திற்குரிய எழில்
...ம போற்றுதற்குரியது. பொதுமக்களிற்குரிய அன்றாடதேவைகளைக் கருத்திற்கொண்டு
...டன் கூடியதும் புதிய தொழில்நுட்ப உத்திகளுடன் கூடியது மான சேவையை மக்களுக்கு
... என்று வாழ்த்துகின்றேன். புதிய கட்டடத்தில் செயலகத்தின் நோக்கு மற்றும்
...த்திகளுடன்கூடிய சேவைகளை மக்களுக்கு வழங்கி பிரதேச மக்களின் அபிமானத்தைப்

**கு.சண்முகநாதன், பிரதம கணக்காளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

**புதிய கட்டடத் திறப்புவிழாவும் மலர் வெளியீடும் சிறப்புற வாழ்த்துவோர்**

| | | |
|---|---|---|
| எஸ். மகாதேவன்<br>தர்சன் மரஅரிவு ஆலை, சுன்னாகம் | PROFITABLE CONSTRUCTION<br>Inuvil West, Chunnakam. | லயன் எஸ். மகாதேவா<br>கந்தரோடை, சுன்னாகம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
20 மே 2011 வெள்ளிக்கிழமை

# ஜிமெயிலை இப்படியும் அணுகலாம்

மின்னஞ்சல் சேவையில் முடிசூடா மன்னன் என்று அழைக்கப்படும் கூகுள் நிறுவனத்தினுடைய மின்னஞ்சல் சேவை ஜிமெயில் ஆகும்.

இந்த மின்னஞ்சல் சேவை தற்போது அதிகமான இணைய வாடிக் கையாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு முக்கியாமான காரணமே ஜிமெயில் நிறுவனம் அளிக்கும் சேவை மட்டுமே ஆகும்.




இந்த ஜிமெயில் சேவையை நாம் பயன்படுத்த வேண்டுமெனில் அதற்கு உலவியின் துணையுடன் மட்டுமே சாத்தியம் ஆகும். அவ்வாறு இல்லாமல் ஜிமெயில் சேவையை மட்டும் பெற ஒரு மென்பொருள் உதவி செய்கிறது. இந்த மென்பொருள் மூலமாக நாம் பல்வேறு வசதிகளைப் பெற முடியும்.

இந்த மென்பொருளை இணையத்தின் உதவியுடன் பதிவிறக்கிக் கணினியில் நிறுவிக் கொள்ளவும். இந்த மென்பொருளை கணினியில் நிறுவ வேண்டுமெனில் அதற்கு Adobe air மென்பொருள் உங்கள் கணினியில் நிறுவி இருக்கவேண்டும்.

Adobe air மென்பொருளை தரவிறக்கம் செய்த பின் இந்த அப்ளிகேஷனை திறக்க வேண்டும் . அதில் உங்களுடைய மின்னஞ்சல் முகவரி மற்றும் கடவுச்சொல்லை உட்செலுத்தவும் பின் உங்களுடைய கணக்கானது திறக்கப்படும். அதில் வழக்கம் போல் உங்கள் பணியைத் தொடரவும்.

இதன் சிறப்பம்சம் என்னவென்றால் இணையத்தளத்தில் இருந்தால் மட்டுமே நாம் மின்னஞ்சல் அனுப்ப முடியும். ஆனால் இந்த மென்பொருளின் மூலமாக ஒப்லைனில் மின்னஞ்சலை உருவாக்கிவிட்டுப் பின் கடைசியாக Send பொத்தானை அழுத்தவும்.

இணைய இணைப்பு கிடைக்கும் நேரத்தில் மின்னஞ்சலானது குறிப்பிட்ட நபருக்குச் சென்றடையும்.


நாம் வழக்கம் போலவே மின்னஞ்சல் சேவையைப் பயன்படுத்த முடியும். இந்த மென்பொருளானது விண்டோஸ், மேக் மற்றும் லினக்ஸ் ஆகிய இயங்குதளங்களில் செயற்படக்கூடியது ஆகும். ஆனால் Adobe air துணையுடன் மட்டுமே இந்த மென்பொருளால் செயற்பட முடியும். இந்த மென்பொருளானது இலவச மென்பொருள் ஆகும்

# இழந்த கோப்புக்களை மீளப்பெறுவதற்கு

கணினியில் பணியாற்றும்போது பல்வேறு கோப்புகளைச் சேமித்து வைத்துப் பயன்படுத்துவோம். அதுவும் சில முக்கியமான கோப்புகளைத் தனியாகச் சேமித்து வைத்திருப்போம்.

அவ்வாறு உள்ள தகவல்களை எம்மை அறியாமலோ அல்லது நம்முடைய கவனக்குறைவினாலையோ நீக்கி விடுவோம். ஒரு சில சமயங்களில் நம்முடைய கணினியில் நண்பர்களையோ அல்லது உறவினர்களையோ பணியாற்ற விடுவோம்.

ஆனால் அவர்கள் எமது கணினியில் உள்ள கோப்புகளை தவ றாக அழித்து விடுவார்கள். அவ்வாறு நாம் இழந்த கோப்பானது எமக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கலாம். அவை நமக்கு மீண்டும் கிடைக்க வாய்ப்பு இருக்காது. அவ்வாறு நாம் இழந்த கோப்புகளை மீட்டெடுக்க ஒரு இலவச மென் பொருள் உதவி செய்கிறது.



மென்பொருளை இணையத்தின் உதவியுடன் பதிவிறக்கி கணினியில் நிறுவிக் கொள்ளவும். பின் கணினியை ஒரு முறை மறுதொடக்கம் செய்து கொள்ளவும். பின் இந்த அப்ளிகேஷனை திறக்கவும். அதில் தோன்றும் மெனுக்களில் நீங்கள் எந்த சேமிப்பு சாதனத்தில் இருந்து தகவலை இழந்துள்ளீர்கள் என்பதைத் தேர்வு செய்யவும். பின் கணினியில் இணைக்கப்பட்ட வன்பொருள்களின் வரிசை தோன்றும். அந்த வரிசையைத் தேர்வு செய்து இழந்த தகவல்களை மீட்டெடுத்துக் கொள்ள முடியும்.

இந்த மென்பொருளானது இலவச மென்பொருள் ஆகும்.

மேலும் நாம் இழந்த தகவல்களை மிக விரைவாக மீட்டெடுக்க உதவும். வன்தட்டு, ப்ளாஷ் ட்ரைவ், மெமரி டிவைஸ், சீடி/டிவிடி மேலும் இதர வன் சாதனங்களில் இருந்து இழந்த கோப்புகளை எம்மால் மீட்டுக் கொள்ள முடியும்.

இழந்த தகவல்களை மீட்டெடுத்து அதைத் தனியாகவும் சேமித்துக் கொள்ள முடியும். விண்டோஸ் தளத்திற்கேற்ற மென்பொருள் ஆகும்.

# உலகையே அசத்திக் கொண்டிருக்கும் புத்தம் புதிய விளையாட்டு




கணினியில் நாம் எப்பொழுதும் வேலை செய்து கொண்டிருந்தாலும் அதில் இருந்து சிறிது நேரம் விடுபட கணினியில் விளையாட்டுக் களை விளையாடுவது வழக்கம்.


வீட்டில் இருக்கிற சுட்டிகளுக்குக் கணினியில் விளையாடுவது என்றால் இன்னும் கொள்ள பிரியம். ஒரு சில பேர் குறிப்பிபட்ட ஒரு விளையாட்டுக்கு அடிமையாக மாறி விடுவார்கள். அந்த அளவிற்கு கணினியில் விளையாடி கொண்டு இருப்பர்.

விளையாட்டில் இருந்தால் சாப்பிட கூட மறந்து விடுவார்கள். இந்த வரிசையில் இப்பொழுது உலகில் அனைவராலும் விரும்பப்பட்டு விற்பனையில் சக்கை போடு போட்டு கொண்டிருக்கும் விளையாட்டு Angry Birds விளையாட்டு.

தன்னுடைய முட்டைகளைத் திருடிச் சென்ற எதிரிகளை பழிவாங்குவது தான் இந்த விளையாட்டின் லட்சியம். இந்த விளையாட்டை விளையாடுவதற்கு முதலில் உங்கள் கணினியில் கட்டாயம் கூகுள் குரோம் உலவியை நிறுவி இருக்க வேண்டும்.

கூகுள் குரோம் உலவியை திறந்து https://chrome.google.com/webstore செல்லுங்கள்.

இதன் பின்னர் தோன்றும் விண்டோவில் Install என்பதை க்ளிக் செய்தால் Angry Birds விளையாட்டு உங்கள் கணினியில் சேர்ந்து விடும். இனி உங்கள் குரோம் உலவியில் Newtab க்ளிக் செய்தால் இந்த விளையாட்டு சேர்ந்து இருக்கும். அதில் க்ளிக் செய்தால் நீங்கள் உங்கள் உலவியில் இலவசமாக விளையாடி கொள்ளலாம். இந்த இணைப்பில் http://chrome.angrybirds.com/ க்ளிக் செய்தும் இதனை விளையாடி மகிழலாம்



# வீடியோக்களை செம்மையாக்கம் செய்வதற்கு

வீடியோக்களை செம்மையாக்கம் செய்வதற்கான மென்பொருள்கள் அதிகமாக உள்ளன. ஆனால் இணையத் தளத்தில் வீடியோ செம்மை செய்வதற்கான தளங்கள் மிக அரிதாக உள்ளன.

அந்த தளங்களில் அனைத்து வசதிகளும் காணப்படும் என்று கூற இயலாது. VIDEOTOOLBOX என்ற தளம் வீடியோவின் செம்மைப் பணிகளைச் செய்ய மிகவும் பயனுள்ளதாக அமைகிறது.

இந்த தளத்தில் CUT, EDIT, CROP, WATERMARK போன்ற வசதிகளுடன் கணினியின் கமெரா மூலம் வீடியோக் களை பதிவு செய்யும் வசதி போன்றன உள்ளன.

இந்த தளத்தில் 300MBஇற்கு மேற்படாத அளவுடைய கோப்புக்களை பயன்படுத்தலாம். வீடியோக்களை மாற்றம் செய்யும் வசதி, ஒளி மற்றும் ஒலி செட்டிங் வசதியும் உண்டு.

அத்துடன் 20இற்கு மேற்பட்ட வீடியோத் தளங்களில் இருந்து வீடியோக் களை தரவிறக்கம் செய்யலாம். வீடியோக் களுக்கு SUBTITLESயும் இடலாம்.

# உங்களது மென்பொருளை மற்றவர்களின் பயன்பாட்டிலிருந்து தடுப்பதற்கு

கணினியை ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பயன்படுத்தும் போது சில பாதுகாப்பு குறைபாடுகள் வரலாம். நீங்கள் நிறுவியுள்ள மென்பொருளை வேறு யாரும் பயன்படுத்தி விடக்கூடாது என்று நினைக்கலாம்.

சிலர் உங்கள் மென்பொருளில் நுழைந்து ஏதாவது மாற்றம் செய்து விடலாம். அலுவலகத்தில் வேலை செய்யும் போதும், கல்லூரிகளில், பள்ளிகள் போன்ற பொது இடங்களில் பணிபுரியும் சூழ்நிலையில்




இந்த மாதிரி கட்டுப்படுத்தும் செயல் அவசியமானது. இதனை நீங்கள் Group Policy Editor மூலமாகவும் செய்யலாம்.

ஆனால் எளிமையாகக் கையாள இலவச மென்பொருள் Appadmin உள்ளது. முக்கியமான மென் பொருள்களை எவரும் பயன்படுத்த முடியாதபடி இந்த மென்பொருள் மூலம் எளிமையாகச் செய்யலாம்.

இது மென்பொருள்களுக்கு கடவுச்சொல் கொடுத்து (password protect) அதை முடக்குகிறது. இதன் கடவுச் சொல் தெரிந்தவர்கள் மட்டுமே இதை பயன்படுத்த முடியும். இதில் முதலில் உங்களுக்கான கடவுச்சொல்லை கொடுத்து விட வேண்டும்.

பின் Block என்பதை கிளிக் செய்தால் எந்த மென்பொருளை தடை செய்கிறீர்களோ அதனை தேர்வு செய்து விட வேண்டும். மேலும் இன் னொரு வசதியாக எந்த மென்பொரு ளையும் இதன் விண்டோவில் இழுத்து விட்டால்(Drag and drop) கூட போதும்.

இதன் வடிவமைப்பு பயன்படுத்த எளிமையாக உள்ளது. இதை நிறுவத்தேவையில்லை. அப்படியே தரவிறக்கிப் பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. தனது அங்கத்துவ நாடுகளை பாதுகாக்கும் விடயத்தில் தவறியுள்ளது

## அமைச்சர் விமல்வீரவன்ஸ கூறுகிறார்

கொழும்பு, மே 20

ஐக்கிய நாடுகள் சபையானது தனது அங்கத்துவ நாடு ஒன்றைப் பாதுகாக்கத் தவறிவிட்டது என்று சீறிப் பாய்ந்துள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

நியூயோர்க் ஐ.நா. தலைமையகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற புத்தரின் பிறந்த தின விழாவில் இலங்கைப் பிரதிநிதியாக கலந்து கொண்டு உரையாற்றிபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தனது உறுப்புரிமை பெற்ற சகல நாடுகளினதும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்து அவை இறைமையுடன் இருப்பதற்கு வழி வகுப்பதே ஐ.நாவின் குறிக்கோள்.

அந்த வகையில் பௌத்த மதத்தின் கோட்பாடுகளின் அடிப்படையில் நாம் ஒன்றுபட்டு செயல்படுவோமேயானால் இந்த உலகில் உள்ள எந்த நாடுகளிலும் பிரச்சினைகள் தோன்றாது.

ஐ.நா. உறுப்புரிமை பெற்ற நாடுகள் இன்னொரு நாட்டுக்கு அடிப்பணியத் தேவையில்லை. சிறிய அல்லது வளர்ந்து வரும் நாடுகளின் உள்விவகாரங்களில் மேலைத்தேய நாடுகள் வேண்டுமென்றே தலையிட்டு அந்த நாடுகளைக் குழப்பத்துக்கு உள்ளாக்குகின்றன. இது அந்தந்த நாடுகளின் இறைமையைப் பாதிக்கும்.

இலங்கையில் கடந்த காலத்தில் அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்டு வந்த போர் முடிவுற்று சமாதான சூழ்நிலை நிலவுகின்றது.



இலங்கையின் கடந்தகால சம்பவங்களை வைத்துச் சிலர் உலகத்தில் இலங்கையைப் பற்றியும் தற்போதைய தலைமைத்துவத்தைப் பற்றி யும் பிழையான முறையில் சித்திரிக்க முனைகின்றனர் - என் றார்.

இந்த நிகழ்வில் ஐ.நா செயலாளர் பான் கீ மூன் மற்றும் பிரதி செயலாளர் கியோடகா அகசாகா மற்றும் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

# நீலிக் கண்ணீர் வடிப்பது இனியும் தொடரக்கூடாது

## ஜெயலலிதாவுக்கான வாழ்த்துச் செய்தியில் ஊழியர் முன்னணி

அம்பாறை,மே20

கடந்த தமிழக அரசின் ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பில் நீலிக் கண்ணீர் வடிக்கப்பட்டுவந்ததை புதிய ஆட்சியிலும் தொடரக் கூடாது. காத்திரமான அழுத்தங்களைப் புதிய முதல்வர் கொடுக்கவேண்டும்.

- இவ்வாறு தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்தில் அகில இலங்கைப் பொது ஊழியர் முன்னணி தெரிவித்துள்ளது.

அகில இலங்கைப் பொது ஊழியர் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் எஸ்.லோகநாதன் இந்த வாழ்த்துக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

''தமிழக மக்கள் தந்த ஜனநாயகத் தீர்ப்பு இது.கடந்த கருணாநிதி ஆட்சியின் குளறுபடிகளுக்கும் போலி நாடகங்களுக்கும் மக்கள் அளித்த பதிலடியாகவும் இதனைக் கருத வேண்டியுள்ளது. குறிப்பாகத் தமிழகத் தேர்தலின் தலைவிதியை நிர்ணயிப்பதில் ஈழத் தமிழர் விவகாரம் முக்கிய பங்கு வகித்திருந்தமையை எவரும் மறுக்க முடியாது'' என்று அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் மக்கள் உரிமைபெற்று வாழத்தக்க தீர்வென்றைப் பெற் றுக்கொடுப்பதில் தமிழகத்தின் புதிய முதல்வரான ஜெயலலிதாவின் பங்கு முக்கியமானது என்றும் லோகநாதன் தெரிவித்துள்ளார். (ச-30)

# ரூ. 3 கோடி நிதி மோசடி; இளம் தம்பதியர் கைது

கொழும்பு, மே 20

சட்டவிரோதமான 'பிரமிட்' முறை மூலம் நிதி சேகரிப்பில் ஈடுபட்டு சுமார் மூன்று கோடி ரூபாவை மோசடி செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இளம் தம்பதியர் புத்தளம், மகாகும்புக்கடவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் சுமார் 400 பேரிடம் இருந்து நிதியைச் சேகரித்து மோசடி செய்துள்ளார்கள் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

புத்தளம், மகாகும்புக்கட வல, ஆனமடுவ, வனாத்தவில் லுவ போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்தே நிதி சேகரிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் புத்தளம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர் வரும் 25ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள னர்.

சம்பவம் தொடர்பில் புத்த ளம் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(சி)



ஈரானுக்கு சென்றுள்ள வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியூதீன் உள்ளிட்ட குழுவினர் ஈரான் வர்த்தக அமைச்சர் மெஹ்தி கசன்பாரி மற்றும் முக்கியஸ்தர்களுடன் காணப்படுகின்றனர்.

# காலில் மோதிரத்துடன் சிலாபத்துக்கு வந்த வெளிநாட்டுப் பறவை

கொழும்பு,மே20

காலில் உலோக வளையமென்று அணிவிக்கப்பட்ட நிலையில் வந்த வெளிநாட்டுப் பறவையொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை சிலாபம் பிரதேசத்தில் வைத்துப் பிடிக்கப்பட்டு வன் ஜீவராசிகள் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடற்குருவி இனத்தைச் சேர்ந்த இப்பறவையின் காலில் இருந்த வளையத்தில் ஆங்கிலத்தில் ''மியூசியம் லண்டன் இன்போர்ட் 7 Q 9340'' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது . இதன்படி இப்பறவை தென்னாசியா வலயத்திலிருந்து வந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பறவை பற்றிய மேலதிக விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பறவை சிலாபம் வல்பொக்குணுயாய பிரதேசத்தில் வீழ்ந்து கிடந்த நிலையில் பிரதேசவாசி ஒருவரால் மீட்கப்பட்டு வனஜீவராசிகள் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது என்பது குறிப்ட நதக்கது. (ச)

# மகனுக்குப் பதிலாக தந்தை ஆஜர்: சிறையில் அடைத்தது நீதிமன்றம்

கொழும்பு, மே 20

வெளிநாட்டு 'சீஸ்' வகையொன்றை சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்தமை தொடர்பில் சந்தேகநபரான மகனுக்குப் பதிலாக நீதிமன்றத்தில் ஆஜரான தந்தையை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை மேலதிக நீதிவான் செல்வி துலாரி அமரசிங்க தீர்ப்பளித்தார்.

இவரது மகனான வர்த்தகருக்கு ஒரு வருட இலகு வேலையுடனான சிறைத்த தண்டனையோடு, 15,000 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

காலி மிலித்துவ எட்மன்ட் மாவத்தையைச் சேர்ந்த சுதேஸ் முத்துக்குமார் செல்வராஜா என்பவருக்கே இவ்வாறு சிறைவாசமும், அபராதமும் விதிக்கப்பட்டது.

மகனுக்குப் பதிலாக நீதிமன்றில் ஆஜரான அவரது தந்தையான வேகமுத்து நடராஜ் செல்வராஜா விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

(ச)

## தனியார் துறை ஓய்வூதிய சட்டத்துக்கு எதிராக

# பெரும் எடுப்பில் வெளிநடப்புச் செய்து ஊழியர் போராட்டம் நடத்துவர்

## தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஏற்பாடு

கொழும்பு,மே20

அரசு கொண்டுவரவிருக்கும் தனியார் துறை ஓய்வூதியத் திட்டத்தை ஆட்சேபித்து எதிர் வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பெரும் எடுப்பில் வெளிநடப்புப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு கூட்டு தொழிற்சங்க சம்மேளனம் திட்டமிட்டுள்ளது.

தனியார் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் தொடர்பான சட்டமுன் வரைவு நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் அதே சமயத்தில் இந்தப் பெரும் எடுப்பிலான வெளிநடப்புப் போராட்டத்தை நடத்துவதற்கு தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

இந்த ஆர்ப்பாட்ட வெளிநடப்பை அடுத்து பேரணி ஒன்று கொழும்பில் நடத்தப்படும் என்றும் தனியார் துறை ஓய்வூதியத் திட்டத்துக்கு எதிரான தேசிய போராட்ட தினமாக அன்றைய தினம் அனுஷ்டிக்கப்படும் என்றும் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

25 தொழிற் சங்கங்களைக் கொண்ட இந்த தொழிற்சங்க கூட்டமைப்பைச் சேர்ந்த தனியார் துறை மற்றும் பொதுத் துறை ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் அன்று பெரும் எடுப்பில் தமது நிறுவனங்களில் இருந்து வெளிநடப்புச் செய்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவிக்கையில் வெளிநடப்புப் பேராட்டத்தில் கலந்து கொள்ள தங்களுக்கும் விருப்பம் உண்டு என்றும் சங்கத்தின் நிர்வாகக் குழு இன்று அது பற்றி ஒரு முடிவு செய்யும் என்றும் கூறினார்.

(ப)

# வெள்ளம் வழிந்தோட வழியில்லை; சீனன் கோட்டையில் சூழல் மாசு

பேருவளை நகரசபைக்கு உட்பட்ட சீனன்கோட்டைப் பகுதியில் மழைக் காலத்தில் வெள்ளம் வழிந்தோட வழியின்றி தண்ணீர் தேங்கிநிற்பதால் சூழல் மாசடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது என பிரதேச மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள பல வடிகான்கள் மண்போட்டு நிரப்பப்பட்டுள்ளதால் வெள்ள நீர் வழிந்தோடுவதற்குப் போதிய வசதி இல்லை எனவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் மழை பெய்யும் காலங்களில் தாழ்ந்த பகுதிகள் நீரில் மூழ்கிவிடுகின்றன. (ச)

# புத்தளம் - மன்னார் வீதி அபிவிருத்திப் பணி முடியும் தறுவாயில்

புத்தளம்,மே20

புத்தளம் - மன்னார் வீதியை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் முதற்கட்டப் பணி பூர்த்தியடையும் கட்டத்தை அடைந்துள்ளது.

புத்தளம் நகரில் இருந்து மன்னாரை நோக்கிச் செல்லும் 1.5 கிலோ மீற்றர் தூர வீதியின் புனரமைப்புப் பணியே பூர்த்தியடைந்துள்ளது.

சுமார் 42 அடி அகலத்தில் அமைக்கப்படும் காப்பெற் வீதியாக [illegible]க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
சங்கடம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். தொழில் ரீதியான விடயங்களில் இழப்புகளை தவிர்க்க பொறுமை அவசியம். அடுக்கடுக்காக குவியும் வேலைகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். பெரியளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த வேலை ஒன்றில் சிறியளவில் பலன் கிடைக்கலாம். கவனக்குறைவைத் தவிர்க்கவும்.

**இடபம்:**
பெண்கள் வழியில் மகிழ்ச்சியான சம்பவம் ஒன்று நடக்கலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். இளம்பராய நண்பர்களை சந்தித்துப்பேசி மகிழ்வீர்கள். விருப்பமான உணவைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். குடும்பத்தினருடன் சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேரிடலாம்

**மிதுனம்:**
புதுப்பொலிவு உற்சாகத்துடன் செயற்படும் நாள். அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடித்து கொள்வீர்கள். கலைஞர்கள் சக நண்பர்கள் மூலம் சில வாய்ப்புகளைப் பெறலாம். பொறியியல் பணியாளர்கள் நினைத்தது நடக்கும் வாய்ப்பு உண்டு. தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும்.

**கடகம்:**
கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். திட்டமிட்ட வேலை ஒன்றில் திடீரென மாற்றம் செய்யலாம். மற்றவர்களின் செயற்பாடுகளைப் பார்த்து சில விடயங்களில் ஆதங்கம் அடைவீர்கள். உங்களின் வேலை ஒன்றுக்காக மற்றொருவரையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள்.

**சிங்கம்:**
தடை, தாமதங்களுக்கு பின் சில வேலைகள் முடியலாம். மனதிற்கு இனிய செய்தி ஒன்றைக் கேட்கலாம். உறவினர் ஒருவர் சொல்லும் வார்த்தையைக் கேட்டு செயற்படுவதன் மூலம் ஆதாயம் அடையலாம். அரசு காரியங்கள் அனுகூலமாக முடியும். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள்.

**கன்னி:**
குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். வசதி படைத்தவர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உறவினர் ஒருவரை நம்பி ஒப்படைத்த வேலைகள் நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். பெண்கள் வழியில் உருவான பிரச்சினைகள் தீர்ந்து, அவர்களால் நன்மை அடையலாம். நீண்ட தூர பயணங்கள் செல்ல திட்டமிடுவீர்கள். சந்தோஷ அனுபவம் பெறலாம்.

**துலாம்:**
பிள்ளைகள் பொறுப்போடு நடந்து பெருமைப் படுத்துவர். பெண்கள் கணவரின் பாராட்டுக்களைப் பெறலாம். நேற்று வந்த வரவுகள் இன்று செலவாகலாம். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்றில் தடை ஏற்படலாம். சில பொருள்களை கடன் சொல்லி வாங்கலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் வேலை செய்யலாம்.

**விருச்சிகம்:**
எதிலும் சிந்தித்து முன்யோசனையுடன் செயற்படும் நாள். செலவுகளில் சிக்கனம் காட்டுவீர்கள். வெப்ப நோய்களால் உபாதைகளுக்கு ஆள்படலாம். சக ஊழியர்கள் சிலர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். மற்றவர்கள் கடினம் என நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம்.

**தனுசு:**
நினைத்தது நடக்க வேண்டும் என பிரார்த்தனை செய்வீர்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். புதிய தொழில் ஒப்பந்தங்கள் போட நேரிடலாம். உறவினர் ஒருவரை வெளியிடங்களில் எதிர்பாராமல் சந்திக்கலாம். உங்களுக்கு விரோதமாகச் செயற்படக் கூடியவரை அடையாளம் கண்டு கொள்வீர்கள்.

**மகரம்:**
மாமன், மைத்துனர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகி பாசம் அதிகரிக்கும். முகவர் தொழில் புரிவோர் ஏற்றமான பலன்களை காண்பர். அரசு தொடர்பான விடயங்களில் நினைத்தது நடப்பது தள்ளிப் போகலாம். குழந்தைகள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். குரு வழிபாட்டின் மூலம் குதூகலம் அதிகரிக்கும்.

**கும்பம்:**
மற்றவர்கள் மத்தியில் ஆடம்பரமாக நடந்து கொள்வீர்கள்.பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. உறவினர்கள் சிலர் சுயநலமாகச் செயற்படுவது கண்டு மனவருத்தம் அடையலாம். நண்பர்களுக்காக சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். கொடுக்கல், வாங்கல்களில் சீரான நிலைமை காணப்படும். தொழில் ரீதியான வருமானம் உண்டு.

**மீனம்:**
விருந்து, விசேடங்களால் மகிழ்ச்சி, சந்தோஷம் உண்டு. குடும்பப் பெரியவர்கள் உங்களின் தேவைகளுக்கு உதவி செய்யலாம். குடும்பத்தினருடன் ஆலயங்களுக்குச் செல்லலாம். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். ஆறுதலான நாள்.

# வலி.வட
# மீளக்கு
# சாத்திய

வலி வடக்குப் பிரதேசத்தில் 36 கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்து வெளியேறிய மக்களில் மேலும் சில பகுதிகளைச் சேர்ந்தவர்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளமை அந்தப் பகுதி மக்கள் மத்தியில் வரவேற்பையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் இளவாலை வடக்கு, இளவாலை தெற்கு, வித்தகபுரம் ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளிலும் வசாவிளானின் சில பகுதிகளிலும் குரும்பசிட்டியைச் சேர்ந்த சில பகுதிகளிலும் மக்கள் 2010ஆம் ஆண்டு மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதன் பின்னர் இப்போது மேலும் சில கிராமங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளது.

வலி. வடக்குப் பகுதியில் இருந்து 1983ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் கட்டம் கட்டமாக வெளியேற்றப்பட்டனர். 1990ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான இராணுவ நடவடிக்கை மூலம் மக்கள் அனைவரும் அங்கிருந்து முழுமையாக வெளியேற்றப்பட்டிருந்தனர்.

1995 ஆம் ஆண்டு யாழ். மாவட்டம் முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்ததன் பின்னர் ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர், இராணுவ அதிகாரிகள் எல்லோருக்கும் இதுபற்றி எழுதியும் பயன் ஏதும் கிடைக்கவில்லை. அப்போது வலி. வடக்கு மக்களுக்கு உதவுவதற்கு எவரும் வரவில்லை. ஆனால், இன்றோ அமைச்சர்களும் அதிகாரிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வலி. வடக்கில் மீளக்குடியமர்வுக்குத் தாங்கள்தான் காரணகர்த்தாக்கள் என்று உரிமை கொண்டாடுகிறார்கள்.

உண்மை அதுவல்ல, அனைத்துலக சமூகத்தின் கரிசனையும் நீதிமன்றத்தின் தலையீடுமே வலி. வடக்கில் மக்கள் ஓரளவுக்காவது மீளக்குடியமர முடிந்துள்ள இன்றைய முன்னேற்றத்துக்குக் காரணமாகும்.

வலி. வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு மனித உரிமைகள் இல்லத்தினர் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரின் இடம்பெயர்ந்த மக்களுக்கான பிரதிநிதியின் கவனத்துக்கும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கவனத்துக்கும் கொண்டு வந்திருந்தார்கள்.

மேலும் மக்களின் மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்குமாறு கோரி சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் மனித உரிமைகள் இல்லத்தினர் அப்போது நடவடிக்கை எடுத்தனர். இது சம்பந்தமான நகர்வுகளுக்காகத் தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அப்போதைய தலைவரும் படுகொலை செய்யப்பட்டவருமான சின்னத்தம்பி சிவமகாராஜாவின் உதவியுடன் வலி. வடக்கு இடம்பெயர்ந்தோர் கூட்டம் ஒன்றை மனித உரிமைகள் இல்லம் 2003 நவம்பர் மாதத்தில் ஒழுங்கு செய்திருந்தது. அதில் அன்றைய யாழ். குடாநாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அந்தக் கூட்டத்திலே, வலி. வடக்கு மக்களின் சொந்தக் காணிகளை வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசு சுவீகரிக்க உள்ளது என்ற விடயம் மக்களுக்கு விளக்கப்பட்டது. எனவே, அடுத்த கட்டமாக மக்கள் காணிகளுக்கு நட்டஈட்டை வழங்க அரசு முன்வரலாம் என்பதும் அந்தக் கூட்டத்தில் விளக்கப்பட்டது. அத்தகைய ஒரு நிலையில் என்ன செய்வது என்று மக்களிடம் அபிப்பிராயம் கேட்டபோது, மக்கள் அனைவரும் ''எமக்கு எமது மண்தான் வேண்டும்'' என்று ஒரே குரலில் தீர்மானமாகக் கூறினர்.

மக்களின் அந்த அறுதியான தீர்மானத்துக்கு அமைவாகவே வலி. வடக்கு மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தேவையான சட்ட நடவடிக்கையை எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

அன்று தான் தெரிவித்த கருத்து நிலைப்பாட்டிலிருந்து இன்றுவரையும் தளம்பாது உறுதியுடன் நின்று சட்ட நடவடிக்கைக்கு ஆதரவளித்தனர் வலி. வடக்கு மக்கள். அவர்களின் ஆதரவுடன் கொழும்பிலுள்ள உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, வல்லிபுரம் இராசதுரை, சின்னப்பு சிவஞானசம்பந்தம், காசிப்பிள்ளை யோகேஸ்வரன், காசிப்பிள்ளை சுப்பிரமணியம் ஆகியோரை மனுதாரர்களாகக் கொண்டு 5 வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் 2003ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகள் இலங்கை அரசமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதன் அடிப்படையிலேயே தாக்கல் செய்யப்பட்டன. 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்ற பண்ட மீறப்பட்டுப் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகவும் விரும்பும் தொழில் செய்யும் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் (அரசமைப்பின் உறுப்புரைகள் 12(1). 12(2), 14(1) ஆகியவை மீறப்பட்டுள்ளன) என்ற அடிப்படையிலேயே தாக்கல் செய்யப்பட்டன.

இவ்வாறு சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்பு கூட, வலி. வடக்கில் உள்ள சொந்தக் காணிக்குப் பதிலாக மாற்றுக் காணியையோ நட்டஈட்டையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏற்பீர்களா என்று மனுதாரர்களில் ஒருவரான மாவை சேனாதிராஜாவிடம் அப்போதைய யாழ். அரச அதிபர் கேள்வி எழுப்பினார். நீதிமன்றப் பணிப்புரைக்கமையவே மாவை யாழ். செயலகத்துக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். அவரோ தன்னைச் சொந்த இடம் செல்ல அனுமதிக்க வேண்டுமே தவிர நட்ட ஈடுகளைப் பெற்றுக்கொள்ள மாட்டேன் என்று ஆணித்தரமாக மறுப்புத் தெரிவித்திருந்தார்.

வலி. வடக்குப் பிரதேசம், அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஓர் உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்படவில்லை என்றும் எனவே மனுதாரர்கள் அங்கு மீளக்குடியமர அனுமதி மறுப்பது சட்ட விரோதமானதும் அரசமைப்பில் உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமைகளை மீறும் செயல் எனவும் அறிவிப்பதுடன் மனுதாரர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் வாதிட்டார்.

மனுக்களை விசாரணை செய்த, பிரதம நீதியரசரைத் தலைவராகக் கொண்ட நீதிபதிகள் குழாம் இது சம்பந்தமான அறிக்கையைக் குறிப்பாக மாற்றுக்காணியை அல்லது நட்டஈட்டை மனுதாரர்கள் பெற இணங்குவார்களா என்பதை ஆராய்ந்து அறிக்கை தருமாறு கோரியிருந்தது.

அதற்கேற்ப அப்போதைய அரச அதிபர் கே.கணேஸ் வழங்கிய அறிக்கை வலி. வடக்கில் மக்களின் மீளக்குடியமர்வுக்கு நீதிமன்றம் உத்தரவிடுவதற்கு உதவுவதாக அமைந்தது.

அவரது அறிக்கையை அப்படியே உயர்நீதிமன்றம் தனது 08.02.2006 ஆம் திகதி கொண்ட கட்டளையில் உள்வாங்கி இருந்தது. அந்தக்கட்டளையில், மாவட்ட செயலாளரின் அறிக்கையின்படி மாற்றுக்காணி வழங்கியோ அல்லது நட்டஈடு வழங்கியோ இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாதென்றும், 20 ஆயிரத்து 365 குடும்பங்கள் இடம்பெயர்ந்து இருப்பதால் அந்த அடிப்படையில் தீர்வு காண்பது சாத்தியமில்லை என்றும் மேலும் வலிகாமம் வடக்கு வளம் மிக்க விவசாயத்துக்கு உரிய செம்மண் பிரதேசம் என்றும் இந்தப் பிரதேசத்தில் மீன்பிடித்தொழில் இலாபகரமாக மேற்கொள்ளப்பட்டு வந்ததென்றும் 60 சதவீதமான மக்கள் வேளாண்மையிலும் 30 சதவீதமான மக்கள் மீன்பிடித்துறையிலும் ஈடுபட்டு நல்ல வருவாய் பெற்று வாழ்ந்தார்கள் என்றும் இடம்பெயர்வால் இந்த மக்களின் வாழ்வாதாரம் பறிக்கப்பட்டு அரசு வழங்கும் உலர் உணவில் தங்கி வாழ நிர்ப்பந்திக் கப்பட்டுள்ளார்கள் என்றும் அரச அதிபர் தெரிவித்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

அதன் அடிப்படையில், ''இந்தச் சூழ்நிலையில்

# டக்கில் டியமர்வு மானது எப்படி?



அதிபரால் அனுப்பப்பட்ட 15.01.2010 ஆம் திகதியிடப்பட்ட அறிக்கையில் இளவாலை வடக்கு, இளவாலை வட மேற்கு, வித்தகபுரம், பன்னாலை, கொல்லங்கலட்டி, நகுலேஸ்வரம், தெல்லிப்பழை, தந்தை செல்வாபுரம், மாவிட்டபுரம், மாவிட்ட புரம் தெற்கு, பளை வீமன் காமம் வடக்கு, பளை வீமன் காமம் தெற்கு, இடைக் காடு ஆகிய 13 கிராம சேவையாளர் பிரிவு களிலும் 3 ஆயிரத்து 587 குடும்பங்களை மீளக்குடியமர்த்த தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அரச அதிபர் தனது அறிக்கையில் குறிப்பிட்டி ருந்தார்.

எனினும், அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட வாறு மீளக்குடியமர்வு உனடியாக இடம்பெற வில்லை. இதனைச் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந் திரன் உயர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார். இதனை அடுத்து கடந்த சில மாதங்களுக்கு முன் இளவாலை வடக்கு, இளவாலை வட மேற்கு, வித்தகபுரம் ஆகிய கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் மீளக்குடியமர்வுக்கான அனுமதி வழங்கப்பட்டது. தொடர்ந்து எஞ்சிய கிராமங்களிலும் தற்போது மீளக்குடியமர்வு அனுமதிக்கப்படுகிறது.

இருப்பினும் இன்னும் பல கிராமங்களில் மக்கள் மீளக்குடியேற்றப்படாதிருக்கிறார்கள். வலிகாமம் வடக்குப் பகுதி 45 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்குகின்றது. மேற்குறித்த வழக்குகள் தாக்கல் செய்யும் காலத்தில்



**வி.எஸ்.கணேசலிங்கம்**
**சட்டத்தரணி, மனித உரிமைகள் இல்லம்**

28 கிராம சேவையாளர் பிரிவுகளில் வசித்த 15 ஆயிரத்து 841 குடும்பங்கள் அந்தப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்திருந்தன. எனவே ஏனைய கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படும் வரை மேற்குறித்த வழக்குகள் தொடரும்.

இலங்கையில் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது யாழ்ப்பாணத்தில் தான் ஆகக் கூடுதலான அதிஉயர் பாதுகாப்பு வலயங்களும் அதையண்டிய இராணுவ முன்னரங்கு நிலைகளும் அமைந்துள்ளன. யாழ். அரச அதிபர் நவம்பர் 2010 உயர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்த அறிக்கையின்படி மாவட்டத்தில் உள்ள 15 உதவி அரச அதிபர் பிரிவுகளிலிலிருந்து 70 ஆயிரத்து 428 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டு கோயில்களிலும் முகாம்களிலும் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் விரைவில் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக உள்ளார்கள். அவற்றையும் நிறைவேற்ற நாம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியவர்களாக உள்ளோம். எல்லோரும் இணைந்து அதனைச் செயற்படுத்துவோம்!

மனுதாரர்களால் முறையிடப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் கணிசமானளவு அரசுக்குப் பணநட்டத்தையும் பொருளாதார நட்டத்தையும் ஏற்படுத்துகின்றதால் இந்த நீதிமன்றால் தீர்மானிக்கப்பட்ட கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கமைய மக்களை மீளக்குடியமர்த்துவதன் மூலம் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று இந்த நீதிமன்றம் கருதுகின்றது'' என்று நீதியரசர் தனது கட்டளையில் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் பலபாகங்களிலும் குறிப்பாக குடாநாட்டுக்குள்ளும் உயர் பாதுகாப்பு வலயங்கள் இருந்த போதிலும் இவற்றால் ஏறக்குறைய ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்து வாழுகின்ற போதிலும், உயர் பாதுகாப்பு வலயங்கள் மனித உரிமைகளை மீறுகின்றன என்ற அடிப்படையில் அதுவரை சட்ட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இதனால் வலி. வடக்கு மக்கள் தொடர்பான வழக்குகள், அடிப்படை உரிமை மீறல் வழக்குகளில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

நீதிமன்றக் கட்டளையில் சொல்லப்பட்ட நிபந்தனைகளுக்கமைய அப்போதைய மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா தலைமையில் யாழ். அரச அதிபர், பிரதிப் பொலிஸ் மா அதிபர், யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மற்றும் யாழ். மாவட்டக் கடற்படைத் தளபதி ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவே மீளக்குடியமர விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோர வேண்டும் என்றும் அவர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி அவர்களிடம் சொந்தக் காணி உள்ளதா என்பதை உறுதி செய்யும்படியும் நீதிமன்றும் பணித்திருந்தது.

அதற்கமைய 13.07.2009வரை 10 ஆயிரத்து 376 பேர் வலி. வடக்கில் மீளக்குடியமர அரச அதிபரிடம் விண்ணப்பித்திருந்தார்கள். இந்தப் பிரதேசத்தில் இருந்த பெரும்பான்மையோர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்கள் என்றும் மீளக்குடியேற மக்கள் இல்லை என்றும் வாதிட்டவர்களுக்கு இந்த விண்ணப்பங்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தின. இந்த விண்ணப்பங்கள் எமது மக்கள் தமது மண் மீது வைத்துள்ள பற்றையும் அவர்களின் மனஉறுதியையும் எடுத்துக்காட்டின.

முதலில் வழங்கப்பட்ட கட்டளையைத் தொடர்ந்து வலி. வடக்கில் மக்களின் மீளக்குடியமர்வுக்கு ஏதுவான பல கட்டளைகளை உயர் நீதிமன்றம் தொடர்ந்து வழங்கியிருந்தது. அவற்றின்படி அரச

# அறிவுள்ள கருணை



இந்த உலகத்தில் கருணை காட்ட வேண்டியது அவசியம்தான். இருந்தாலும் எல்லோரிடமும் கருணை காட்டிக் கொண்டிருக்க முடியாது. அப்படிக் காட்டியிருந்தால் எமக்கு ஆபத்து.

ஒரு வெறிநாய் உங்களைக் கடிக்க வருகிறது. 'ஐயோ பாவம் நாய்தானே கடித்து விட் டுப் போகட்டும் ' என்று காலைக் கொடுக்க முடியுமா? அறிவு வேலை செய்யவேண்டும். அதற் கப்புறம்தான் கருணை காட்டுவதா? வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

ஒரு பெரியவர் வெளியூர் போய் வீட்டுக்குத் தேவையான பொருள்களையெல்லாம் வாங்கிவிட்டு அடர்ந்த காட்டு வழியாகத் தலையில் மூட்டையோடு நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது புதர் மறைவில் இருந்த புலி யொன்று இவரைப் பார்த்துவிட்டுப் பாய ஓடிவந்தது. பெரியவருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ஓடிப்போய் மரத்துக்குப் பின்னால் மறைந்து கொண்டார்.

அந்தப் புலி ஓடிப்போய் அந்த மரத்துக்கு முன்பக்கமாக நின்றது. அந்தப் பக்கம் அவர். இந்தப் பக்கம் புலி. நடுவே மரம். புலி நிமிர்ந்து நின்று முன்னங்கால் இரண்டையும் மரத்துக்கு இரண்டு பக்கமாகவும் நீட்டியது. அந்தப் பக்கம் நின்று கொண் டிருந்த பெரியவர் அந்த இரண்டு முன்னங்காலையும் இரண்டு கைக ளாலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். நடுவே மரம். புலி யும் அந்தப் பெரியவரும் மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக் கையில் அந்த வழியாக ஒருத்தன் வந்தான். அவன் கையிலே ஒரு துப்பாக்கி இருந்தது. துப்பாக்கியோடு அந்த மனிதன் வருவதைப் பார்த்ததும் பெரியவர் நிம்மதியாக மூச்சுவிட்டார். இனி எப்படியும் பிழைத்துக் கொள்ளலாம் என்கிற தைரியம் அவருக்கு.

சீக்கிரமாக வா என்று அந்த ஆளைக் கூப்பிட்டார். அவர் கிட்ட வந்ததும் ''இந்தப் புலியை உன் துப்பாக்கியால் சுடு'' என்றார். அந்த சமயம் பார்த்து அவர் ஜீவகாருண்யம் பேச ஆரம்பித்தார். ''பெரியவரே புலியும் ஓர் உயிர்; நீங்களும் ஓர் உயிர், ஜீவனுக்குக் கருணை காட்டுபவன் நான். அதனால் நான் புலியைச் சுடமாட்டேன்'' என்று சொல்லிவிட்டான்.

''அப்படியில்லை... புலி ஒரு மிருகம். ஆனால் நான் மனிதன். புலி பலபேரைக் கொல்லக்கூடிய பிராணி. நான் பலபேருக்கு உதவி செய்யக்கூடிய மனிதன். என்னை நம்பி வீட்டில் மனைவி பிள்ளைகள் காத்துக் கொண்ருப்பார்கள். அதனால் இந்த விலங்கை நீ கொன்றுவிடு. ஆறறிவு படைத்த மனிதனும் ஐந்தறிவு படைத்த மனிதனும் ஒன்றா? எது உயர்வு - எது தாழ்வு என்று பகுத்தறிவினால் பார்க்க வேண்டாமா? ஆபத்து வேளையில் எனக்கு நீ உதவி செய். அதுதான் நியாயம் '' என்றார் பெரியவர்.

'' அதெல்லாம் முடியாது. நான் எப்பவும் அறநெறியை விட்டு விலகமாட்டேன். புலிக்கு உயிர் வாழவேண்டும் என்று ஆசையிருக்கும். அதனால் ஓர் உயிருக்காக இன்னொரு உயிரைக் கொல்லமாட்டேன்'' என்றார் அந்த ஆள்.

பெரியவர் யோசித்துவிட்டு '' சரி நீ புலியைக் கொல்லவேண்டாம்; எனக்கு ஓர் உதவி செய்'' என்றார். ''என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள்?'' என்றான். பெரியவரும் ''எனக்குத் தாகமாக இருக்கிறது; அதனால் கொஞ்சநேரம் இந்தப் புலியினுடைய காலைப் பிடித்துக் கொண்டிரு. நான் தண்ணீர் குடித்து விட்டு வந்து விடுகிறேன்'' என்றார். அவனும் சரியென்று கூறி அதே மாதிரிப் பிடித்துக் கொண் டான்.

பெரியவர் தண்ணீர் அருந்திவிட்டு வந்து மூட்டையைத் தூக்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். புலியைப் பிடித்துக் கொண்டு நின்றவர் திடுக்கிட்டு ''என்ன இது! நீங்கள் போகிறீர்கள்'' என்று கேட்டான். ''எனக்கு இன்னும் கொஞ்சம் கடமைகள் இருக்கு அதையெல்லாம் முடித்துவிட்டு வருகிறேன்'' என்று தொடர்ந்து நடந்தார். இவன் பரிதாபமாகக் கெஞ்ச ஆரம்பித்தான். ''ஐயா வீட்டில் மனைவி பிள்ளைகள் எல்லாம் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள். இந்தத் துப்பாக்கியை எடுத்து புலியைச் சுடுங்கள்'' என்று கேட்டான்.

''இப்போதுதான் உனக்கு நியாயம் எது என்பது புரிந்திருக்கிறது. புலியைவிட உயர்ந்த நீ வாழ்ந்தால் எத்தனையோ பேருக்கு உதவியாக இருப்பாய் - புலி வாழ்ந்தால் பலபேருக்கு கெடுதல்தான் செய்யும். ஆகவே நீதான் வாழவேண்டும். ஆனால் எனக்குச் சுடத்தெரியாது. அதனால் நான் புலியின் காலைப் பிடித்திருக்கிறேன். நீ புலியைச் சுடு'' என்றார். மூட்டையைக் கீழே வைத்துவிட்டு புலியைப்பிடித்துக் கொண்டார். அவன் மிருகத்தைக் கொன்று மனிதனைக் காப்பாற்றினான்.

இதுதான் அறிவுள்ள கருணை என்பது. அறிவைப் பயன்படுத்தாமல் கருணை காட்டினால் அது ஆபத்தில்தான் முடியும். கருணை காட்டுவதிலும் பல ரகம் இருக்கிறது. உதாரணம் கூறு கிறேன்.

ஒருத்தர் குளத்தில் விழுந்துவிட்டார். இன்னொருவர் அவனைக் காப்பாற்றினார். உடனே காப்பாற்றப்பட்டவர் 'நன்றி' உங்களுடைய ஜீவகாருண்யத்தைப் பாராட்டி 50 சதம் கொடுக்க நினைக்கிறேன். ஆனால் என்னிடம் ஒரு ரூபா தாளாக இருக்கிறதே! அதுதான் என்ன செய்யலாம் என்று யோசிக்கிறேன்'' என்றார். அதற்கு காப்பாற்றியவர் ''அப்படியென்றால் இன்னொரு தடவை இந்தக் குளத் தில் விழுங்கள். காப்பாற்றிவிடுகிறேன். ஒரு ரூபாவாகக் கொடுங்கள்'' என்றார். இந்தக் காருண்யத்தை எந்த ரகத்தில் சேர்ப்பது.

**கோ. சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓலைக்கொட்டகையில் ஆரம்பித்து விருட்சமாக வளர்ந்து சேவையாற்றும் கைதடி தெற்கு வளர்மதி ச.ச.நிலையம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

கைதடி தெற்கு சனசமூக நிலையம் முன்பள்ளி ஒன்றை இற்றைக்கு இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக மின்னொளி மழலைகள் முன்பள்ளி என்ற பெயரில் நடத்தி வருகின்றது. பெருமளவான சிறார்கள் கல்வி பயிலும் இங்கு இரண்டு ஆசிரியைகள் ''தாயைப் போல'' இந்தப் பிள்ளைகளை நேசித்து உணவுடன் கல்வியையும் ஊட்டி வருவது பார்ப் போருக்கு சந்தோஷமான உணர்வையும் ஆனந்தக் கண்ணீரையும் ஏற்படுத்துகின்றது.

முன்னைய காலங்களில் இடவசதி இல்லாத காரணத்தால் வேறு இடங்களில் இயங்கிய இந்த முன்பள்ளி 2004 ஆம் ஆண்டு ஜிரிஇசற் நிறுவனத்தின் உதவியுடன் கட்டப்பட்ட முன்பள்ளிக் கட்டடத்திலே தற்போது இயங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தமது முன்பள்ளியின் வளர்ச்சிக்கு கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகம் உதவி வருகின்றது.

யுத்த நடவடிக்கைகளால் 1983 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வந்த தென்னிலங்கைத் தமிழ் உறவுகள் மற்றும் 1990 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்துவந்த எமது உறவுகள் ஆகியோரின் வாழ்வாதார உடனடித் தேவையை நிவர்த்தி செய்ய இந்தச் சனசமூக நிலைய நிர்வாகிகளும் அங்கத்தவர்களும் இரவு பகல் பாராது துயில் இழந்து உதவியதை யாரும் மறக்கவும் மறுக்கவும் மாட்டார்கள்.

இதேபோல 1995 இல் வலிகாமத்திலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து வந்த வேளை தமது அங்கத்தவர் வீடுகளிலும் ஏன் தமது நிலையத்திலும் புகலிடம் கொடுத்ததையும் இந்த நிலைய நிர்வாகிகள் கூறுகின்றனர். அத்துடன் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின்போது உடனடியாகச் செயலில் இறங்கிய இவர்கள் உடுபுடைவைகள், உலர் உணவுகள், நிதி போன்றவற்றைச் சேகரித்து பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரடியாகக் கொண்டு சென்று வழங்கி பலரதும், பாலர்களினதும் உயிர் காத்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.




இதேபோல, தமது நிலையத்தில் அங்கத்தவர்களாக உள்ள குடும்பங்களுக்கும் ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் சுய தொழில் முயற்சிக்காக வருடந்தோறும் நிறுவனங்களின் உதவியுடன் அவர்களின் வாழ்வாதாரத்தையும் தாம் உயர்த்தி வருவதாகவும் நிர்வாகிகள் கூறுகின்றார்கள். கைதடியைப் பொறுத்தவரை ஏனைய சனசமூக நிலையங்கள் நடத்தும் விளையாட்டுக்கள் யாவற்றிலும் தாம் பங்குபற்றுவதாகவும், ''கண் கண்டதை கை செய்யும்'' என்ற பழமொழிக்கேற்ப விளையாட்டுக்களில் பயிற்சி போதாதென்றாலும் நம்பிக்கையும் ஊக்கமும் உள்ளதன் காரணத்தால் தாம் போட்டிகளில் வென்று சாதனைகளை ஏற்படுத்துவதாகவும் கூறுகின்றனர்.

எனினும் தமது பயிற்சியாளரின் நீண்ட பயிற்சியும், அவரது ஆலோசனையும் தொடர் வெற்றிகளைப் பெற உதவுவதாகவும் தமது வெற்றிக்கு நுட்பங்களைத் தரும் பயிற்சியாளர் வை. இரா

**தயா**

ஜேஸ்வரன் பல்லாண்டுகளாகத் தமது பயிற்சியாளராக இருக்கிறார் எனவும் மின்னொளி வீரர்கள் கூறுகின்றார்கள்.

2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் நடவடிக்கை காரணமாகத் தாம் இடம் பெயர்ந்த வேளை தமது நிலையக் கட்டடம் யுத்தத்தின்போது ஷெல் தாக்குதலில் பெரும் சேதமடைந்ததாகவும் பின்னர் தாம் புலம்பெயர் வாழ் நிலைய அங்கத்தவர்களின் உதவியுடன் கட்டி முடித்து 2005 ஆம் ஆண்டில் தமது கலையரங்கில் பொன்விழா நிகழ்வுகளை நடத்தியதாகவும் கூறுகின்றார்கள்.

2006 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கோர யுத்தத்தால் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் நிலையச் செயற்பாடுகள் சிறிதளவிலே நடைபெற்றன.

இருந்த போதும் 2007 ஆம் ஆண்டு தமது நிலையப் பொருளாளர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து செயற்பாடுகள் முற்றாகவே நிறுத்தப்பட்ட வேளை மேலும் தளரவிடக் கூடாது என்ற நோக்கில் புகுந்த புதிய நிர்வாகம் நிலையச் செயற்பாட்டை வழமைக்குக் கொண்டு வந்ததையும் தம்மால் மறக்க முடியாது எனவும் இவர்கள் கூறுகின்றார்கள்.

இற்றைக்கு 56 ஆண்டுகளுக்கு முன் ஒரு சிறு ஓலைக்கொட்டகையில் மிகக் குறைந்த வசதிகளுடன் தம் முன்னோர் விதைத்த கைதடி தெற்கு சனசமூக நிலையம் என்ற விதை மிக வேகமாக வளர்ந்து பரந்து மின்னொளி விளையாட்டுக் கழகம், கிராம அபிவிருத்திச்சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், மின்னொளி சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம், மின்னொளி கலை பண்பாட்டுக் கழகம் மற்றும் மின்னொளி மழலைகள் கல்விப் பூங்கா எனப் பெரு விருட்சமாக வளர்ந்துள்ளதாகவும் இந்த வளர்ச்சிக்கு நூற்றுக்கணக்கான தமது நிலைய மூத்த உறுப்பினர்கள், புலம் பெயர்ந்து வாழும் தமது நிலைய அங்கத்தவர்கள் போன்றோரின் சிறந்த பங்களிப்புத்தான் காரணம் என்று கூறப்பட்டது.

நிலையத்தின் தலைவராக தற்போது பொறுப்பேற்றிருக்கும் க.சிவஞானம் மிக நிதானமாகவும் அதேவேளை தூர நோக்குச் சிந்தனையுடனும் செயற்பட்டு வருகிறார் எனவும் அதற்கு ஏற்றாற் போல் செயலாளர் வ.பத்மநாதன், பொருளாளர் சு.வடிவேல் மற்றும் நிலைய நிர்வாக் உறுப்பினர்களும் சேவையாற்றி வருகின்றனர் என்று களிப்புடன் தெரிவிக்கும் இவ்வேளை நாமும் இந்த நிலையம் மின்னலென ஒளி வீசி உயர்ந்து வளர வாழ்த்துவோம். *(முற்றும்)*

உடன் அனுமதி தொடர்புகளுக்கு: 0773013060

Study at KDU University college, Malaysia for renowned UK, Australian or Swiss degrees




Choose Your Course • A-Level & Foundation Studies • American Degree Program • Australian Matriculation (AUSMAT) • Business • Design** • Engineering • Hospitality & Tourism • Culinary Arts • Information Technology • Language • Law* • Mass Communication/Public Relations • Nursing** • Professional Accountancy (ACCA, CAT)

*PJ Campus only. ** Penang Campus only.

UNITED KINGDOM: University of Cambridge International Examinations, Keele University, University of London International Programmes Registered Centre, Oxford Brookes University, Manchester, Northumbria University, University of Hertfordshire, UH
AUSTRALIA: UNSW Global The University of New South Wales, UTAS, Murdoch University, WACE
SWITZERLAND: IMI
UNITED STATES: Southwest Minnesota State University

Partner Universities & Examination Boards

PEOPLE INSPIRE PEOPLE

KDU UNIVERSITY COLLEGE

Integrated Corporate Solutions
107 B 1/1, Galle Road, Colombo-06, SriLanka.
Tel : +94 11 2553520 Mobile : +94 77 3013060
E-Mail :sutha@icslanka.com web : www.icslsnka.com

www.kdu.edu.my
blog: campuslife.kdu.edu.my
facebook.com/kdu.universitycollege

Silver Award Winner Education & Learning Category

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகச் சிறந்த சேமிப்பு நேர சேமிப்பே


எமது வாழ்வோடு பின்னிப் பிணைந்ததாக நேரம் காணப் படுகின்றது. நேரம் ஆதிகாலத் தில் சூரிய ஒளியால் கணிக்கப் பட்டுத் தற்போது கடிகாரத்தினூ டாகப் பார்க்கக்கூடியதாக இருக் கின்றது.

நேரம் செக்கன்கள், நிமிடங் கள், மணித்தியாலங்கள், நாள் கள், வாரங்கள், மாதங்கள் மற் றும் வருடங்கள் என ஓடுகின் றது. இதைப்போன்றே நாமும் வாழ்வில் ஓடிக்கொண்டு இருக் கின்றோம் என்பதில் ஆச்சரியம் இல்லை.

நாம் அதிகாலையில் நித்திரை விட்டு எழும்புவதைப் பழக்க மாக்கி நடைமுறையில் கொண்டு வந்தால் அது எமது கடமை களை உற்சாகத்துடனும் சுறு சுறுப்புடனும் செய்ய வழி வகுக் கும்.

ஒவ்வொருவரும் தமது செயற் றிறனை மேம்படுத்த வேண்டு மானால் நேரத்தைப் பயன்படுத் துவது அவசியமாகும்.

தற்காலத்திலும் சரி எந்தக் காலத்திலும் சரி நேரத்தின் முக் கியத்துவம் அதனுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் பய னுள்ளதாக்கலாம்.



நகரப்புறங்களில் வாழும் அனேகமானவர்கள் நேரத்துடன் போராடிக்கொண்டு தமது பொறுப்புக்களைத் திறம்பட நிறைவேற்றச் சிரமப்படுகின் றனர்.

இதேவேளை, கிராமப்புறங் களை எடுத்துக்கொண்டால் பதட்டமின்றி மெதுவாகவும் நிதானமாகவும் தமது கடமை களைச் செய்வதைக் காணக் கூடியதாக உள்ளது. பொதுவாக நேரத்துக்கு மதிப்புக் கொடுத் தல், சேமித்தல் என்பன எமது கடமையாகக் காணப்படுகின்றன.

ஒரு கல்வியில் சிறந்த மாண வனை எடுத்துக்கொள்ளும் போது அவன் நேரசூசியின்படி இயங்குவதன் மூலம் இலகு வான கற்றல், மனனம் செய்தல், பரீட்சைக்குத் தயாராகுதல், உரிய வினாவுக்கு உரிய நேரத் தில் உரிய விடை அளித்தல் போன்ற திறன்கள் அவனிடம் காணப்படுகின்றன.

இதன்மூலம் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் கிடைக்க வாய்ப்பு அமைகின்றது.

அலுவலகத்தை நோக்கும் போது அலுவலக நேரத்தை நன்கு திட்டமிட்டுப் பயன்ப டுத்துவதன் மூலம் வீண் செல வுகள், சிரமங்கள் என்பனவற் றைத் தவிர்த்துக்கொள்ளலாம். அத்துடன் ஒவ்வொரு நடவ டிக்கைகள் மூலமும் தீர்மானிக்கப் பட்ட இலக்குகளை அடைந்து உச்சகட்டப் பயன்பாட்டைப் பெறக்கூடியதாக இருக்கும்.

கல்விச் செயற்பாடுகள் அலு வலகச் செயற்பாடுகள் மட்டு மல்லாது எல்லாத் துறைகளி லும் எந்த நேரத்திலும் கிடைக்கும் நேரத்தைப் பயனுடையதாக் குவது சாலச் சிறந்ததாகும்.

தவராஜா துவாரகன்,
உடுவில்

நேரத்துக்குப் பெரும்பாலான மரியாதை செலுத்துபவராகத் தனியார் துறையினரைப் பார்க்கக் கூடியதாக உள்ளது. அரச நிறுவ னங்களிலும் பார்க்க தனியார் நிறுவனங்கள் நேர ஒழுங்கை முறையாகவும் முழுமையாக வும் பின்பற்றுவதைக் காணலாம்.

"ஒரே நேரத்தில் பல வேலை கள் நம்மால் செய்ய முடியும்" என்பது பலருடைய எண்ணம். இது தவறாகும்.

அவ்வாறு செய் யும்போது ஒரு காரியம் பூரண மடையாமல் இருப்பதைக் காண முடியும். அல்லது மோசமாகி இருப்ப தைக் காணலாம்.

என்னசெய்ய வேண்டும் எப் படிச் செய்ய வேண்டும் என்று பட்டியலிட்டு ஒழுகுவதன் மூலம் உச்சகட்ட பயன்பாட் டைக் காணமுடியும்.

நேரத்தைத் தவறவிடும் யாழ்ப்பாண மக்களை எடுத்துக் கொண் டால் அலுவலக நேரம் எட்டு மணிக்கு என்றால் 8.30 இற்கு அதாவது அரைமணித்தி யாலம் சென்றபின் செல்வது, அதேபோன்று எட்டு மணிக்குப் பாடசாலை என்றால் ஒன்பது மணிக்குச் செல்வது அரை நேரத்துடன் யாருக்கும் தெரியா மல் மதில் பாய்ந்து வருவது என் பதையெல்லாம் வழக்கமாகக் கொள்பவர்கள் நாங்கள்.

"5 மணிக்கு அதிகாரி ஒரு வர் வருகிறார் எல்லாரும் இந்த இடத்திற்கு 4.30 இற்கு வாங்கோ" என அறிவித்தல் விட்டால் மக் களைப் பலமணிநேரம் காக்க வைக் கும் பண்பு சில அதிகாரிகளி டம் உள்ளது. இதனை அந்த அதி காரிகள் பெருமையா கக் கருதிக் கொள்கின்றனர் என்பதில் ஆச்ச ரியமில்லை.

சேமிப்பை எடுக்கும்போது மிகச் சிறந்த சேமிப்பாக நேர சேமிப்பே அமைகின்றது.

குறித்த நேரத்தில் நிகழ்வு கள் தொடங்கா நிலையை தவிர்த்து நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்கு நிகழ்வுகள் ஆரம் பிக்கப்பட வேண்டும். இது ஆரோக் கியமான சமூக வளர்ச் சிக்கு உதவும். நேரம் பொன்னா னது எனும் வாக்கியத்துக் கமைய ஒழுகு வதன் மூலம் உச்சக் கட்டக் பயனை அடைய முடியும்.

## கல்விச்சுடர் விடைகள்

### பரீட்சை இலக்கம் I இல் வினாத்தாள் I இற்கான விடைகள்

01-3 02-1 03-2 04-1 05-2
06,07,08- பொருத்தமான வசனத்திற்குப் புள்ளி வழங்கவும்.
09-விளாம்பழம். 10-இராமபாணம் 11-பிழை 12-பிழை
13-3 14-4 15-2 16-01 17-3 18-2 19-3 20-2 21-3 22-K
23-N 24-4 25-1 26-3 27-1 28-1 29-2 30-2 31-3 32-2
33-3 34-1 35-3 36-3 37-3 38-அ-1, ஆ-3 39-3 40-1
(புள்ளிகள் 40×2.5= 100)

### பரீட்சை இலக்கம் I இல் வினாத்தாள் II இற்கான விடைகள்

01. 01) தவளை. 02) அடைமழை பெய்யும்போது. 03) தத்தி, தத்தி.
04) வெந்நீர். 05) வீணாகக்கத்தல். 06) கண்களில்.
07) ஆடிடும்/நடுங்கிடும். 08) ஈரூடக வாழி. 09) அ) ஆறு, ஆ) அரவம்.
(10×1 புள்ளிகள்)
02. 01) அம்மா சுட்ட தோசை ருசியானது.
02) பண்டைக்காலத்தில் வாழ்ந்த மக்கள் காடுகளில் அலைந்து திரிந்தனர்.
(2×1 புள்ளிகள்)
03. 01) நான்நேற்றுப் பாடசாலைக்குச் செல்லவில்லை/போகவில்லை.
02) கிளி வானில் பறந்து சென்றது/போனது.
(2×1 புள்ளிகள்)
04. 01) விவசாயம் 02) எறும்பு/தேனி. (2×1 புள்ளிகள்)
05. 01) வழி 02) உளவு. (2×1 புள்ளிகள்)
06. 01) உட பனின்ன. 02) அஸ்பியாகன்ன.
03) மட்டதே தென்ன. (3×1 புள்ளிகள்)
07. 01) எங்கள் குடும்பம். 02) எனக்குத் தண்ணீர் கொஞ்சம் தாருங்கள்.
(2×1 புள்ளிகள்)
08. 01) Behavior 02) I am going out 03) Stream (5 புள்ளிகள்)
09. 01) பச்சை. 02) தயவுசெய்து சத்தம் போடாதீர்கள். (4 புள்ளிகள்)
10. 01-2 02-2 03-3 04-4 05-1 06-1 07-3 08-2 09-3 10-2
11-3 12-4 13-2 14-1 15-4 16-1 17-3 18-4
(18×1 புள்ளிகள்)
11. 01) பொலன்நறுவை. 02) மே-செப்டெம்பர். 03) சீனா.
04) ஜப்பான். (4×1 புள்ளிகள்)
12. 01) ஒகிட் 02) காசித்தும்பை. 03) பிறைப்பூ.
04) நாகலிங்கம். (4×1 புள்ளிகள்)
13. 01) 2189, 2198, 2819, 2891, 2981, 2918.
02) 53/- 03) 225 நிமிடங்கள். 04) 18:45 h
05) 10 06) 2.0 07) 22 m
08) 8 09) 6 10) 1900 மீற்றர்.
11) 12×3, 18+9, 9×1, 96/12. 12), 13) C,D
14) 534 15) 24780. (28×1 புள்ளிகள்)
14. கருத்துத்தரமான வாக்கியங்களுக்கு புள்ளி வழங்குக. (12×1 புள்ளிகள்)

## வளமான எதிர்காலத்துக்கு வழிகோலும் நடவடிக்கை

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங் களின் சம்மேளனம் (FUTA) கடந்த 9ஆம் திகதி தொடக்கம் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதற்கிணங்க இலங்கையில் சகல பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்க ழக ஆசிரியர்கள் தாம் வகித்து வந்த தன்னார்வப் பணிகளான துறைத் தலை வர், மாணவ ஆலோசகர் முதலான பணி களைத் துறந்துள்ளனர்.

இலங்கையில் ஏறத்தாழ 90 வீதமான பல்கலைக்கழக ஆசிரியர்கள் தொழிற் சங்க நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

இதன் விளைவாக, பெரதேனியா, றுகுணு, மொறட்டுவ, சிறீஜயவர்த்தன புர ஆகிய பல்கலைக்கழகங்கள் ஸ்தம் பித நிலையை அடைந்துள்ளன. மற்றைய பல்கலைக்கழகங்களில் விரிவுரைகள் நடை பெறுகின்றபோதும் காலப் போக்கில் அவையும் ஸ்தம்பித நிலையை அடைய லாம் என்று கூறப்படுகிறது.

2008ஆம் ஆண்டில் ஜனாதிபதியால் உறுதியளிக்கப்பட்ட சம்பள உயர்வு 2011ஆம் ஆண்டுவரை வழங்கப்பட வில்லை. இதன் காரணமாகத் தற்போது பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தொழிற்சங்க நடவடிக் கையில் இறங்கியுள்ளது.

1996ஆம் ஆண்டின் பின்னர் பல்க லைக்கழக ஆசிரியர்களுக்கான அடிப்ப டைச் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

உயர்கல்வி மற்றும் கல்விக்காக ஒதுக்கப்படும் தொகையானது ஒரு நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்காகச் செலவிடப்படும் மூலதனமாகும்.

அதனால்தான் மொத்தத் தேசிய உற் பத்தியில் ஆறு வீதமாயினும் கல்வி மற் றும் உயர்கல்வியுடன் தொடர்புடைய துறைகளுக்குச் செலவிடப்படவேண்டும் என்று இந்தச் சம்மேளனம் கோரிக்கை விடுக்கிறது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளுடன் ஒப்படும்போது அதிகூடிய தனிநபர் வருமானம் பெறும் நாடாக இலங்கை திகழ்கின்றது. இதற்கிணங்க இலங்கையின் சராசரி வேதனமானது மற்றைய தெற்காசிய நாடுகளின் சராசரி வேதனத்திலும் அதிகமானதாக இருக்கும். ஆனாலும், இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர்களது வேதனம் மட்டும் ஏனைய தெற்காசிய நாட்டுப் பல்கலைக்கழக ஆசிரியர்களது வேதனத்திலும் மிகமிகக் குறைவாகக் காணப்படுகிறது. பங்களா தேஷில் ஒரு பல்கலைக்கழக ஆசிரியர் இலங்கையின் ஒரு பல்கலைக்கழக ஆசிரியரைக் காட்டிலும் அதிக வேதனத் தைப் பெறுகிறார்.

கலாநிதி செ.அறிவழகன்,
தலைவர், விஞ்ஞான ஆசிரியர் சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த நிலையில் கற்றோரின் வெளியேற்றம் தொடர்ந்து கொண்டேயி ருப்பதற்கான காரணம் சம்பளப் பிரச்சி னையே என்று கூறப்படுகின்றது. "அண் மைக் காலத்தில், வெளிநாடுகளில் கலா நிதிப் பட்டம்பெற்ற 550 இற்கும் மேற் பட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் நாடு திரும்ப மறுத்து விட்டார்கள்" என்ற உயர் கல்வி அமைச்சின் செயலரின் கூற்று கற் றோரின் வெளியேற்றத்தின் தற்போதைய போக்கை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இந்த நிலை தொடருமானால் எதிர் காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகங் களில் கற்பிக்கத் தகுதியான ஆசிரியர்களே இருக்கமாட்டார்கள். பல்கலைக்கழக ஆசி ரியர் சங்கங்களின் சம்மேளன ஊடகப் பேச்சாளர் கலாநிதி மகிம் மெண்டிஸ் இதனைக் கூறியுள்ளார்.

(28 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நிதியக்குழுவின் தலைவர் இராஜினாமா

நியூயார்க், மே 20

சர்வதேச நிதியக்குழு தலைவர் டோமினிக் ஸ்ட்ராஸ்கான் நேற்றுத் தனது பதவியை ராஜினாமா செய்தார். இவர் ராஜினாமா அறிவிப்பின்போது இத்தருணத்தில் தனது மனைவியை நினைத்து பார்க்கிறேன் என்றும் உலகில் உள்ள எல்லாவற்றையும் விட நான் எனது மனைவியை அதிகம் நேசித்தேன் என்றும், இந்தப்புகார் தனக்கு எதிராக பின்னப்பட்ட சதி வலை என்றும் பெரும் கவலையுடன் கூறியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை டோமினிக் ஸ்ட்ராஸ்கான் நியூயார்க்கில் கைது செய்யப்பட்டார். தற்போது பிணைகிடைக்காத நிலையில் அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையிலேயே இவர் தனது தலைவர் பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். இராஜினாமாக் கடிதத்துடன் அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் இந்தக் குற்றச்சாட்டு தனக்கு எதிராக பின்னப் பட்ட சதி வலை என்றும் தன் மீது குற்றமில்லை என்றும் விளக்கமளித்துள்ளார்.



கிறிஸ் வந்திருந்த ஐரோப்பிய கவுன்சில் வங்கியின் தலைமை நிர்வாகி லாகோனிஸியை (வலது) அந்த நாட்டுப் பிரதமர் ஜியார்ஜ் பாப்பான்டரியோ வரவேற்கின்றார்

# இழுபறி நிலையில் இருந்த ஏமன் பிரச்சினை; சலேயின் பதவி விலகலுடன் முடிவுக்கு வந்தது

சனா, மே 20

கடந்த நான்கு மாதங்களாக இழுபறியில் இருந்த ஏமன் பிரச்சினை நேற்றுமுன்தினம் ஒரு வழியாக முடிவுக்கு வந்தது. ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேயும்(65), எதிர்க்கட்சியினரும் வளைகுடா கூட்டுறவு பேரவை (ஜி.சி.சி.) முன்வைத்த ஒப்பந்தத்தில் நேற்று முன்தினம் கையெழுத்திட்டனர். அதன்படி இன்னும் 30 நாள்களில் அதிபர் சலே பதவி விலகுவார். இதன் பிரதிபலனாக அவர் மீது எந்தவிதமான விசாரணையும் நடத்தப்பட மாட்டாது.

டுனீசியா, எகிப்து புரட்சியையடுத்து ஏமனில், ஜனாதிபதி அலி அப்துல்லா சலே பதவி விலகக் கோரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த நான்கு மாதங்களாக ஏமனில் நடந்த போராட்டத்தில் 180 பேர் பலியாயினர். ஏமனில் அரசியல் நெருக்கடி நீடிக்கும் பட்சத்தில் அது அல்-குவைதாவுக்கு இரையாகிவிடும் என்றும் ஒட்டு மொத்த உலகப் பாதுகாப்புக்கும் குந்தகம் ஏற்படும் என்று அமெரிக்காவும், அண்டை நாடான சவுதி அரேபியாவும் கருதின. அதனால், ஏமன் பிரச்னையைத் தீர்க்க இரு நாடுகளும் பெரும் முயற்சியில் ஈடுபட்டன. அதன் ஒரு பகுதியாக வளைகுடா கூட்டுறவுப் பேரவை (ஜி.சி.சி.) ஒருபரிந்துரையை முன்வைத்தது.

ஜனாதிபதி சலே தனது பதவியைத் துணை ஜனாதிபதி அப்துல் ரபு மன்சூர் ஹாடியிடம் ஒப்படைக்க வேண்டும். அதில் இருந்து இரு மாதங்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதற்குப் பிரதிபலனாக ஜனாதிபதி சலே மற்றும் அவரது குடும்பத்தார் மீது எவ்வித விசாரணையும் நடத்தப்பட மாட்டாது. அவர்களுக்கு வழக்கில் இருந்து முழு பாதுகாப்பு அளிக்கப்படும். முதலில், இதற்கு ஒப்புக் கொண்ட சலே பிறகு தயங்கி பின்வாங்கினார். எதிர்க்கட்சிகள் முதலில் இதை ஒப்புக்கொண்ட நிலையில் சலேவுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடாது; அவரை விசாரித்துத் தூக்கிலிட வேண்டும் என்று மக்கள் எதிர்த்து கொந்தளித்தனர்.

இந்த நிலையில், இந்தப் பிரச்சினையில் ஒருமித்த கருத்து உருவாகாததால் கட்டார் இதிலிருந்து விலகியது. தொடர்ந்து ஜி.சி.சி. பிரதிநிதிகள் இரு தரப்பிடமும் பேசி வந்தனர். நேற்று முன்தினம் ஜி.சி.சி.யின் பொதுச் செயலர் அப்துல் லத்தீப் ஜயானி தலைநகர் சனாவில் அதிபர் சலேயுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் பலனாக ஜனாதிபதி சலே இதற்கு ஒப்புக் கொண்டதாக அதிபரின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் அறிவித்தார். எதிர்க்கட்சிகள் தரப்பில் முக்கிய பிரமுகரான யாகியா அபு அஸ்பாவும் இதை உறுதிப்படுத்தினார். இதையடுத்து, நேற்று முன்தினம் சனாவில் அதிபரும், எதிர்க்கட்சியினரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ஒப்பந்தப்படி, இன்னும் 30 நாள்களில் சலே தனது அதிபர் பொறுப்பை துணை அதிபரிடம் ஒப்படைப்பார். பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் இதை வரவேற்றுள்ளன.

# அணு உலைத் தாக்குதல்: தடுக்கப் புதிய அமைப்பு

லியோன், மே 20

பயங்கரவாதிகள் அணு உலைகளை தாக்கிச் சேதத்தை ஏற்படுத்தி வருவது உலகின் அனைத்து நாடுகளுக்கும் பெரும் தலைவலியாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு இன்டர்போல் நிறுவனம் அணு உலைத் தாக்குதல் தடுப்பு அமைப்பு ஒன்றை உருவாக்கி உள்ளது. இந்த அமைப்பில் பணிபுரிவோர் அவ்வாறான சந்தர்ப்பங்களில் விரைந்து செயற்படுவர் என்றும் கெமிக்கல், பயோ லாஜிக்கல், ரேடியோ லாஜிக்கல், நியூக்கிளியர் உள்ளிட்டவைகளால் ஏற்படுத்தக் கூடிய தாக்குதல்களை இவர்கள் முறியடிப்பர். இதனை, அனைத்துநாடுகளும்ஏற்றுக்கொள்ள வேண் டும் என்று இன்டர் போல் தெரிவித்துள்ளது.


விசா வருமுன் பணம் வேண்டாம்

அதி விரைவில் பயணம்

ஜோர்தான் முதல் அணிக்கு

நீங்களும் சேர்ந்து கொள்ளலாம்

அதி உயர்ந்த நெசவு தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள பெண் தொழிலாளர்கள்

| தொழில் | வேலைவாய்ப்பு | சம்பளம் (டொலர்) |
|---|---|---|
| ஜுகி மெசின் ஒபரேடர் | 150 | 155 |
| உதவியாளர் (ஹெல்பர்) | 15 | 155 |
| தர நிர்ணயாளர் | 20 | 155 |

நேர்முகப் பரீட்சை
தினசரி
காலை 9.00 முதல்
மாலை 6.00 வரை

அறவிடப்படும் தொகை ரூ.25.000.00 மட்டுமே ,இரண்டு வருட பூர்த்தியின் பின்னர் சம்பள உயர்வு

- உணவு, தங்குமிடம்,வைத்தியம் ,போக்குவரத்து, செல்வதற்கும் திரும்புவதற்கும் பிரயானச்சீட்டு போன்றவை முற்றிலும் இலவசம் அத்தோடு இலவச காப்புறுதியும் வழங்கப்படும்.
- 03 வருட ஒப்பந்த கால எல்லைக்குள் பூரண பாதுகாப்பு
- 04 வருட அதிக ஒப்பந்தம்
- ஏனைய அனைத்து நிபந்தனைகளும் ஜோர்தான் அரசாங்க சட்டங்களுக்கு அமையவே

ஹொட் லைன்
031 492 2922
காரியாலய நேரத்தில் மட்டும்
தொடர்பு கொள்ளவும்

மஹா நாயக முதலிகே என்டர் பிரைசஸ்
194/1 ஹேமன்த தீப சிறியாய,தெல்பா மடவர படல்கம
தொ.பேசி :- 011 4381470, 011 4381472, தொ.நகல் :- 031 2269184
E mail :- mahanayaka @ sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாபியின் மனைவி, மகள் டுனிசியாவில் அடைக்கலம்

லிபிய அதிபர் கடாபியின் மனைவி மற்றும் மகள் ஆகியோர் டுனிசியா நாட்டில் அடைக்கலம் புகுந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

லிபிய அதிபர் கடாபியின் 42 ஆண்டு கால ஆட்சிக்கு எதிராக கடந்த பெப்ரவரி மாதம் பொதுமக்களின் போராட்டம் தொடங்கியது. இந்தப் போராட்டம் இன்னும் முடிவுக்கு வரவில்லை.

இந்த நிலையில் பொது மக்கள் மீது கடாபியின் ராணுவம் தொடர்ந்து தீவிர தாக்குதல் நடத்தி வருவதனால் ஆயிரக் கணக்கான மக்கள் உயிர் இழந்தனர்.

இதை தொடர்ந்து போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் களம் இறங்கி ராணுவத்துடன் போரிட்டு வருகிறது. இதனால் லிபியா மக்கள் அங்கிருந்து வெளியேறி பக்கத்து நாடான டுனிசியாவுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் அதிபர் கடாபியின் மனைவி ஷபியா அவரது மகள் ஆயிஷா ஆகியோரும் மக்களோடு மக்களாக லிபியாவை விட்டு வெளியேறி டுனிசியாவுக்கு தப்பிச் சென்றுவிட்டனர் என்று தகவல் வெளியாகி உள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன்பே தப்பி ஓடிய அவர்கள் டுனிசியாவில் டிஜெர்பா தீவில் அமைக்கப்பட்டுள்ள அகதிகள் முகாமில் தங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

போர்க் குற்ற நடவடிக்கைக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் கடாபி மீது கைது உத்தரவு பெற ஐ.நாவின் பாதுகாப்பு குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் தனது ஆட்சிக்கு முடிவு நெருங்குவதாக கடாபி கருதுகிறார். இந்த நெருக்கடியில் இருந்து தப்பிக்க தனது மனைவி மற்றும் மகளை டுனிசியாவுக்கு அனுப் பியிருக்கலாம் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# கொத்துக் குண்டு உற்பத்திக்கு ஜேர்மனிய வங்கி கடன் உதவி

ஸ்பெயின் நிறுவனம் ஒன்று கொத்துக் குண்டுகளை உற்பத்தி செய்வதற்கு ஜேர்மனிய வங்கி பெருமளவு கடனுதவிகளை வழங்கியிருக்கின்றது என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

லிபியாவில் கேணல் மும்மர் கடாபியின் ராணுவம் போராட்டக்காரர்களை ஒடுக்குவதாக கூறிக் கொண்டு அப்பாவி மக்களை கொன்று குவித்து வருகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி கடாபி ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் வெடித்தது. இந்தப் போராட்டத்தை எதிர்க்க முடியாமல் லிபிய ராணுவம் வான்வழித் தாக்குதலை நடத்தியது.

இந்தத் தாக்குதலின் போது ஒரு பெரும் குண்டில் இருந்து பல சிறிய குண்டுகளை உதிர்க்கும் கொத்துக் குண்டுகளை லிபியா பயன்படுத்தியது. இந்தக் குண்டு வீச்சு பொது மக்கள் உள்ள குடியிருப்புகளில் பெரும் உயிரிழப்பையும் சேதத்தையும் ஏற்படுத்தியது.

மனித உரிமை விவகாரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் தூதரான நவிப்பிள்ளை கடந்த ஏப்ரல் மாதம் 20 திகதி வெளியிட்ட அறிக்கையில், "லிபிய ராணுவப் படைகள் போர்க் குற்ற நிகழ்வுகளை மேற்கொள்கின்றன. அவை பயங்கர ஆயுதங்கள் மற்றும் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்துகின்றன. பொது மக்களுக்கு எதிராக இந்த அபாயக் குண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன'' என்று குறிப்பிட்டு இருந்தார்.

அபாயகரமான கொத்துக் குண்டுகளைத் தயாரிக்கும் நிறுவனமாக ஸ்பெயினின் இன்ஸ்டால்சா நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனம் லிபியாவுக்கு தாராளமாக குண்டுகளை விற்பனை செய்துள்ளது.

இத்தகைய குண்டுகளை தயாரிக்கும் இன்ஸ்டலசா நிறுவனத்திற்கு ஜேர்மனியின் டுட்சே வங்கி 10 லட்சம் யூரோவுக்கு மேல் கடன் உதவி அளித்துள்ளது. இதனை அரசு சாரா நிறுவனமான அர்ஜ்வால்ட் கூறியுள்ளது.

இந்தத் தகவல் டே செட் வார இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கொத்துக் குண்டுகளின் பாதிப்பால் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பவர்கள் குழந்தைகள். இத்தகைய குண்டுகளுக்குத் தடை விதிக்க வேண்டும் என 100இற்கும் மேற்பட்ட நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

# முக்கிய அமைச்சு பொறுப்புகள் சிங்கப்பூரில் தமிழர்களின் வசம்

சிங்கப்பூர்,மே19

சிங்கப்பூர் அமைச்சரவையில் வெளியுறவு மற்றும் நிதிப் பொறுப்புகளுக்குத் தமிழர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



சிங்கப்பூர் பிரதமர் லீ, வெளியுறவுத்துறை அமைச்சர் தர்மன் சண்முகரத்தினம் ஆகியோர் இணைந்து செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கின்றனர்.

வெளியுறவுத்துறை அமைச்சராக சண்முகமும், நிதியமைச்சராக சண்முகரத்தினமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிங்கப்பூரில் கடந்த 7ஆம் திகதி, நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. ஆளும் மக்கள் செயல் கட்சி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைப் பிடித்துள்ளது. சிங்கப்பூரின் முதல் பிரதமரும், அந்த நாட்டின் தந்தை என அழைக்கப்படுபவருமான லீ குவான் யூ, அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்து அமைச்சரவையிலிருந்து விலகினார்.

இதேபோல, மற்றொரு முன்னாள் பிரதமரான கோ சோக் டாங்கும் அமைச்சரவையிலிருந்து விலகினார். இதையடுத்து, 14 பேர் கொண்ட புதிய அமைச்சரவையை பிரதமர் லீ ஹிசின் லூங்ன் உருவாக்கியுள்ளார். லீ ஹிசின் லூங்ன், முன்னாள் பிரதமர் குவான் யூவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள 14 பேரில் எழு பேர் புதியவர்கள்.

தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த சட்டத்தரணியான கே.சண்முகம் சட்டத்துறை அமைச்சராக இருந்தார். தற்போது இவருக்கு கூடுதலாக வெளியுறவுத்துறை அமைச்சர் பதவியும் அளிக்கப்பட்டுள்ளது. மற்றொரு தமிழரான தர்மன் சண்முகரத்தினம் துணைப் பிரதமராகியுள்ளார். இவர், நிதி மற்றும் மனித சக்தித் துறை இலாகாவை கவனிக்க உள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதி, புதிய அமைச்சர்கள் பதவி ஏற்க உள்ளனர். அமைச்சரவையிலிருந்து விலகிய லீ குவான் யூ, அரசு முதலீட்டுக் கழகத்தின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பிரதமரான கோ சோக் டாங், சிங்கப்பூர் நிதி ஆணைய மூத் த ஆலோசகராக நியமிக்கப் பட்டுள்ளார்.

# முபாரக்குக்கு பொது மன்னிப்பா? தகவல்கள் பொய்யானவையாம்

கெய்ரோ,மே20

எகிப்து முன்னாள் அதிபர் ஹோஸ்னி முபாரக் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு, ராணுவ ஆட்சி, பொது மன்னிப்பு வழங்குவது குறித்து ஆலோசித்து வருவதாக வெளியான செய்திகளில் உண்மை இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது வழக்கு குறித்த விசாரணையில் தலையிடப் போவதில்லை என, எகிப்து ராணுவ ஆட்சித் தலைமை அறிவித்துள்ளது.

எகிப்து ராணுவ ஆட்சித் தலைமைக்கு, முன்னாள் அதிபர் முபாரக் எழுதியுள்ள கடிதம் ஒன்றில், தனது சொத்துக்கள் அனைத்தையும் நாட்டுக்குத் தந்துவிடத் தயாராக இருப்பதாகவும், தனக்கும், தன் குடும்பத்தாருக்கும் பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்றும் கோரியிருந்ததாக செய்திகள் வெளியாயின.

இது, முபாரக்கின் நாடகம் என்றும், ராணுவ ஆட்சியின் தலைவர் பீல்டு மார்ஷல் முகமது உசேன் டன்டாவி, முபாரக்கின் கீழ் ஏற்கனவே பணியாற்றியவர் என்பதால், அவரை சிறையில் அடைக்கத் தயக்கம் காட்டி வருவதாகவும் சிலர் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், ராணுவ ஆட்சியின் உயர்மட்டக் குழு வெளியிட்ட அறிக்கையில், முபாரக்குக்கும் அவரது குடும்பத்தாருக்கும் பொது மன்னிப்பு வழங்குவது குறித்து ராணுவ ஆட்சி ஆலோசித்து வருவதாக வெளியான தகவல்களில் உண்மை இல்லை. அவரது வழக்கில் ராணுவ ஆட்சி எவ்விதத் தலையீடும் செய்யாது என, குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஒஸாமாவின் புதிய ஒளிநாடா வெளியீடு

கெய்ரோ,மே20

ஒஸாமா பின்லேடன் கொல்லப்பட்ட பின்னர், அவர் ஏற்கனவே பேசிப் பதிவு செய்யப்பட்ட பேச்சுக்கள் அடங்கிய ஒளிநாடாவை அல்குவைதா வெளியிட்டுள்ளது.

12 நிமிடம் வரை ஒடக்கூடிய அந்த ஒளிப்பதிவில் எகிப்து மற்றும் டுனிஷியா நாடுகளில் நடைபெற்று வந்த போராட்டத்திற்குப் பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் ஒஸாமா கருத்துத் தெரிவித்திருந்தார்.

கடந்த 2ஆம் திகதி அமெரிக்காவின் 'சீல்' படையினர் ஒஸாமாவை சுட்டுக் கொன்ற பின்னர் முதன் முறையாக அவரின் பேச்சு அடங்கிய டேப் வெளியிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## காணி விற்பனைக்கு உண்டு

தெல்லிப்பழை வீதியில் உள்ள சிறுவிளானில் மெயின்றோட் அருகில் 34 பரப்புக் காணி வெட்டுக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: மத்தேசு அருளப்பு
பெரியவிளான், ஆத்தியோலை. T.P.No: 0779459186

## காணி விற்பனைக்கு

யாழ்.சிறுப்பிட்டி தெற்குப் பகுதியில் பத்துப் பரப்பு மரங்களுடன் கூடிய காணி விற்பனைக்கு. குடிமக்கள் வசிக்கும் பகுதி யாழ். பருத்தித்துறை வீதியிலிருந்து 20மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

தொடர்பு- 0773597068

## German Institute

German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது. German Embassyல் கேட்கப்படும் A1 Certificate. க்கு ஏற்றவாறு. 10, Palaly Road, Jaffna. 077 160 4823.

## குத்து வைரவர் தேவஸ்தானம்



### வருடாந்த விசாகப் பொங்கல் உற்சவம்

(கர வருஷம் 20.05.2011)

கைதடி குத்து வைரவர் கோயில்
பிள்ளையார் கோயில்வீதி,
கைதடி கிழக்கு.

இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அபிஷேக ஆராதனையும், அன்னதானமும் நடைபெறும். இதனைத் தொடர்ந்து சனிக்கிழமை காலை 4.00- 7.30 மணிவரை வைரவப் பெருமானுக்கு விஷேட பொங்கலும் வேள்வியும் நடைபெறும்.

அன்பர்கள், அடியார்கள் உற்சவத்தில் பங்கு கொண்டு எம் பெருமான் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

கோயில் நிர்வாகம்,
கைதடிகிழக்கு, கைதடி.

(4276)

## அறிவித்தல்
### மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

கதிரவேலு கதிர்காமநாதன்
நடராசா மேற்பார்த்து
சாவகச்சேரி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

வழக்காளி.

வழ. இல: மணநீக்கம் - 891

எதிராக
கதிர்காமநாதன் பெண் பரமநாயகி
(சுப்பிரமணியம் மகள்)
கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.

எதிராளி.

மேற்படி எதிராளியான கதிர்காமநாதன் பெண் பரமநாயகியிடம் இருந்து மணநீக்கம் பெறுவதற்காக இவ் வழக்காளியினால் மன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிராளி மேற்காட்டிய விலாசத்தில் இல்லை என அறிக்கை செய்யப்பட் டுள்ள காரணத்தினால் இந்த வழக்கில் அக்கறை கொண்டிருப்பின் அக்கறை உள்ள எவரும் 2011.07.01 ஆம் திகதி இம்மன்றில் தோன்றுமாறு பணிக்கப்படுகின்றீர்கள்.

நீதிமன்றக் கட்டளைப்படி
திலீரதத் திருநெல்வேலி
வழக்காளி சட்டத்தரணி.

(4294) (48,19,21)

## கிருஷ்ணா பாம்

ஒரு நாள் பைரகா பாம் புறொயிலர் குஞ்சு வெள்ளிக்கிழமைகளிலும் ஒரு நாள் சிவப்பு (NEL FRAM) நெல்பாம் பேட்டுக் குஞ்சு சனிக்கிழமைகளிலும் சகல விதமான மாஸ், மருந்துகளும் கீழ்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

1. S.கிருஷ்ணகுமார், மானிப்பாய் - 0772338084
2. ஐங்கரன் களஞ்சியம், மத்திய சந்தை, மானிப்பாய் - 0212255544
3. நகுலன் மாஸ்கடை, தும்பளை - 0774727332
4. மனியம் ரேடஸ், No.16, சந்தை தெற்கு வீதி, சுன்னாகம் - 0779352658
5. கௌசி களஞ்சியம், அரசடி, தொண்டமானாறு - 0771133216
6. ஸ்டான்லி பாம் - 0776144030
7. ரஞ்சிதன், மாலுசந்தி - 0776280153
8. திருமகள் கொமினிகேசன், (யாழ். இந்துக் கல்லூரி அருகில்) - 0754985692
9. பிள்ளையார் கால்நடைத்தீவனம் (கொமர்ஷல் வங்கி முன்பாக, நெல்லியடி) - 0771271164

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களின் உரிமைகளை பெற்றுத் தருவது எமது பொறுப்பு

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு



சென்னை, மே 20

இலங்கையில் எஞ்சியிருக்கும் தமிழர்களைப் பாதுகாப்பதே எமது முதலாவது பணியாக உள்ளது. ஈழத் தமிழர்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது எமது பொறுப்பு - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முள்ளிவாய்க்கால் பகுதியில் பல ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதன் இரண்டாம் ஆண்டு நினைவுநாள் பொதுக்கூட்டம் சென்னை, புரசைவாக்கம் தாணா தெருவில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் நடந்த இந்தக் கூட்டத்தில் பழ. நெடுமாறன் பேசியதாவது:

இலங்கையில் எஞ்சியிருக்கும் தமிழர்களைப் பாதுகாப்பதே நமது முதல் பணியாக உள்ளது. வீடு இழந்து, உடைமைகளை இழந்து நிற்கும் அந்த மக்களுக்கான உரிமைகள் கிடைத்திட வேண்டும். அந்த மக்களுக்கு ஆதரவாக சர்வதேச சமுதாயத்தின் குரலை வலுப்படுத்த வேண்டும். இதற்கான கடமையும், பொறுப்பும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர்களாகிய நம்மிடம் தான் உள்ளது - என்றார்.

இதேவேளை ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ பேசுகையில்:

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக அந்நாட்டு அரசு நடத்திய மனித உரிமை மீறல்களையும், பல ஆயிரம் தமிழர்களை சித்திரவதை செய்து படுகொலை செய்ததையும் ஐ.நா. சபை அமைத்த குழு அம்பலப்படுத்தியுள்ளது. இந்தப் போர்க் குற்றங்கள் பற்றி விரிவான விசாரணை நடத்தி, குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று அந்தக் குழு கூறியுள்ளது.

இந்தநிலையில், இலங்கையை இந்த நெருக்கடிகளிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கைகளை இந்திய அரசு தீவிரமாக மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் போரின் போது நடந்தவைகள் குறித்து இலங்கை அரசு நடத்தி வரும் விசாரணையே போதும் என்று இலங்கையுடன் சேர்ந்து இந்தியாவும் கூறியுள்ளது.

தமிழர்களுக்கு எதிரான காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசின் துரோகம் தொடர்வதையே இது காட்டுகிறது - என்றார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் பேசுகையில்:

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை சம்பவத்தில் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகள் தப்பிவிட்டனர். எனவே, உண்மையான குற்றவாளிகளை அடையாளம் காணும் வகையில் மீண்டும் விசாரணை நடைபெற வேண்டும் - என்று வலியுறுத்தினார். (வ)

## திபெத் பிரச்சினை: அத்வானி - லாமா ஆலோசனை

புதுடில்லி, மே 20

திபெத் பிரச்சினைக் குறித்து, பௌத்த மதத் தலைவர் தலாய் லாமாவுடன், பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர் எல். கே. அத்வானி ஆலோசனை நடத்தியுள்ளார்.

சந்திப்பு தொடர்பாக அத்வானி செய்தியாளர்களிடம் கூறுகையில்:

இமாச்சல மாநிலத்தில் உள்ள தர்மசாலாவில் தலாய்லாமா வசித்து வரும் அவரை சந்தித்து திபெத் பிரச்சினைக் குறித்தும், சீனாவின் அணுகுமுறைக் குறித்தும் விவாதித்தேன்.

தலாய்லாமாவை கடந்த முறை சந்தித்த போது, தர்மசாலாவுக்கு வருவதாக உறுதி அளித்திருந்தேன். ஐ.பி.எல் போட்டிகள் அந்த வாய்ப்பை ஏற்படுத்தித்தந்துள்ளனஎன்றார் அவர்.

இதேவேளை தலாய்லாமாவுடன் அத்வானி ஒரு மணி நேரத்துக்கு மேல் பேசியதாகவும் இருவரும் நண்பர்கள் என்றும் தர்மசாலா விலுள்ள திபெத்திய அரசின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். (வ)

# பொய் வாக்குமூலம் அளிக்க ரஞ்சிதாவுக்கு இருபது கோடி

## நித்தியானந்தா முறைப்பாடு



திருவண்ணாமலை, மே 20

தனக்கு எதிராக பொய் வாக்குமூலம் அளிக்க ரூபா 20 கோடி ரூபாவும், சட்டசபை உறுப்பினர் பதவியும் தருவதாக நடிகை ரஞ்சிதாவிடம் பேரம் பேசியுள்ளனர் என நித்தியானந்தா முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக திருவண்ணாமலையில் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில்:

என் மீது பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளன. ரஞ்சிதாவுடன் நான் நெருங்கி இருப்பது போன்ற காட்சிகள் வெளியிடப்பட்ட இறுவட்டும் போலியானது.

அந்த இறுவட்டைக் காண்பித்து என் பக்தர்களிடம் பணம் பறித்தவர்களை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டுவேன்.

என் மீது வழக்குப் போட்டவர்கள், ரஞ்சிதாவிடம் எனக்கு எதிராக வாக்குமூலம் அளிக்கும்படி வற்புறுத் தியுள்ளனர். அதற்காக 20 கோடி ரூபாவும் சட்டசபை உறுப்பினர் பதவியும் தருவதாக பேரம் பேசி உள்ளனர். ரஞ்சிதா அதற்கு உடன்பட மறுத்துவிட்டார். என் மீது போடப்பட்டுள்ள வழக்குகள் பொய் என்பதை நிரூபித்துவிட்டு தமிழகம் முழுவதும் மக்களிடம் நியாயம் கேட்டு பாத யாத்திரை செல்வேன்.

மதப் பிரசாரகர்கள் மீதும், ஆன்மிகவாதிகள் மீதும் பொய்ப் பிரசாரம் செய்தவர்களுக்கு மக்கள் தக்க பாடம் புகட்டியுள்ளனர்.

நாத்திகத்தின் காரணமாக போதை, மன அழுத்தம், இறப்பு போன்றவை ஏற்படும். இது தமிழகத்தில் அதிகமாக காணப்படுகிறது என்று அவர் தெரிவித்தார். (வ)

## அமைச்சர் பதவியில் இருந்து மம்தா ராஜினாமா

புதுடில்லி, மே 20

ரயில்வே அமைச்சர் பதவியை திரிணாமூல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி இன்று ராஜினாமா செய்யவுள்ளார்.

மேற்குவங்க மாநிலத் தேர்தலில் அவரது கட்சி அமோக வெற்றி பெற்றது. இதையடுத்து 20ஆம் திகதி அவர் முதல்வராக பதவி ஏற்கவுள்ளார்.

இந்த நிலையில் தனது மத்திய அமைச்சர் பதவியை அவர் இன்று ராஜினாமா செய்யவுள்ளார். இதேவேளை ரயில்வே அமைச்சர் பதவியை திரிணாமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவருக்கே மீண்டும் வழங்கப்பட வேண்டும் என்று மம்தா வலியுறுத்தியுள்ளார்.

அவரது கோரிக்கை காங்கிரஸ் மேலிடத்தில் ஏற்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ)


## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்பலம் சிவக்கொழுந்தம்மா



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டு, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் சிவக்கொழுந்தம்மா (17.05.2011) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து பொன்னம்பலத் தின் அன்பு மனைவியும் சிவராசா, தங்கராசா (லண்டன்), தில்லையம்மா, தவமணி (பட்டு), கணேசலிங்கம் (துரை-ஜேர்மனி), தெய்வேந்திரன் (மாம்பழம்-பிரான்ஸ்), காலஞ்சென்ற உதயகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் கோவிந்தராசா, கணேசலிங்கம், புஸ்பராணி, கலை மேனகா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*112, கனகரட்ணம் வீதி,*
*அரியாலை.*

(4368)(31)

*தகவல்:*
**இ.நந்தகுமார்.**

## 6 ஆவது நினைவலைகள்

வந்தது: 01.01.1943

போனது: 20.05.2005



சின்னஞ் சிறு குருவி
சின்னஞ் சிறு மலர்கள்
சின்னஞ் சிறு மழல்
சின்னஞ் சிறு தீவு

அத்தனைக்கும் இத்தரையில்
ஒரு மதிப்புக் கணிப்புண்டு
அவை,
சின்னஞ்சிறியதாக இருப்பதினால்
எடுப்பார் கைப்பிள்ளையாக
என்றுமே இருந்திடுவார்
என்பதாலா?

- கவிஞர் சத்தியா

*அமரர்*

### ஆறுமுகம் இராஜகோபால்

**(செம்பியன் செல்வன்)**

எழுத்து என்னும் மலர் எடுத்து மலர் மாலை சூடினீர்
வருடம் ஒருமுறை மொட்டுக்கள் மலர்வதை நீர் அறிவீரே.
உன் அனல் மூச்சை என் இதயம் அறியும் என்றும் என் மூச்சு
உள்ளவரை உன் மலர் மாலை வாடாது.

*இல.10, புதுவீதி, அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.*

*(48,19,21)*

நினைவுடன்:
புவனம், இராகுலன்.

### விற்பனைக்கு

மரம் அரியும் 16 1/2'', சைனா பட்டடை விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 021 222 5149, 0778738803

V.ஸ்டீபன், இல. 21/2, இந்துமகளிர் கல்லூரி வீதி, கந்தர்மடம்

### தவறிவிட்டது

மஞ்சத்தடி, இணுவில் கிழக்கைச் சேர்ந்த பரமலிங்கம் கமலாதேவி என்பவரது தே.அ.அ. (4471 42759 V) யாழ்.நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். அல்லது 0214900717 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### முச்சக்கர வண்டிகள் குத்தகைக்கு

பஜாஜ் புதிய பச்சை நிற
முச்சக்கரவண்டிகள் லீசிங் முறையில்
உடன் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: 0777262303

### மலிவு விற்பனை

புதியமொடல் SONY WEGA (மேல்பட்டன்) 21''TV க்கள் 18000/=, Flat 16000/=, Q2 13000/=, 29'' - 25000/= குளிர்சாதனப் பெட்டிகள் 20000/= முதல், DVD, Box அம்பிலிபயர் என்பன மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: தொ.பே.: 0771393670, 0778449829

சிறிமகேஸ்வரன் (அப்பளக் கொம்பனி)
சீனிப்புளியடி (ஆரம்பப் பாடசாலை அருகில்),
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

### றோஸ் விற்பனைக்கு

வேப்பிலை மருந்தின் மூலம் கன்றை வளர்த்துப் பாருங்கள். உண்மை விளங்கும். வேறு கன்றுகளுக்கு எம்மிடம் திரும்பவும் வருவீர்கள். விவரங்கள் நேரில். கிருஷ்ணா றோசாத் தோட்டம்

தலங்காவற் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி மேற்கு.
பூக்களும் விற்கப்படும்.

### வீடு வாடகைக்கு உண்டு

5 பரப்புக் காணிக்குள் 5 அறைகள், 2 ஹோல், சமையலறைகளுடன் கூடிய வீடும் வாகனங்கள் [illegible] வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்கள், வர்த்தக [illegible] உகந்தது.

தொடர்பு: 021 222 6853, 0776141330

## 15ஆம் ஆண்டு நினைவு நாள்



### நடராஜா சேகர்

மலர்வு : 02.10.1961
உதிர்வு : 05.06.1996
திதி: 20.05.2011

ஆண்டுகள் பதினைந்து
சென்று விட்டாலும்
அன்றுபோல் இன்றும்
நினைவுகள்
தொடர்கின்றனவே!

கரவெட்டி.

*(4381)(31)*

**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்ட புத்தகங்கள்; மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும்



## முதல்வரிடம் 'மனிதம் இன்ரநெஷனல்' நிறுவனம் கோரிக்கை

சென்னை, மே 20

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புத்தகங்கள் எனக் கூறி இலங்கையில் பறிமுதல் செய்யப்பட்ட புத்தகங்களை விடுவிப்பது தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என அந்தப் புத்தகங்களை சென்னையிலிருந்து அனுப்பிய 'மனிதம் இன்ரநெஷனல்' என்ற தொண்டு நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மனிதம் தொண்டு நிறுவன அமைப்பாளர் அக்னி சுப்பிரமணியம் செய்தியாளர்களிடம் பேசுகையில்:

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் மனிதம் இண்டர்நேஷனல் தொண்டு நிறுவனம் மனித உரிமைகளுக்காக பன்னாட்டு தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றி வருகிறது. எமது நிறுவனம் கடந்த 2009இல் இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்த தகவல்கள் அடங்கிய தமிழினப் படுகொலை, என்ன செய்யலாம் இதற்காக' என்ற இரண்டு புத்தகங்களை வெளியிட்டது.

அயர்லாந்தில் உள்ள பன்னாட்டு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் இலங்கை அரசு மீதான போர்க்குற்றம் குறித்த வழக்கில் இந்தப் புத்தகங்கள் சாட்சி ஆவணங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

எனவே இது குறித்து பல்வேறு மனித உரிமை அமைப்புகளின் பார்வைக்கு அளிக்கும் முகமாகத் தான் இந்தப்புத்தகங்கள் கனடா நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

45 பெட்டிகளில் 1,500 புத்தகங்கள் கடந்த மே மாதம் 9ஆம் திகதி சென்னையிலிருந்து கப்பல் மூலம் கனடாவின் ரொரன்டோ நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இவை கொழும்புத் துறைமுகம் வழியாகக் கொண்டு செல்லப்படுவதை எப்படியோ தெரிந்து கொண்ட இலங்கை அரசு கப்பலிலிருந்து கண்டெய்னரை இறக்கி புத்தகங்களைப் பறிமுதல் செய்துள்ளது.

இவை அனைத்தும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவை என ஒரு பொய்யான தகவலையும் தெரிவித்துள்ளது. இது உண்மைக்குப் புறம்பானது. இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள தகவல்கள், படங்கள் அனைத்தும் ஏற்கெனவே பல்வேறு பத்திரிகைகளில் பிரசுரமானவை. அவை இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலையின் நேரடிப் பதிவுகள்தான்.

போர்க் குற்றங்கள் குறித்து இலங்கை அரசு மீது ஐ.நா முறைப்பாடு கூறியுள்ள நிலையில் உலகம் முழுவதும் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ மீதான பிடி இறுகி வருகிறது. இதனைத் திசை திருப்பவே பொய்யான தகவல்களை இலங்கை அரசு தெரிவிக்கிறது.

எனவே தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்தப் பிரச்சினையை இந்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்று பறிமுதல் செய்யப்பட்ட புத்தகங்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று அவர் கூறியுள்ளார். (வ)

# தமிழக சட்டப் பேரவை மே 23 இல் கூடுகிறது

புதுடில்லி, மே 20

புதிதாக பொறுப்பேற்றுள்ள அ.தி.மு.க. அரசின் தமிழக சட்டப் பேரவையின் முதலாவது கூட்டத் தொடர் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புனித ஜோர்ஜ் கோட்டையில் மே 23 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணியளவில் 14 ஆவது சட்டப் பேரவையின் முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பமாகும் என்றும் முதலாவது நாளில் புதிய சட்ட பேரவை உறுப்பினர்கள் பதவி ஏற்பார்கள் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தெரிவுகள் இடம் பெறும் என்றும், ஜூன் 3 ஆம் திகதி சட்டப்பேரவையில் ஆளுநர் உரையாற்றுவார் என்றும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# நாம் தமிழர் கட்சிக்கு என்றைக்கும் தலைவர் பிரபாகரன்தான்



## சீமான் தெரிவிப்பு

சென்னை, மே 20

எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் முதல் கட்ட தொண்டன் நான். நாம் தமிழர் கட்சிக்கு என்றைக்கும் தலைவன் அண்ணன் பிரபாகரன்தான் என்று நாம் தலைவர் கட்சியின் ஒருங்கிணைப்பாளரும் இயக்குநருமான சீமான் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் இலங்கை அரசு நடத்தியதாகக் கூறப்படும் இனப்படுகொலையைக் கண்டித்தும், ஈழத் தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் கொடும் யுத்தம் குறித்து ஐ.நா.நிபுணர் குழு அளித்த அறிக்கைக்கு ஆதரவளித்தும், இலங்கையை இனப்படுகொலை செய்த நாடு என அறிவிக்க வலியுறுத்தியும் நாம் தமிழர் கட்சி சார்பில் நேற்று முன்தினம் வேலூர் பெரியார் பூங்காவில் இருந்து கோட்டை அருகே உள்ள மைதானம் வரை பேரணி நடைபெற்றது. இதன் போது நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமானா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (வ)



மேற்கு வங்க மாநிலத்தின் முதலாவது பெண் முதல்வராகத் தேர்வு செய்யப்பட்ட திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவர் மம்தா பானர்ஜி , தனது இல்லத்துக்கு வாழ்த்து சொல்ல வந்த தொண்டர்களைச் சந்தித்து கைலாகு கொடுக்கிறார்.

# தீவிர சிகிச்சை பிரிவில் ரஜினி

சுவாசத்தை மேம்படுத்துவதற்காக நடிகர் ரஜினிகாந்த் தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளதாக மருத்துவர் குழு தெரிவித்துள்ளது.

சுவாசக் கோளாறு மற்றும் குடல்நோய் காரணமாக நடிகர் ரஜினிகாந்த் கடந்த 13 ஆம் திகதி சென்னை போரூர் ராமச் சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு அவர் தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டார். அவருக்கு அளிக்கப்பட்டுவரும் சிகிச்சையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை மருத்துவ குழுவினர் மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர்.

அவரது உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

# ரங்கசாமி தனித்து ஆட்சி; ஜெயலலிதா கண்டனம்

சென்னை, மே 20

புதுவை முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள ரங்கசாமி தனித்து ஆட்சி நடத்துவதாக விடுத்திருந்த அறிவிப்பின் மூலம் அ.தி.மு.கவுக்கு துரோகம் இழைத்துவிட்டதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா கண்டனம் தெரிவித்துள்ளார்.

30 தொகுதிகளைக் கொண்ட புதுச்சேரி, சட்டசபை தேர்தலில் கூட்டணி வைத்து போட்டியிட்டத்தில் என்.ஆர். காங்கிரஸ் 15 தொகுதிகளிலும், அ.தி.மு.க. 5 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.

மேலும் என்.ஆர். காங்கிரஸ் கட்சிக்கு காரைக்கால் சுயேட்சை வேட்பாளர் வி.எம்.சிவக்குமார் ஆதரவு அளித்தால், தனித்து ஆட்சி அமைத்தார் ரங்கசாமி.

இந்த நிலையில் புதுச்சேரி அரசில் அ.தி.மு.கவை சேர்க்காததற்கு ஜெயலலிதா எதிர்ப்பு தெரிவித்துள்ளார். தனித்து ஆட்சியமைத்து கூட்டணிக்கு துரோகம் இழைத்துவிட்டார் என்றும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில்:

புதுச்சேரியில் அ.தி.மு.க. என். ஆர். காங்கிரஸ் கூட்டணி 30 இடங்களில் போட்டியிட்டது. இதில் 15 தொகுதிகளில் என்.ஆர். காங்கிரஸும், 5 இடங்களில் அ.தி.மு.கவும் வெற்றி பெற்றது. இந்தநிலையில், ஆட்சியில் தங்களைச் சேர்க்காமல், என்ஆர் காங்கிரஸ் கட்சி தனித்தே ஆட்சி அமைத்து, தமக்கு துரோகம் இழைத்து விட்டது. தமிழக முதல்வராக தாம் பதவியேற்றதற்கு அவர் இதுவரை வாழ்த்துக் கூட தெரிவிக்கவில்லை. புதுவையில், அ.தி.மு.க. ஆக்கப் பூர்வமான எதிர்க்கட்சியாகச் செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜெயலலிதாவின் குற்றச்சாட்டு குறித்து என்.ஆர். காங்கிரஸ் தரப்பு கூறுகையில்:

அ.தி.மு.கவை கூட்டணியில் சேர்த்துக்கொண்டோமே தவிர, வேறு எந்த வகையிலும் அந்தக் கட்சிக்கு நாம் உத்தரவாதம் அளிக்கவில்லை என்று விளக்கம் அளித்துள்ளது. (வ)

# ஈழத்தமிழர் உரிமை மீட்புக்கான முதல்வரின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு

## தா.பாண்டியன் கூறுகிறார்

ஈழத் தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்காக அ.தி.மு.க. அரசு மேற்கொள்ளும் நடவடிக் கைகளுக்கு ஆதரவாக இருப்போம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழகத்தின் முதல்வராக ஜெயலலிதா பொறுப்பேற்றவுடன் தேர்தல் அறிக்கையில் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் நலத்திட்டங்களை அறிவித்துள்ளார். இதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

குடும்ப அட்டை மூலம் அரிசி பெறுவோர் அனைவருக்கும் மாதம் 20 கிலோ அரிசி இலவசம், படித்த பெண்களின் திருமணத்துக்கு நிதியுதவியுடன் நான்கு கிராம் தங்கம் இலவசம் போன்ற அறிவிப்புகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் [illegible] பிரச்சினைக்குத் தீர்வு காண முதல்வர் ஜெயலலிதா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்படும் என்றும், பாடசாலைக் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்றும் அறிவித்துள்ளதை வரவேற்கிறோம். இலங்கைத் தமிழர்களின் மனித உரிமைகளை மீட்டுக் கொடுப்பதற்காகத் தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று முதல்வர் அறிவித்துள்ளார். எனவே இதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாம்களில் நிலவிய பாலியல் வன்செயல் சூழல்; தடுப்பதற்குத் தவறியிருந்தது இலங்கை அரசு

## இறந்தவர்களில் பலரும் அடையாளம் இன்றி குழிகளில் புதைக்கப்பட்டனர்

பிரித்தெடுக்கும் செயற்பாட்டின் போது இடம்பெயர்ந்த பெண்கள் மிக இழிவாக நடத்தப்பட்டமையை நம்பகமான குற்றச்சாட்டுகள் எடுத்தியம்புகின்றன.

(74)

**(ஆ) வலுக்கட்டாயமாக காணாமல் போதல்கள் மீதான தடை**

215. வலுக்கட்டாயமாகக் காணாமல் போதல்களைப் சர்வதேச மனிதாபிமான சட்டம் தடை செய்கிறது. (விதி 98, ஐ.சி.ஆர்.சி. ஆய்வு) இலங்கை இராணுவ மற்றும் துணைப்படைப் பிரிவுகள் பல்வேறு அமைவிடங்களில் இருந்து, பிரித்தெடுக்கும் செயற்பாட்டின்போது மற்றும் சரணடையும் இடங்களில், நபர்களை கூட்டுச் சென்று அதன் பின்னர் அவர்கள் காணப்படவில்லை. அவர்கள் பற்றிய தகவல் இல்லை என்பதற்கேற்ப நம்பகமான குற்றச்சாட்டுக்களின் இந்த ஏற்பாடு மீறப்பட்டுள்ளது. கற்றபாடங்கள் மற்றும் மீளிணக்கப்பாட்டு ஆணைக் குழுவின் அமர்வுகளின் போதும் இந்த விடயம்பற்றிக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

**(இ) தடுத்துவைக்கப்பட்டவர் களுக்கு குறைந்த பட்சத்திலான பராமரிப்புக்கான தேவைப்படுத்தல்கள்**

216. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்குப் போதியளவு உணவு, நீர், உடை, தங்குமிடம் மற்றும் மருத்துவ வசதியிகளைத் தரப்பினர் வழங்க வேண்டும் என்பதை சர்வதேச மனிதாபிமான சட்டம் தேவைப்படுத்துகிறது (விதி 118, ஐ.சி.ஆர்.சி. ஆய்வு) இலங்கை அரசு, இடம் பெயர்ந்தவர்களைக் குறைந்த பட்ச நிலைமைகள் நிறைவேற்றப்படாத நிலையில் தடுத்து வைத்தமையைக் கொண்டு ஆயுதந்தாங்கிய மோதலின் போது இந்த ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளமையை நம்பக மான குற்றச்சாட்டுக்கள் எடுத்தியம்புகின்றன.

**(ஈ) இறந்தவர்கள் மற்றும் காணாமற் போனவர்கள் தொடர்பான தேவைப்படுத்தல்கள்**

217. இறந்தவர்களைத் தேடி, அவர்களுக்குத் தக்க மரியாதையை வழங்கி, புதைகுழிகளின் அமைவிடங்கள் பற்றிப் பதிந்து, காணாமற் போனவர்களுக்கு நேர்ந்தகதி பற்றிக் குடும்பத்தினர்களுக்கு அறிவிப்பதை சர்வதேச மனிதாபிமான சட்டம் தரப்பினரைத் தேவைப்படுத்துகிறது (விதிகள் 112,113,115,116 மற்றும் 117, ஐ.சி.ஆர்.சி. ஆய்வு)

218. இறந்த பொதுமக்கள் அல்லது போராளிகள் பற்றித் தேடுவதற்காக அரசு தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என்பதால் இந்த ஏற்பாடுகளை மீறியதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இவர்களுள் அநேகர் வன்னியில் அடையாளமிடப்படாத புதைகுழிகளில் புதைக்கப்பட்டார்கள்.

கற்றபாடங்கள் மற்றும் மீளிணக்கப் பாடு பற்றிய ஆணைக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்பட்டது போன்று சரணடைபவர்களைப் பிரிக்கும் செயற்பாட்டின் போது சிலர் காணாமற்போயிருக்கலாம், கணிசமான எண்ணிக்கையிலான முன்னாள் போராளிகளையும் பொதுமக்களையும் புறத்தொடர்பற்ற முகாம்களில் அவர்களுக்கு நேர்ந்தது பற்றிக் குடும்ப உறுப்பினர்களுக்கு அறிவிக்காமல் அல்லது குடும்பங்களை ஒன்று சேர்ப்பதற்கு தேடுதல் திட்டம் ஒன்றை ஏற்படுத்தாமல் அது அடைத்துவைத்தது.

'இறந்தவர் கள் மரியாதையுடன் புதைக்கப்பட்டு புதைகுழிகளுக்கு மரியாதை வழங்கி அவை பேணப்பட வேண்டும்' என்ற சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் விதியை குழு நினைவூட்டுகிறது (விதி 115, ஐ.சி.ஆர்.சி. ஆய்வு). நிர்வாணமான பெண்களின் சடலங்கள் உள்ளிட்ட சடலங்களை மிகவும் மரியா தைக் குறைவாக இலங்கை இராணுவத் தினர் போன்று தென்படுவோர் நடத்து வதைக் காட்டும் வீடியோ சுருள்களையும் புகைப் படங்களையும் குழுகண்டது.

(75)

**(உ) உயிர் வாழ்வதற்கான பௌதிகப் பாதுகாப்பு மற்றும் ஆள்களின் உரிமை**

219. சர்வதேச மனித உரிமைகள் சட்டம் உயிர் வாழ்வதற்கான உரிமையை சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கையில் இருந்து பாதுகாத்து மனிதர்களின் பௌதிக பாதுகாப்புக்கான உரிமையை உத்தரவாதம் செய்கிறது (ஐ.சி.சி.பி.ஆர்.உறுப்புரைகள் 6 மற்றும் 9), சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான, இரக்கமற்ற அல்லது இழி வாக்கும் விதத்தில் நடத்துதல் அல்லது தண்டனை வழங்குதல் ஆகியவற்றுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பும் இவற்றோடு நெருக்கமாகத் தொடர்பு பட்டுள்ளது. (சி.சி.பி.ஆர். உறுப்புரை 7 மற்றும் சித்திரவதைக்கு எதிரான உடன் படிக்கை).

பாலியல் மற்றும் ஆண் - பெண் வித்தியாசத்தின் அடிப்படையிலான வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு எதிரான பாதுகாப்பையும் இவ்வுரிமைகள் உள்ளடக்குகின்றன.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை பகுதி - 19**

(76)

220. வரவேற்றுத் தடுத்து வைக்கப்பட்ட ஆரம்ப கட்டங்களில், போதியளவு உணவு, நீர் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு ஆகியவற்றை வழங்குவதற்கு அது தவறிய காரணத்தினால், மெனிக்பாமில் அரசிடம் கட்டுப்பாடு மற்றும் ஆதிக்கத்துக்குள் தடுக்க முடிந்த மரணங்கள் காரணமாக இந்த ஏற்பாடு மீறப்பட்டுள்ளதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன. துணைப்படைகள் முகாம்களுக்கு நுழைய வழிவிட்டு தொடர்ந்தும் மக்களை எடுத்துச் செல்ல அதிகாரத்தை வழங்குவதன் மூலம் இடம்பெயர்ந்தோரின் பௌதிகப் பாதுகாப்பை அரசு உத்தரவாதம் செய்யவில்லை.

சிஐடி மற்றும் ரிஐடியினால் விசாரணை செய்யப்படும் போது கொடூரமான, இரக்கமற்ற மற்றும் இழிவுபடுத்தும் விதத்தில் நடத்தப்படுதல், பாலியல் வல்லுறவு அல்லது சித்திரவதை நேர்ந்திருக்கலாம்.

**(ஊ) விசாரணை இன்றித் தடுத்து வைத்தலைத் தடைசெய்தல்**

221. விசாரணை இன்றி தடுத்து வைத்தல் மற்றும் சட்ட விரோதமாக தடுத்து வைத்தல் ஆகியவற்றுக்கு எதிரான சுதந்திரத்தைச் சகலருக்கும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் உறுதிப்படுத்துகிறது. (ஐ.சி.சி.பி.ஆர். உறுப்புரை 9 இனைப்பார்க்கவும்).

எவரும் கைது செய்யப்பட்டால் அவரின் கைதுக்கான காரணங்கள் மற்றும் ஏதும் குற்றங்கள் பற்றி அவருக்கு அறிவிக்கப்படல் வேண்டும். சட்டத்தை மீறிய குற்றத்துக்காகக் கைதுசெய்யப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்ட எவரும் உடனடியான சட்ட அதிகாரி ஒருவர் முன்னிலைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு நியாயமானதொரு காலப்பகுதிக்குள் சட்ட நடவடிக்கைக்கு உட்பட அல்லது விடுதலை செய்யப்பட்ட உரித்துடையவராவர். வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவரைப் பொதுவாகத் தடுப்புக்காவலில் வைக்கப்படலாகாது.

222. பெரிய எண்ணிக்கையில் நீண்ட காலங்களுக்கு மற்றும் வழக்கறிஞர் அல்லது நீதிமன்றங்களுக்கான பிரவேசம் இன்றி விசாரணை இல்லாமல் திட்டமிட்டுத் தடுத்து வைப்பது தொடர்பான நம்பகமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

மெனிக் பாம் போன்ற புறத் தொடர்பற்ற முகாம்களில் பெரிய எண்ணிக்கையிலான இடம்பெயர்ந் தோரை அடைத்து வைப்பது குறிப்பாக இதனுள் அடங்கும். ஏப்ரல் முதல் செப்ரெம்பர்வரை 290,000 வரையிலானவர்கள் அடைக்கப்பட்டு கட்டுப்பாடுகளை அனுபவிக்க நேரிட்டது. இடம் பெயர்ந்தோர் அனைவரும் விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்பட்டனர்.

மேலும் முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட சுமார் 12,000 பேர்கள் நடைமுறைப் பாதுகாப்பு மற்றும் ஐ.சி.ஆர். சியினால் சந்திக்க முடியாதவாறு வேறான இடங்களில் விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டார்கள்.

இந்த விடயங்களில் தடுத்து வைக்கப்பட்ட பெரும்பாலானோர் மீது எந்தவொரு குற்றமும் சுமத்தப்படவில்லை என்பதோடு, குற்றம் சாட்டப்பட்டோரை வழக்கு நடைபெறும் வரை தடுத்து வைப்பது பொதுவானதொரு விதியாகவே இருந்தது.

**(எ) உணவு மற்றும் நீர், உடை மற்றும் தங்குமிடம் அத்துடன் சுகாதாரம் ஆகியவற்றைப் பெறுவதற்கான உரிமைகள்**

223. சகலருக்கும் போதியளவு உணவு, உடை மற்றும் இருப்பிட வசதி ஆகிய வற்றுக்கு சர்வதேச மனித உரிமைகள் சட்டம் உத்தரவாதம் அளிக்கிறது (பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கை ஐ.சி.ஈ.ஏஸ்.சி.ஆர். உறுப்புரை 11). 'சுய விருப்பின் அடிப்படையில் அவசியமான சர்வதேச ஒத்துழைப்புக்கான இதன் விளைவுகளை இனங்கண்டு, இந்த உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தோதான நடவடிக்கைகளை எடுப்பதற்கு' அரசுகள் தம்மை அர்ப்பணித்துள்ளன. மேலும்,

(77)

அடைய முடிந்த ஆகக் கூடிய பௌதிக மற்றும் மனம் சார்ந்த சுகா தாரத்தை அனுபவிப்பதற்கான உரிமை சகலருக்கும் உண்டு. (ஐ.சி.ஈ.எஸ்.சி. ஆர். உறுப்புரை12). சுத்த நிலைமைகள், நோய்த் தடுப்பு மற்றும் பரிகாரம். அத்துடன், போதிய மருத்துவக் கவ னிப்பு ஆகியவற்றின் மேம்பாட்டுக்காக அரசு தோதான சகல நடவடிக் கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

224. தான் பகிரங்கமாக அறிவித்ததை விட மிக அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் உண்மையி லேயே யுத்த வலயத்தில் இருந்து வெளியேறுவார்கள் மற்றும் அவர்களுக்குப் போதியபராமரிப்பை வழங்க வேண்டும் என்பதை அரசு அறிந்திருந் தது அல்லது அறிந்திருக்கவேண்டும் என்பதால் அவர்களுக்காக முற்கூட்டியே ஏற்பாடுகளைச் செய்ய அல்லது தேவை தெளிவாகியதும் நிலைமையைச் சமாளிக்க அரசு தவறியது என்பதால் இந்த ஏற்பாடு மீறப்பட்டதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. மெனிக்பாம் மற்றும் ஏனைய முகாம்களைப் புறத் தொடர்புகள் இன்றி வைத்து இடம் பெயர்ந்தவர்களை விடு விக்காததோடு, இடம் பெயர்ந்தோர் தம் உறவுகளுடன் இருப்பதற்கும் அது அவர்களை அனுமதிக்கவில்லை.

யுத்தத்தின் பின் மெனிக்பாமில் தடுக்கக் கூடிய மரணங்கள் நேர்ந்ததோடு, நோய் மற்றும் மனிதர்களுக்கு ஒவ்வாத நிலை இருந்ததைக் கொண்டதான மீறல்கள் பற்றிக் குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

**(ஏ) ஒன்று கூடுவதற்கும் ஒன்று சேர்ந்து பழகுவதற்குமான சுதந்திரங்கள்**

225. ஒன்று கூடுவதற்கும் சேர்ந்து பழகுவதற்குமான சுதந்திரத்தையும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் உறுதிப்படுத்துகிறது (ஐ.சி.சி.பி.ஆர். உறுப்புரைகள் 21 மற்றும் 22). சட்டத்தினால் விதிக்கப்பட்டால் மற்றும் தேசிய பாதுகாப்பு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு, பொது அமைதி, பொதுமக்கள் சுகாதாரத்தை அல்லது நல்லொழுக்கத்தைப் பாதுகாத்தல் அல்லது ஏனையோரின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் தேவைகள் ஆகியவற்றுக்காக இந்த உரிமைகள் கட்டுப்படுத்தப்படலாம்.

226. பிரித்தெடுக்கும் இடங்களில் அல்லது மெனிக்பாமில் இடம்பெயர்ந்தோர் சர்வதேச அமைப்புகளுடன் அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களுடன் சந்திப்புக்களை மேற்கொள்ளவதை உள்ளிட்ட கூட்டங்கள் மற்றும் ஒன்று சேர்ந்து பழகுவதைத் தடுப்பதற்காக தொடர்ச்சியாக அவசரகால அதிகாரங்கள் மற்றும் இராணுவத்தின் தேவை முன்வைக்கப்பட்டதன் மூலம் பொது மக்கள் பாதுகாப்புக்கான எந்தவொரு நியாயமான மதிப்பீட்டையும் விட அளவில் இந்தக் கட்டுப்பாடுகள் அதிகமாக இருந்த, யுத்தத்தில் உயிர்தப்பியவர்களுடன் புறத்தொடர்புகளைத் தடுப்பதற்காகவும் அவை ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டதாகத் தென்படுகிறது.

(78)

**(ஐ) பெண்களின் உரிமைகள்**

227. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ், எந்தவொரு பாகுபாடுமின்றி சகல சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை அனுபவிக்கும் சம உரிமைகளை பெண்களுக்கு உறுதிப்படுத்துவது அரச கடப்பாடாகும். (ஐ.சி.சி.பி.ஆர். உறுப்புரை 2(1), உறுப்புரை 3 பெண்களுக்கு எதிரான சகல விதமான பாரபட்சங்களையும் அகற்றுவதற்கான உடன்படிக்கை) பெண்களுக்கு எதிரான சகல விதமான பாரபட்சங்களையும் அகற்றுவதற்குச் சகல நடிவடிக்கைகளையும் மேற்கொள்ளும் கடமையை இந்தக் கடப்பாடு உள்ளடக்குகிறது. மீறல்களைத் தடுப்பதற்கு, புலனாய்வு செய்வதற்கு மற்றும் மீறல்களைத் தண்டிப்பதற்கு அத்துடன் நஷ்டஈடு வழங்குவதற்கு, அவை பொது அல்லது தனிப்பாத்திரம் மேற்கொண்டிருந்த போதிலும், அரசுக்கு ஒரு கடப்பாடு உண்டு.

228. புலனாய்வு செய்யப்படாத, மெனிக்பாமில் நடந்தேறிய பாரதூரமான பாலியல் வல்லுறவு சம்பவங்கள் உள்ளிட்ட முகாம்களில் மற்றும் மீள் குடியமர்த்தல் செயற்பாட்டின் போது, பெண்கள் பாலியல் தொடர்பான வன்முறைக்கு ஆளாக்கப்பட்டன, என்பதால் இந்த உரிமைகள் மீறப்பட்டதற்கான நம்பகமான குற்றச் சாட்டுக்கள் உள்ளன. பாலி யல் சார்ந்த வன்முறைக்குச் சாதகமான முகாம்களின் சூழலை மாற்றுவதற்காக அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவின்கீழ் பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி வீராங்கனைகள் மற்றும் பொறுப்பாசிரியர்கள். (231)

# மாவட்ட மட்ட ஹொக்கி ஆட்டத்தில் யூனியன், உடுவில் சம்பியன்கள்

யாழ்ப்பாணம்,மே 20

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்கும் இடையிலான ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரி, உடுவில் மகளிர்கல்லூரி ஆகியவை சம்பியனாகின.

கடந்தவாரம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் யூனியன் கல்லூரியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி மோதியது.

யூனியன் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாமிடத்துக்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

யாழ்ப்பாணக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வெற்றி கொண்டது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து குளமங்கால் றோமன் கத்தோலிக்க பாடசாலை மோதியது.

இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் குளமங்கால் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையை வெற்றி கொண்டது. (ஐ-23)

# ஒலிம்பிக் தின நிகழ்வு கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம்,மே 20

தேசிய ஒலிம்பிக் தின நிகழ்வு அடுத்த மாதம் 23 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான முன் ஆயத்தங்களை வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை மேற்கொண்டுள் ளார்.

2010 ஆம் ஆண்டு தேசிய ஒலிம்பிக் தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-23)

# பெண்களுக்கான உதைபந்தாட்டம்; மாவட்ட சம்பியன் பருத்தித்துறை

வலி.மேற்கு,மே 20

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இடையே வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு நடத்திய பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கரவெட்டி இமையாணன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

போட்டியில் இரு அணிகளும் ஓர் அணிக்கு மற்றைய அணி சளைத்தவை அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் இரு அணிகளும் போட்டி ஆரம்பமாகி முடிவடையும்வரை மோதிக் கொண்டன.

ஆனாலும் முதல் பாதி ஆட்டத்தில் போட்டி ஆரம்பமாகி சில நிமிடத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி தனது முதலாவது கோலைப் பெற்றுக் கொண்ட நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெற வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கி மோதிக் கொண்ட போதிலும் இரு அணிகளும் கோல்களைப் பெற முடியாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 1:0 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை வெற்றி பெற்று யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.


(ஐ-86)

## முடிவில்லாத் துயரலையில் 4 ஆம் ஆண்டு நினைவுகள் சுமந்து



மலர்வு: 1980.09.25

சோதிராஜா நிஷாந்தன்



மலர்வு: 1986.11.06

சோதிராஜா சுதர்சன்

உதிர்வு: 04.06.2007

என் பிரியமான செல்வங்களே
என் நெஞ்சம் வலிக்குதையா - உங்கள் பிரிவால்
வாழ்வைத் தொடங்க முன்னர் எம்மிடமிருந்து தட்டிப் பறித்து
நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்ததையா
கனவு போல் இருக்கின்றதையா - என்
காவிரிப்பூம் பட்டினத்தில் என் கருக மணிகள் மறைந்து விட்டதே
வைகை ஆற்றினிலே என் வைர மீன்கள் மறைந்து விட்டனவே
பெரும் கானகத்தில் என் கானமயில்களை காணவில்லையே
என் கருக மணிகளைக் கண்டெடுக்க முடியுமா?
என் வைர மீன்கள் மீண்டும் வருமா?
என் கானமயில்களை நான் காண்பதுதான் எப்போது?
நான் பாவி பாசத்தைத்தேடி அலைகின்றேன்
பாவிகள் என் வயிற்றில் பெரும் நெருப்பை மூட்டி விட்டார்கள்
என் கானக்கருங் குயிலே கருகமணிப் பூச்சரமே
மானே மருக் கொழுந்தே மல்லிகைப் பூச்சரமே

ஐயாக்களே! உங்கள் சிங்காரப் பேச்சு எங்கே?
என் ராசாக்கள் உங்கள் சிரிப்பழகு எங்கே?
என் ஐயா உங்கள் ராஜநடை எங்கே?
ஊர் கண் பட்டதடா என் மான் குட்டிகளுக்கு
ஐயா நான் இப்போது யாருமற்ற அநாதை
நான் நடந்து செல்லும் பாதை எல்லாம் - என்
செல்வங்களின் காலடிச் சுவடுகளைத் தேடுகின்றேன் - ஆனால்
என் செல்வங்களின் காலடிச் சுவடுகளை எங்கு தேடியும்
காணவில்லையே என் பாசமுள்ள செல்வங்களின்
பாதச் சுவடுகளைப் பார்க்க முடியாமல் பாதகர்கள்
அழித்து விட்டார்கள். பாவி நான் பரிதவிக்கின்றேன்
என் செல்வங்களின் பாதச் சுவடுகளைத் தேடி
உங்கள் தாய் படும் வேதனை புரியவில்லையா
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டுப் பிரியாது
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

80, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (48,22,19)

தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

யா/அளவெட்டி சதானந்தா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம் நாளைமறுதினம் (22.05.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற இருப்பதால் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் தவறாது வருகை தருமாறு பாடசாலை அதிபர் கேட்டுக்கொள்கின்றார்.

**யா/சதானந்தா வித்தியாலயம்,**
அளவெட்டி.

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்திலுள்ள கீழ்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி: எழுதுநர் (நிரந்தரமானது)
குறியீட்டிலக்கம்: 66/2006/302/13
சம்பளத்திட்டம்: 9950-85X10-90X10 = 11,700/-

*தகைமைகள்:*

1. கூட்டுறவுப் பணியாளரின் 14 ஆம் சம்பளத்திட்டத்திலமைந்த எழுதுநர் பதவியில் பெற்றுள்ள 2 வருட அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 15 ஆம் சம்பளத்திட்டத்தில் அமைந்த எழுதுநர் பதவியில் பெற்றுள்ள 4 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

2. க.பொ.த. சாதாரண தரத்தில் எண்கணிதம்/கணிதம்/தூயகணிதம்/வர்த்தககணிதம், சிங்களம்/தமிழ்ப்பாஷை என்பன உட்பட 5 பாடங்களில் திறமைச்சித்தியுடன் கூடிய 6 பாடங்களில் பெற்றுள்ள சித்தியுடன் கூட்டுறவுச் சங்கமொன்றில் எழுதுநர் பதவியில் பெற்றுள்ள 2 வருட அனுபவம்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுடன் கணினித் தகைமையும் அறிவும் அவசியம்.

*பொதுவானது:*

1. வயதெல்லை 18-45 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது என்பதுடன் அவர்கள் தமது விண்ணப்பத்தை தாம் பணி புரியும் சங்கத்தினூடாகவே அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை சங்கத்தில் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட படிவத்துடன் சான்றிதழ்களின் நிழல்பிரதிகளையும் இணைத்து பொது முகாமையாளர், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி என்ற முகவரிக்கு 06.06.2011 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ, பதிவுத் தபாலிலோ அனுப்பி உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்.
19.05.2011 (சி/101)

## சம்பந்தர் படம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மே 20

திருஞானசம்பந்தர் சுவாமிகளின் குரு பூசையை முன்னிட்டு நாயனாரின் திரு உருவப்படத்தை மில்க்வைற் சோப் தொழிலகத்தில் அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தொழிலதிபர் இ.தவ கோபால் தெரிவித்துள்ளார். (ஐ)

## சனியும் ஞாயிறும் மின்வெட்டு

யாழ்ப்பாணம், மே 20

உயரழுத்த மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை புத்தூர், வாதரவத்தை, வீரவாணி, ஆவரங்கால், ஊறணி மற்றும் உசன், விடத்தற்பளை, கெற்பேலி, மிருசுவில், எழுதுமட்டுவாள், பளை ஆகிய இடங்களிலும் -

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபை அறிவித்துள்ளது. (ஐ)

## வளமான....

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரமான பல்கலைக்கழக ஆசிரியர்கள் இல்லாது போனால் இந்த நாட்டின் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், அரச அதிகாரிகள், கணக்காய்வாளர்கள் என அனைத்துத் துறைகளுமே தரமற்றதாகி விடும். ஏனெனில் பல்கலைக்கழக ஆசிரியர்களே அனைத்துப் பட்டதாரிகளையும் பயிற்றுவிக்கிறார்கள். இலங்கையின் சகல பல்கலைக்க ழகங்களிலும் பல துறைகளுக்கும் பேராசிரியர் மற்றும் விரிவுரையாளர்களுக்கான வெற்றிடங்கள் பல வருடங்களாக நிரப்பப்படாமல் உள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உட்பட சில பல்கலைக்கழகங்களில் பல வெற்றிடங்கள் 30 வருடங்களுக்கு மேலாக நிரப்பப்படாமல் உள்ளன. இவ்வாறன வெற்றிடங்களின் எண்ணிக் கையை மேலும் அதிகரிக்க முயல்வது இந்த நாட்டுக்கும் அதன் எதிர் காலத்துக்கும் ஆரோக்கியமானது அல்ல.

எனவே, பல்கலைக்கழக ஆசிரியர்களின் அண்மைய தொழிற் சங்க நடவடிக்கை வெற்றி பெறுவது இந்த நாட்டின் வளமான எதிர்காலத்துக்கும் அதன் சுபீட்சத்துக்கும் மிகவும் அவசியமானது.

## MICRO COMPUTER SERVICE CENTRE

அனைத்து விதமான கணினிகளும் குறைந்த விலையில் திருத்திக் கொடுக்கப்படுவதுடன் புதிய கணினிகளும் பொருத்திக்கொடுக்கப்படும். புதிய மென்பொருள்கள் Editing Software கள் விற்பனைக்கு உண்டு. அனைத்து திருத்த வேலைகளும் உங்கள் பாடசாலைகள், நிதி நிறுவனங்கள், வீடுகள் போன்ற இடங்களில் வந்து செய்துகொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: MICRO COMPUTER SERVICE CENTRE
சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை, சுன்னாகம்.
Phone No: 0212240201, 0774667603 (சி/100)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் சின்னையா இராமச்சந்திரன்**

19.04.2011 அன்று இறைபதமடைந்த எமது குல தெய்வத்தின் இறுதிக்கிரியைகளிலும் நேற்று (19.05.2011) வியாழக்கிழமை கீரிமலையில் நடைபெற்ற அன்னாரது அந்தியேட்டி கிரியைகளிலும் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி கூறிக்கொள்வதோடு, நாளை (21.05.2011) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன விருந்திலும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

மாலுசந்தி, அல்வாய் கிழக்கு. **குடும்பத்தினர்.** (சி/102)

## அழியா நினைவுகளுடன் ஆண்டு பதினொன்றில்....



அமரர்
**அரியகுட்டி சித்திரவடிவேலு**
(குகன்)

உரிமையாளர்:-
குகன் ஸ்ரூடியோ,
சாவகச்சேரி.

ஆண்டவன் படைப்பில் 23.10.1927
திதி:-துதியை
யுத்தத்தின் பிடியில் 20.05.2000

**இதயத்து மொட்டில் பதியிட்ட உங்கள்
இனிய முகத்தெழில் என்றைக்கும் தங்கும்**

புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.

மனைவி,மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
03 ★ 03 ★ 1944



உதிர்வு
20 ★ 04 ★ 2011

**திருமதி ஆன் பிரான்சிஸ்கா புஸ்பரத்தினம் தியாகராசா**

அன்பின் அம்மாவே
எங்களை விட்டு எங்கு சென்றீர்கள்
அவனியில் உங்களைத் தேடுகின்றோம்- ஆனால்
இன்று நீங்கள் எங்களுடன் இல்லை
அம்மா என்று இனி யாரை நாம் அழைப்போம்
நீங்கள் தான் எம்முடன் இல்லையே
ஆயிரம் தான் உறவுகள் இருந்தாலும்
அம்மா என்று அழைக்க நீங்கள் இல்லையே
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
என்றும் எமக்கு நீங்கள் தான் அம்மா.

கடந்த 20.04.2011 அன்று இறைபதம் எய்திய எம் அன்புத் தாயின் பிரிவால் துயருற்றிருந்த எமக்குப் பலவழிகளிலும் உதவிகள் நல்கி நேரிலும், தொலைபேசி வாயிலாகவும், தந்திமூலமும், பத்திரிகை மூலமும், துண்டுப் பிரசுரங்கள் மூலமும் அனுதாபங்களும் ஆறுதலும் பகிர்ந்த வர்களுக்கும் மலர்வளையம் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் யாவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல. 47, பென்ரிகோஸ் லேன்,
யாழ்ப்பாணம். (4390) குடும்பத்தினர்.

## ஏல விற்பனை அறிவித்தல்

**தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை**

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 31.03.2010 வரை அடகு வைத்து 31.03.2011 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஏல விற்பனைத் திகதி:
04.06.2011 சனிக்கிழமை
காலை 8.30 மணி**

| கிளையின் பெயர் | ஏல விற்பனை நடைபெறும் இடம் |
|---|---|
| யாழ்ப்பாணம்<br>யாழ்ப்பாணம் 2 ஆம் கிளை<br>சுன்னாகம்<br>மானிப்பாய்<br>திருநெல்வேலி<br>சாவகச்சேரி | யாழ்ப்பாணக் கிளை,<br>இல. 496, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>T.P.: 021 222 2696 |

ஏல விற்பனை இரத்துச் செய்யும்/ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

NSB

உதவிப் பொது முகாமையாளர் (கடன்),
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமை அலுவலகம், கொழும்பு - 03. (சி/096)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய மூவரணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட நீக்கம் மீனவர் பிரச்சினை மனித உரிமை மீறல் என்பன குறித்து ஆராயவே மூவரணி முதலில் திட்டமிட்டிருந்தது. குறிப்பாக நிபுணர் குழு அறிக்கையின் பின்னரான களச்சூழலில் இந்தியாவின் உதவியை இலங்கை அதிகம் எதிர்பார்த்திருந்தது. எனினும் அமைச்சர் பீரிஸின் பயணத்தின் போதே இந்த விவகாரங்கள் குறித்து ஆராயப்பட்டு விட்டதாக புதுடில்லி வட்டாரங்கள் கூறுகின்றன.

" மேற்கொண்டு எடுக்கவேண்டிய நகர்வு குறித்து இனிமேல் இலங்கை தான் முடிவு செய்ய வேண்டும். இந்திய நிலைப்பாடு என்ன என்பது தெளிவு படுத்தப்பட்டு விட்டது. அதற்கான இலங்கை அரசின் பதிலைப் பொறுத்தே இந்தியாவின் அடுத்த கட்ட நடவடிக்கை அமையும். எனவே இப் போதைக்கு இந்தியக்குழு இலங்கை செல்லவேண்டிய அவசியம் ஏது மில்லை'' என்று தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சுடன் நெருங்கிய தொடர்புடைய அதிகாரி ஒருவர்.

அமைச்சர் பீரிஸ் இந்தியாவில் தங்கியிருந்த மூன்று நாள்களில் ஒரு நாள் முழுவதும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எம்.கே. கிருஸ்ணாவுடனும் மறுநாள் மூவரணியுடனும் பின்னர் பிரதமர் மன்மோகன்சிங்குடனும் விரிவானகலந்துரை யாடல்களை நடத்தியிருந்தார்.

இந்தியாப் பயணத்தை முடித்துக் கொண்டு அமைச்சர் பீரிஸ் சீனா, வியட்நாம், மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு பயணமாகியுள்ளார். அவர் நாடு திரும்பிய பின்னே இந்தியா விவகாரத்தில் மேற்கொண்டு இலங்கை அரசு நடவடிக்கை இறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து முழு நாளும் தேடுதல் நடத்தினர்.

கிராமத்தவர்களின் குடும்ப அட்டை, அடையாள அட்டை ஆகியவற்றைச் பரிசோதனை செய்த படையினர் அவர்கள் இப்போது செய்துவரும் தொழில் குறித்தும் கேட்டறிந்தனர்.

பாதுகாப்புக்காக இந்த நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டது என்று பாதுகாப்புத்தரப்புத் தெரிவித்தது.

போர் முடிவடைந்த பின்னர் இந்தக் கிராமம் முதல் தடவையாகச் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-ஐ)

## தமிழ் மக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள், வைத்திய நிபுணர்கள், முன்னாள் போராளிகளின் மனைவிமார் ஆகியோர் தீபங்களையும், மெழுகு வர்த்திகளையும் ஏற்றினர்கள்.

சுடர் ஏற்றும் நிகழ்வைத் தொடர்ந்து தமிழ் இனத்துக்காக உயிர்த்தியாகம் செய்த மக்களின் ஆத்ம சாந்திக்காக இரண்டு நிமிட நேர அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து சர்வமத பிரார்த்தனை இடம்பெற்றது. சைவ சமய பிரார்த்தனையை சங்கீதபாட முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.கே. நடராஜன் நிகழ்த்தினார். கிறிஸ்தவப் பாடல்களும் பாடப்பட்டன. கிறிஸ்தவ மதப் பிரார்த்தனையை இளைப்பாறிய பேராயர் ஜெபநேசன் அடிகளார் நிகழ்த்தினார். இதன் பின்னர் வயலின் இசை நிகழ்வு இடம்பெற்றது. மிகவும் உணர்ச்சிபூர்வமாக இந்த நிகழ்வு அமைந்தது.

இந்த நிகழ்வு இடம்பெற்று முடிந்து மக்கள் மண்டபத்தை விட்டு வெளியேறும் வேளை திடீரென அங்கு வந்த இராணுவத்தினர் மக்களை அங்கிருந்து வெளியேற விடாமல் தடுத்தனர். என்ன நிகழ்வு இடம்பெற்றது? யாருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது? என்று இராணுவத்தினர் விசாரணை செய்தனர். கட்டளை அதிகாரி ??

## சந்தேக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் அணிவகுப்புக்காகப் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் நிறுத்தப்பட்டனர்.

இறந்த பெண்ணுடன் கடத்தப்பட்ட இவரது மகனான குகதாஸன் சாந்தரூபன் (வயது-15) என்பவர் முக்கிய சாட்சியாக அணி வகுப்பில் கலந்துகொண்டவர்களை அடையாளம் காட்ட அழைக்கப்பட்டார். அடையாள அணிவகுப்புக்கு நிறுத்தப்பட்டோரில் ஐந்தாம் சந்தேக நபரான பாலகிருஷ்ணன் மோகன பிர சாத் ஆறாம் சந்தேக நபரான நவரத்தினம் கோபிகிருஷ்ணா ஆகியோரை அவர் அடையாளம் காட்டினார்.

இதனையடுத்து வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நான்காம் சந்தேக நபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ப. குகனேஸ்வரன் சந்தேகநபரான சிவகுமார் பிரசன்னாவை வழக்கிலிருந்து விடுவிக்குமாறு கோரினார். இதற்குச் பொலிஸார் ஆட்சேபனை தெரிவிக்காததால் இவரை வழக்கிலிருந்து விடுவிக்குமாறு நீதிவான் மா.கணேசபிள்ளை உத்தரவிட்டார்.

இவ்வழக்கின் முதலாம், இரண்டாம், மூன்றாம், ஐந்தாம், ஆறாம் சந்தேக நபர்களை எதிர்வரும் ஜூன் இரண்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த மார்ச் 6 ஆம் திகதி மீசாலை பகுதியில் வளவு துப்புரவு செய்து கொண்டிருந்த பெண் ஒருவரும் அவரது மகனும் வானில் கடத்தப்பட்டனர். மறுநாள் காலை சாவகச்சேரி கிராம்புவில் பகுதியில் பெண்ணான கு. சாந்தினி என்பவர் சடலமாக மீட்கப்பட்டார். இந்தக்கொலை தொடர்பில் பெண்ணின் கணவர், வாகன சாரதி, உறவுக்காரப் பெண், வவுனியாவிலிருந்து அழைத்து வரப்பட்டதாகக் கருதப்பட்ட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-207)

## மாத இறுதிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் அந்த மக்களின் விருப்பம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார் மேஜர் ஜெனரல்.

வலிந்தூண்டல் மக்களின் பிரச்சினை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ சரணவன் மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவின் கவனத்துக்கு அண்மையில் கொண்டுவந்திருந்தார். (உ-ஐ)

## 224 கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் செயலாளர் ஏ.திஸா நாயக்க நேற்று 'உதயன்'க் குத் தெரிவித்தார்.

கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட தையடுத்து, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர இவர்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி மூவர் அடங்கிய உயர் மட்டக்குழு ஒன்றை நியமித்துள்ளார்.

பாரிய அளவிலான குற்றங்கள் புரிந்து ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளே இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதுதொடர்பாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க மேலும் கூறியவை வருமாறு:-

ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட 224 சிறைக்கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் ஏழு பேர் சிறைச்சாலையின் கூரை மீது ஏறி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆயுள்தண்டனைக் காலத்தை குறைக்குமாறு கோரியே இந்தக் கைதிகள் போராட்டம் நடத்துகின்றனர். இவர்கள் அனைவரும் பாரிய குற்றம் புரிந்தவர்கள். 2600ஆவது ஸ்ரீ சம்புத்த ஜயந்தியை முன்னிட்டு சிறு குற்றம் புரிந்து தண்டனை அனுபவித்த கைதிகளே விடுவிக்கப்பட்டனர். இந்தக் கைதிகள் அரசியல் கைதிகள் அல்லர்.

கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக நேற்றுக் காலை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர அவசர சந்திப்பு ஒன்றை அமைச்சில் நடத்தினார். இதன்போது இந்தக் கைதிகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை ஒன்றை தமக்குச் சமர்ப்பிக்குமாறு உயர் மட்டக் குழு ஒன்றை நியமித்தார்.

இந்தக் குழுவில் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதியரசர், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளர், நீதியமைச்சின் மேலதிக செயலாளர் ஆகியோர் அடங்குவர். இந்தக் குழுவால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையின் பின்னர் இந்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும்.

- இப்படி அவர் தெரிவித்தார். (த-சி)

### தவறிவிட்டது

ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் எனும் முகவரியைச் சேர்ந்த தங்கவடிவேல் மலரவன் என்பவரது தே.அ.அட்டை (870413254V) கச்சேரிக்கு முன்பாக தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே.: 0778448440

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### உயர்திரு. விசாகசுந்தரம் அருளானந்தம்

B.A.(Hons) M.A. in Economics
P.G.D. in public Administration
M.A. in public Administration
AIB Sri Lanka

எமது கிளையில் சிரேஷ்ட முகாமையாளராக இதுவரை காலமும் கடமை யாற்றி, வலய முகாமையாளராக (வடக்கு, கிழக்கு) பதவியுயர்வு பெற்றச் செல்லும் வி.அருளானந்தம் அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

ஊழியர்கள்
தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### தம்பிரத்தினம் சுரேந்திரன்



நாள்கள் நகர்கின்றது
உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி
தீபங்களும் ஒளிர்கின்றது
உங்கள் ஆத்மாவை அணைத்தபடி
உறவுகளும் தொடர்கின்றது
உங்கள் எண்ணங்களை உரைத்தபடி
கனவுகளும் கலைகின்றது
உங்கள் வாழ்வியலை வரைந்தபடி...
ஒன்றாகி நாள்கள் மாதங்கள் கடந்து
வருடங்கள் ஆனாலும்
புலரும் பொழுதுகளும் தொடரும் வாழ்வும்
மலரும் உங்கள் நினைவாலே..

தோற்றம் : 11-05-1964
மறைவு :31-05-2010

நினைவுகளைத் தீபமாக்கி
பாக்களை நகலாக்கி
பூக்களை விருந்தாக்கி
உங்களை என்றும் எங்கள்
உணர்வுகளோடு பூஜிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மட்டுவில் கிழக்கு,
கமலாசனி பாடசாலை முன்,
சாவகச்சேரி. (4395)

குடும்பத்தினர்,
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்

## மரண அறிவித்தல்



### வேலன் வியாளச்சி

மல்வம், உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் வியாளாச்சி நேற்று (19.05.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் வேலனின் அன்பு மனைவியும், செல்வரத்தினம், முருகையா, சோதிப்பிள்ளை, பூரணம் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

அம்பாள் வீதி,
மல்வம், உடுவில்,சுன்னாகம். (4392)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

**CSE COLOMBO STOCK EXCHANGE**

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
வைகாசி 19, 2011
பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7,487.61↑
மிலங்கா(MPI) 6,897.01↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 3,037.87Mn
பங்குகளின் அளவு(No.) 149.57Mn
வியாபாரம்(No.) 24,977
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
காடியன் பாட்னர் 275.00
புளு டயமன்ட்ஸ் 4.70
பிறின்ட் கெயர் 276.90
திரி ஏக்கர் பா(f)ம்ஸ் 154.20
அமானா ரக்காபு(f)ல் 2.10
குறைவு(Top 5 losers) - விலை Rs.
ஏசியன் அலையன்ஸ் 1200.00
கெல்சீ டெவலப்மென் 17.90
சாம்சன் இன்ரநஷனல் 137.10
சிகிரியா வலி 105.00
லங்கா வெஞ்ச 45.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# பொது மக்களின் கடிதங்களுக்கு இரண்டு நாள்களுக்குள் பதில்

## அரச அலுவலர்களுக்கு அமைச்சர் ஜோன் பணிப்பு



யாழ்ப்பாணம், மே 20

எமது மக்களிடம் இருந்து கிடைக்கும் கடிதங்கள் மற்றும் முறைப்பாடுகளுக்கு அரச அலுவலர்கள் இரண்டு நாள்களுக்குள் பதிலளிக்க வேண்டுமென நேற்று யாழ்.வந்த உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

பொதுமக்களின் தேவைகள் உடனடியாக நிறைவேற்றிவைக்கக் கூடியதாக பிரதேச செயலகங்களுக்குச் சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதில் ஜனாதிபதி மிகுந்த அக்கறை கொண்டுள்ளார் எனவும் அமைச்சர் கூறினார்.

நல்லூர் பிரதேச செயலகத்துக்கு நேற்று வியாழக்கிழமை சென்ற உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்ற உத்தியோகத்தர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டார்.

பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் அனைத்துக் கடிதங்களுக்கும் இரண்டு நாள்களுக்குள் பதிலளிக்குமாறு அவர் அங்கிருந்த அரச அலுவலர்களிடம் கேட்டுக்கொண்டார்.

நல்லூர் பிரதேச செயலகத்துக்கு மேலும் இரண்டு கணினிகளை வழங்கவும், பிரதேச செயலகத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பவும், புதிய அலுவலக உதவியாளர்களை நியமிக்கவும், அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்கள் பதவி உயர்வுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

அமைச்சின் செயலாளர், யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (த-7)

## சிறுப்பிட்டியில் சம்பந்தர் விழா

யாழப்பாணம், மே.20

வலி. கிழக்கு சைவசமய அருள்நெறிமன்றமும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்தும் திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிமுதல் சிறுப்பிட்டி வடக்கு இலுப்பையடி முத்துமாரியம்மன் கோயில் மண்டபத்தில் நடைபெறும்.

இந்துசமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. மா.அனந்தலட்சுமி தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை கலந்துகொள்வார்.

ஆசியுரையை மன்றத்தலைவர் சிவஸ்ரீ.சோ.இ.பிரணதார்த்திகரக் குருக்களும், கருத்துரையை க.ஸ்ரீஸ்கந்தராசா, சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் ஆகியோரும் நிகழ்த்துவர். கன்னியர் வைரவர் அறநெறிப் பாடசாலை, கலைவாணி முன்பள்ளி மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

# மாணவருக்கான இராணுவப் பயிற்சி எந்த நாட்டிலும் இல்லாத நடைமுறை

## ஐ.தே.கட்சி தாக்கு

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இவ்வாறானதொரு திட்டம் உலகின் வேறெந்த நாட்டிலும் நடைமுறையில் இல்லை. பல்கலைக் கழக மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளித்தல் தொடர்பாக அரசமைப்பிலோ, பல்கலைக்கழக சட்டத்திலோ, சர்வதேச மனித உரிமை பட்டயத்திலோ எதுவும் இல்லை.

- இப்படி ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றுத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இவ்வாறான புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தினால் அதனை சட்டரீதியாக மேற்கொள்ள வேண்டும். மாறாகத் தன் விருப்பின் பேரில் அரசு நினைத்ததை நடத்தி பல்கலை மாணவர்களின் எதிர்காலத்தை இருளாக்க இடமளிக்க முடியாது. சட்டங்களுக்கு முரணாக அரசு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமை இதன் மூலம் விளங்குகிறது.

இராணுவ முகாம்களுக்கு அழைத்துச் சென்று இந்தப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் சிறுபான்மை இன மாணவர்கள் உளரீதியாகப் பாதிப்படைவார்கள். அத்துடன், இராணுவப் பயிற்சி தொடர்பாக மாணவர்களின் பெற்றோருக்கும், மக்களுக்கும் எவ்வித அறிவித்தலையும் அரசு விடுக்கவில்லை.

பல்கலை மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்குவதன் ஊடாக அவர்கள் மத்தியில் ஒழுக்கத்தைக் கட்டியெழுப்பலாம் என்று ஆளுங்கட்சி அமைச்சர் ஒருவர் அண்மையில் தெரிவித்திருந்தார். இது ஒரு வேடிக்கையான கதையாகும். ஏனென்றால் இன்று நாட்டில் உள்ள ஆட்சியாளர்களிடம் ஒழுக்கம் உள்ளதா? அவர்களுக்கு ஒழுக்கம் என்ற ஒன்று இருக்குமானால் நிச்சயமாக நாட்டு மக்களும், மாணவர்களும் ஒழுக்கமாக செயற்படுவார்கள். மாறாக, ஆட்சியாளர்களுக்கு ஒழுக்கம் இல்லாமல் மாணவர்களுக்கு ஒழுக்கத்தைத் திணிப்பது எப்படி?

இலங்கையில் அரச தீவிரவாதம் நடைமுறையில் உள்ளது என ஐக்கிய நாடுகள் அமைப்பு உட்பட சர்வதேச நாடுகள் தெரிவிக்கின்றன. இது இவ்வாறு இருக்க, பல்கலை மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளித் தால் சர்வதேசம் கூறும் விடயம் உண்மையாகிவிடும்.

-இப்படி அவர் கூறினார்.

## இராணுவச் சீருடையில் வந்தவர்கள் பஸ்ஸை வழி மறித்துக் கொள்ளை

இராணுவச் சீருடையில் ஆயுதங்களுடன் வந்த 8 பேரினால் பானமுரவில் பஸ் ஒன்று வழிமறிக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பானமுர பிரதான வீதியில் பயணித்துக்கொண்டிருந்த பஸ்சை இராணுவச் சீருடையில் ஆயுதங்களுடன் வந்த எட்டுப் பேர் வழிமறித்துள்ளனர். பிரதான வீதியிலிருந்து மறைவிடத்துக்கு பஸ்ஸைத் திருப்பிய பின்னர் ஆயுதங்களைக்காட்டி அதிலிருந்த பயணிகளை மிரட்டியுள்ளனர்.

இராணுவ சீருடையில் எட்டுப் பேர் ஆயுதம் தாங்கிய வண்ணம் பஸ்ஸை மறித்து பயணிகளை அச்சுறுத்தினர். நகை, பணம் என்பவற்றை தராவிட்டால் சுட்டுவிடுவோம் என்று எச்சரித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு தனிப்படை பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றுள்ளது. (த-15)

## யுவதி மீது 'அசிட்' வீசித் தாக்குதல் இளவாலையில் சந்தேக நபர் கைது

இளவாலையில் கடந்த ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி இடம்பெற்ற 'அசிட்' வீச்சு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை இளவாலைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இளவாலையைச் சேர்ந்த கே.ரகுமான் (வயது-20) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலை அகஸ்தியர் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த இனந்தெரியாத இருவர் ஏ.லொரின்கொன்சென்ற் (வயது - 25) என்ற யுவதி மீதே 'அசிட்' வீசி தாக்குதல் மேற்கொண்டனர். பிரஸ்தாப இளம் பெண் வீட்டில் இரவுவேளை உணவை உட்கொண்டிருந்த போது திடீரென நுழைந்த இருவர் அவர் மீது அசிட்டை வீசிவிட்டு தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட இளவாலைப் பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளனர். (த-15)

# நிகழ்வுகள்

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே.20

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் 'ஒழுங்கான சமுதாயத்தின் வழிகாட்டிகள் மாணவர்கள்' என்னும் தலைப்பில் தரம் 10 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி.சரோஜா சிவசந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் சட்டத்தரணி மு.றெமீடியஸ், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் த.கிருத்திகா, யாழ்.போதனா வைத்தியசாலை மகப்பேற்று நிபுணர் வைத்திய கலாநிதி பவானி ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ற-311)

### முன்பள்ளி திறப்பு விழா

வடமராட்சி, மே.20

பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன்பற்று உப அலுவலக எல்லைக்குட்பட்ட மருதங்கேணி வடக்கு முன்பள்ளி திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச சபையின் செயலாளர் சோ.ஜெயவசீகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், சிறப்பு விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார, சிறுவர் பாதுகாப்பு நிதியத் திட்டப்பணிப்பாளர் கே.மகேந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர். (ற-236)

### தொடர் சொற்பொழிவு

வடமராட்சி, மே.20

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் இடம்பெற்றுவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு 'சனாதன தர்மம்' என்ற தலைப்பில் எட்டாம் அங்கத் தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

இந்தச் சொற்பொழிவை இளைப்பாறிய அதிபர் ரி.ரி.சண்முகநாதன் நிகழ்த்துவார். (ற-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் குற்றத்தில் ஈடுபடவில்லை என்றால் இலங்கை அரசு அதனை நிரூபிக்க வேண்டும்

இலங்கை அரசு போர்க்குற்றத்தில் ஈடுபடவில்லையென்றால் அதனை நிரூபிக்கவேண்டும் என்று கோரப்பட்டது. இதற்காக சர்வதேச விசாரணை ஒன்றை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இந்தக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

வன்னியில் இறுதி யுத்தம் இடம்பெற்று இரண்டு வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டே இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் சமாதான செயலக பிரதானியுமான ரஜீவ விஜேசிங்க, அவுஸ்திரேலிய தமிழ்ச் சம்மேளனத்தின் எட்றியன் சின்னப்பு ஆகியோர் இதில் பங்கேற்றனர். இதன் போது ரஜீவ விஜேசிங்க,

இலங்கையில் போர்க்குற்றம் இடம்பெறவில்லை எனவும், வெளிநாடுகளில் வசிக்கும் சில தரப்பினர், தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்கு தவறு புரிந்தனர் என்பதை ஏற்றுக்கொள்ளும் காலம் தோன்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், இலங்கையில் தற்போது, கட்டடங்கள், கல்வித்துறை, சுகாதாரத்துறை மற்றும் உட்கட்டுமான பணிகள் முன்னேற்றப்படவேண்டியுள்ளதாக ரஜீவ விஜேசிங்க கூறினார்.

இதற்குப் பதிலளித்த சின்னப்பு இலங்கையில் இன்னும் அமைதி தோன்றவில்லை என்றும், தமிழ் மக்கள் இன்னமும் பயத்துடனும் சந்தேகத்துடனுமே வாழ்ந்துக்கொண்டிருப்பதாகவும் கூறினார்.

இலங்கை அரசு மேற்கொண்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நியாயம் நீதி கிடைக்க வேண்டும். இல்லையேல் அந்த நாட்டில் சமாதானத்தை எதிர்ப்பார்க்கமுடியாது என்று எட்றியன் சின்னப்பு சுட்டிக்காட்டினார்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில், நேற்றுமுன்தினம் புதன்கிழமை இலங்கை தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

வன்னி இறுதி யுத்தத்தின் போது, ஆளில்லா வானூர்தி மூலம் பெறப்பட்ட நேரடி காணொளிகள் தொடர்பான தகவல்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டிருந்தது.

இது தொடர்பில், ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான்கீ மூனின் பேச்சாளர் மார்டின் நெசக்கியிடம் நேற்றுமுன்தினம் கேள்வியெழுப்பப்பட்டது.

ஆளில்லா வானூர்தி மூலம் பெறப்பட்ட காணொளி காட்சிகளை, ஐக்கிய நாடுகள் செயலாளர் பான் கீ மூனின் தலைமையதிகாரி விஜய் நம்பியார் பார்ப்பதற்கு இலங்கை அரசு வழியேற்படுத்திக் கொடுத்தது.

விக்கிலீக்ஸின் இந்தத் தகவலை உண்மையானதா என்று ஊடகவியலாளர்கள் பேச்சாளர் நெசர்கியிடம் கேள்வி எழுப்பினர்.

போர்குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கை, இறுதிப்போரை மையமாக வைத்து வெளியிடப்பட்டது. இந்தநிலையில் விஜய் நம்பியார் பார்வையிட்ட காணொளிக் காட்சிகள் முக்கியமானவையாகும்.

அத்துடன் இறுதிப்போரின் பாதியில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதிநிதியுடன் தகவல் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையிலேயே விஜய் நம்பியார் இலங்கை அரசின் காணொளியை பார்வையிட்டதாக ஊடகவியலாளர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் மார்டின் நெசர்கி, விஜய் நம்பியாரின் கருத்தை பெற்ற பின்னர் தாம் அதனை ஊடகங்களுக்கு தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

(தமிழ்வின்)

## கிபிர் விமானங்களுக்குப் பிரியா விடை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் 1996 ஆம் ஆண்டு முதல் முக்கிய பங்கு வகித்த கிபிர் போர் விமானங்களை பயன்படுத்துவதை கைவிடுவதற்கு விமானப்படை தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

விமானப்படையின் வைர விழா நிகழ்வுக்கான ஒத்திகையில் ஈடுபட்டிருந்த இரண்டு கிபிர் போர் விமானங்கள் கடந்த மார்ச் 1ஆம் திகதி ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்து தொடர்பான விசாரணை அறிக்கை விமானப் படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் ஹர்ச அபேவிக்கிரமவிடம் கையளிக்கப்படவுள்ளது.


இதுதொடர்பாக விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் அன்ரூவிஜேசூரிய தெரிவிக்கையில், 2009 மே மாதம் போர் முடிவுற்றதன் பின்னர் விமானப்படையின் சேவையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

பல விதத்திலும் பங்கு வகித்த கிபிர் விமானங்களின் தேவை குறைந்து விட்டது. போருக்குப் பிந்திய சூழலுக்குத் தேவைப்படாத விமானங்கள் படிப்படியாகச் சேவையில் இருந்து அகற்றப்படும்.

கடல்ரோந்து, கண்காணிப்பு, மற்றும் உள்நாட்டு போக்குவரத்து போன்ற இன்றைய தேவைக்கு ஏற்ற விமானங்களையே விமானப்படை தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்தவுள்ளது. விமானங்களின் சேவை தொடர்பான முழுமையானதொரு மீளாய்வு மேற் கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

1996ஆம் ஆண்டு முதல் விமானப்படையில் 6 விமானங்களுடன் கிபிர் விமானங்களின் அணி உருவாக்கப்பட்டது. பின்னர் மேலும் 9 கிபிர் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இந்த கிபிர் விமானங்கள் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரின்போது 2800 மணிநேரம் வான்பறப்பில் தாக்குதலில் ஈடுபட்டு 3500 தொன் குண்டுகளை வீசியுள்ளன என விமானப் படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (தமிழ் ஈ.என்.என்.) (த-10)



கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அடங்கிய குழுவினர் நேற்று அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடியபோது.

இணையச் செய்திகள்

## போர் முடிவு குறித்து சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துகள்

இலங்கையில் போர் முடிவடைந்து இரண்டு வருடங்களாகியுள்ளன. இந்தநிலையில் இலங்கையின் பெரும்பாலான மக்கள் இனிமேல் யுத்தம் இல்லை என்ற எண்ணப்பாட்டை கொண் டுள்ளனர். எனினும் தமிழர்களின் பல குடும்பங்கள் இன்னும் காணாமல் போன தமது உறவு களின் வருகைக்காக காத்திருப் பதாகச் சர்வதேச செய்திச்சேவை ஒன்று தெரிவித்துள்ளது.

போரின் காரணமாக பெரும்பாலான தமிழ் பெற்றோர் தமது பிள்ளைகளை இழந்துள்ளனர். பலர் தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமாலேயே உள்ளனர்.

இந்தநிலையில் காணாமல் போனோர் தொடர்பிலான இந்தப்பிரச்சினை பெரும் பிரச்சினையாக உள்ளது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தெரிவித்துள்ளார்.

இதேவேளை போர்க்குற்றம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூனின் நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கையை அடுத்து இலங்கையில் இருவேறுப்பட்ட கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சிங்கள மக்கள் இந்த அறிக்கையை எதிர்க்கின்றனர். 30 வருட போரை தாம் கஷ்டப்பட்டு முடிவுக்கு கொண்டு வந்ததாக அவர்கள் எண்ணுகின்றனர்.

எனினும் இந்தப்போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பொது மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்ட நிலையில் நாட்டில் சமாதானம் என்பது இன்னும் கானல நீராகவே உள்ளதாக தமிழர்கள் கூறுவதாக சர்வதேச செய்தி சேவை குறிப்பிட்டுள்ளது.

(புதினப் பலகை) (த-10)

## இலங்கை - நோர்வே இடையே மீண்டும் இராஜதந்திர மோதல்

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தப்பிச் செல்ல கொழும்பில் உள்ள நோர்வே தூதரக அதிகாரிகள் உதவியதாக வெளியான செய்தியை அடுத்து நோர்வேக்கும் இலங்கைக்கும் இடையில் மீண்டும் இராஜதந்திர மோதல் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்த 12 பேருக்கு நோர்வே அடைக்கலம் வழங்கியதாக 'அப்ரென் போஸ்ரன்' நாளேட்டில் செய்தி வெளியாகியிருந்தது.

இது குறித்து கருத்து வெளியிட்ட நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், ஆபத்தில் உள்ளவர்களுக்கு அடைக்கலம் வழங்குவது நோர்வேயின் நீண்டகாலப் பாரம்பரியம் என்று கூறியிருந்தார்.

இது இலங்கைக்கு கடும் அதிர்ச்சியையும் எரிச்சலையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த திங்களன்று வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்ட கொழும்பிலுள்ள நோர்வே தூதுவர் ஹில்டே ஹரால்ட்ஸ்ரட் அம்மையாரிடம் இதுதொடர்பாக இலங்கை தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரம் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர மோதலாக மீண்டும் உருவெடுத்துள்ளது.

அதேவேளை மேலும் 25 பேர் இலங்கையில் தமக்கு பாதுகாப்பு இல்லை என்று, அடைக்கலம் வழங்குமாறு நோர்வேயிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அந்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

(த-10)

## புலிகளின் அரசியல் பிரிவு பலமாக இயங்கி வருகிறது

விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டாலும் அதன் அரசியல் பிரிவு பலமாக இயங்குவதாக ஏ.எஃப். பி. செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் படையியல் ரீதியாக யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் தனித் தமிழீழம் என்ற அவர்களின் கோரிக்கைக்கான ஆதரவு தென்னிந்தியாவிலும் (தமிழ் நாடு) வெளிநாடுகளிலும் இன்னும் பலமாகவே இருப்பதாக உலகின் முன்னணி செய்திச் சேவைகளுள் ஒன்றாகிய ஏ. எஃப்.பி செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இருந்து விடுதலைப் புலிகள் பற்றிய புத்தகங்கள் மற்றும் சில பரப்புரைப் பொருள்கள் கொழும்புத் துறைமுகம் ஊடாக கனடாவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் அவை கொழும்பிலுள்ள சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்ட செய்தியின் போதே ஏ.எஃப்.பி. செய்திச் சேவை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அத்துடன் அவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள பிரசுரங்களை தமிழ்நாட்டில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட முகவரி, கனடாவில் பெறுநரின் முகவரி என்பவற்றைஅடிப்படையாகக்கொண்டு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பிரஸ்தாப செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

(தமிழ்வின்) (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னி இறுதி யுத்தத்தின் போது உயிர் நீத்த தமிழ் மக்களுக்காக மட்டக்களப்பு, காரைதீவு மகா விஷ்ணு ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நேற்றுக் காலை நடைபெற்றன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தர் செல்லையா இராசையா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிகளவு மக்கள் கலந்துகொண்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (த-30)

# ஐ.நா. தூதுவராக சவேந்திர சில்வா

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியூயோர்க்கில் ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

கடந்த மே 05ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நா அதிகாரிகளுடன் தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கிலேயே அவருக்கு இந்தப் பதவிஉயர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். ஐ.நாவுக்கான பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகவே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# கிழக்கில் சமாதானத்தைப் பாதுகாப்பது அனைத்து மக்களதும் பொறுப்பாகும்

## பிள்ளையான் குழுவினருடனான சந்திப்பின்போது ஜனாதிபதி புத்திமதி

கொழும்பு, மே 20

கிழக்கு மாகாணத்தில் சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டியது அனைத்து மக்களினதும் பொறுப்பாகும். பொலிஸார் தமது கடமைகளை சட்டபூர்வமாக நிறைவேற்றுவதற்கு அந்த மாகாணத்தில் உள்ள அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

அலரிமாளிகையில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிப் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அப்பொழுதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சம்பவங்களுடன் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரிமாளிகையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், அவரின் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் ஆகியோருடன் இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் கருத்துத் தெரிவித்தன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கையில், சோதனையிடல், கைது செய்தல் ஆகியவை இடம்பெறுகின்றபோது சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவித்தார்.

அண்மையில் நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக அறிக்கை ஒன்றைப் பெற்றுத் தரும்படியும், இனிமேல் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாத வகையில் பொலிஸ்மா அதிபரினால் இணைப்பு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை தயாரிக்கவேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், சோதனையிடும் நடவடிக்கைகளின் போது முதலமைச்சர் பதவிக்குரிய கௌரவத்துடன் செயலாற்றும்படி பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்த ஜனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளர் கட்சியாக நட்புறவுடன் செயலாற்றும்படி ஆலோசனை வழங்கினார்.

தற்போது சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ள மாகாணசபை உறுப்பினர் மற்றும் ஏனையோர் தொடர்பில் விசாரணையை துரிதப்படுத்துவதாக பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய இங்கு தெரிவித்தார்.

எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக நட்புறவுடன் கிழக்கு மாகாண சபையிலும் உள்ளூராட்சி சபைகளிலும் செயலாற்றுவதற்கு இந்தச் சந்திப்பின்போது தீர்மானிக்கப்பட்டது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய ஆகியோரும் கலந்துகொண்டனர். (த-[illegible])

மரண அறிவித்தல்

பொன்னார் திருமேனி



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட பொன்னார் திருமேனி கடந்த (18.05.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னார் -செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவகுரு, அரியகுட்டி, கிருஸ்ணர், பழனி, சின்னையா, கதிரமலை, அன்னம்மா, தங்கம்மா ஆகியோரின் சகோதரனும் யோகராசா (சுவிஸ்), காலஞ்சென்ற கிட்லர் மற்றும் விஜயா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலைமதி (சுவிஸ்), ஞானச்சந்திரன் (சவுதிஅரேபியா) ஆகியோரின் மாமனும் டிலக்சிகா, டிலக்சனா, டிலக்சுமிகா (சுவிஸ்), பகீரதி (பொலிஸ் உத்தியோகத்தர், வவுனியா), கஜனி (மாணவி - 2011 கலைப் பிரிவு அச்சுவேலி மத்திய கல்லூரி), மயூரதாசன் (மாணவன், 2012 வர்த்தகப் பிரிவு, அச்சுவேலி மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2011) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்வை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லை றோட்.
அச்சுவேலி,

தகவல்:
குடும்பத்தினர்.

# சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்பிக்க இலங்கைக்கு இந்திய அரசு ஆலோசனை

போர்க்குற்றங்கள் தொடர் பாக சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்பிக் கொள்வதற்கு இலங்கை அரசு உடனடியாக உள்ளக நடவடிக்கைகளை மேற்கொள்வதே ஒரே வழி என்று இந்தியா ஆலோசனை கூறியுள்ளது.

புதுடில்லி அரசு வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'ஹிந்து' நாளேடு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.




பெற்றோலில் இயங்குவது

சகல மரங்களையும் இலகுவாக துண்டாக்குவதற்கு பயன்படும் வாள்

★ போலிகளை வாங்கி ஏமாற வேண்டாம்

ஆர்கி என்ரப்பிறைசஸ்

150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (48)

கடந்த செவ்வாயன்று புதுடில்லியில் இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர உயர்மட்டங்களுடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், நடத்திய பேச்சுக்களின் போதே இந்தியாவின் இந்த ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் அறிக்கையில் இலங்கை மீது முன்வைக்கப்பட்டுள்ள போர்க்குற்றசாட்டுகள் தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது. நாம் அவர்களுக்குக் கூறியுள்ள செய்தி- உள்ளக ரீதியான நடவடிக்கைகளை எடுங்கள் என்பதே. அதற்கு இந்தியா உதவும்.

போர் முடிவுக்கு வந்து இரண்டு ஆண்டுகளாகின்ற நிலையில் அரசியல் நல்லிணக்கம் உள்ளிட்ட பல கவலைகள் இந்தியாவுக்கு உள்ளன. அவர்கள் உள்ளக ரீதியாக நடவடிக்கைளை எடுக்கத் தவறினால், வேறு இடங்களில் இருந்து அழுத்தங்கள் வரும் என்று இந்திய அரசு வட்டாரம் ஒன்று கூறியுள்ளது. அரசியல் ரீதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதைத் துரிதப்படுத்துமாறும் இந்தியத் தலைவர்கள் இலங்கையிடம் கேட்டுள்ளனர்.

13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு ஒன்றை இந்தியா வலியுறுத்தியுள்ளது. அத்துடன் போரின் பின்னர் காணாமற்போனவர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கும் படியும், அவர்களின் மரணத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் இலங்கைக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. (த)

Quick Learning Course

Spoken English with Grammar

Duration
1 Month
Rs. 3000.00

உரையாடட் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special

23-05-2011
Batch 16 : 09.00 AM - 12.00 PM
Batch 17 : 02.00 PM - 05.00 PM

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

பகிரங்க ஏலவிற்பனை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் பாவனையில் இருந்த தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, சலவைஇயந்திரம், அலுமாரி ஏனைய பொருள்களுக்கான பகிரங்க ஏலவிற்பனை 22.05.2011 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணிக்கு (73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்) நடைபெறும். ஏலவிற்பனைக்கான பொருள்களை 21.05.2011 அன்று செஞ்சிலுவைச் சங்க வளாகத்தினுள் முற்பகல் 10 மணி முதல் மாலை 05 மணி வரை பார்வையிடலாம்.

கௌரவ செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை,
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (பி/093)

நீங்களும் தகவல்தொழில்நுட்பு, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.

International Passport- in Education

A/L ? Pass / Fail

CIMA-UK | Engineering-USA | BIT University of Colombo | Multimedia Adobe



SMS your name & course to 772395895 & Get Schol.

Government Scholarship.

USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree

Closing Date 21.05.2011

MCS
Supported By UNDP/JRRP

புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road, Campus Junction Jaffna.

Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL

யூன் 4ஆம் திகதி நடைபெறவுள்ள S.L.E.A.S.விசேட இறுதிக் கருத்தரங்குகள்

காலம் : 22/05/2011 (தொடக்கம் நடைபெறும்)
நேரம் : மாலை 05 மணி-08 மணிவரை

பொது உளச்சார்பு, கிரகித்தல் விடை ஆய்வு மாதிரி வினாத்தாள்கள் மீட்டல்

உயர் கலைக் கல்லூரி

அல்லாரை வீதி, மீசாலை. தொடர்பு : 0775703813

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org